# தமிழக ஒழுகு
# என்ற மக்கட்சட்டம்

(முதலாவது ஒழுக்க வழக்கப்பாகம்)




பதிப்பாசிரியர்

முதுமுனைவர் இரா. இளங்குமரன்



பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 024.

பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு
நூலக நூல்கள்
நூற்கொடை : பேராசிரியர் இரா. வேலம்மாள்
பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

# தமிழக ஒழுகு

என்ற

# மக்கட் சட்டம்

## (முதலாவது ஒழுக்க வழக்கப்பாகம்)

பதிப்பாசிரியர்

**முதுமுனைவர் இரா. இளங்குமரன்**

**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024.**

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | தமிழக ஒழுகு என்ற மக்கட் சட்டம் |
| நூற் பொருள் | : | வாழ்வியல் |
| பதிப்பாசிரியர் | : | முதுமுனைவர் இரா. இளங்குமரன் |
| உரிமை | : | பாரதிதாசன் பல்கலைக்கழகம் |
| வெளியீடு | : | பாரதிதாசன் பல்கலைக்கழகம்<br>பல்கலைப் பேரூர்<br>திருச்சிராப்பள்ளி - 620 024 |
| முதற் பதிப்பு | : | 1923 |
| மறுபதிப்பு | : | 2010 |
| பக்கங்கள் | : | xxvi + 142 = 168 |
| நூல் அளவு | : | டெம்மி 1/8 |
| எழுத்து | : | 11 புள்ளி |
| படிகள் | : | 500 |
| அச்சுத் தாள் | : | என்.எஸ். மேப்லித்தோ |
| **விலை** | : | **ரூ. 105.00** |

அச்சிட்டோர் : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
39, மில்லர்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
✆ : (044) 26401807 email : sabanayagamprinters@gmail.com

**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024, தமிழ்நாடு

**முனைவர் மு. பொன்னவைக்கோ**

துணைவேந்தர்


# அணிந்துரை

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்''

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க அமைந்த நூல் ''தமிழக ஒழுகு என்ற மக்கட் சட்டம்'' ஆகும்.

குடும்பம் - அரசு, தந்தை - அரசன், தாய் - அமைச்சர், மக்கள் - குடிகள் என்றும் ஒரு குடும்பம் சிறந்திருந்தால்தான் நாடு நலமுடன் இருக்கும் என்றும் எடுத்துக்காட்டியுள்ளது.

நூலின் தொடக்கம், 'முதலாவது ஒழுக்க வழக்கப் பாகம்' என்றும் இறுதியில்

''வகுத்தது ஒழுக்க வழக்கப் பாகம்
வழக்குத் தீர்ப்பினி வகுப்பாம்''

என்றும் வாழ்வியல் ஒழுக்கங்களையே வலியுறுத்தியுள்ளது.

செறிவுடையது; நிறுத்திப் பிரித்துப் படித்தால் அனைவருக்கும் புரியும்படியாக உள்ள இந்நூலை எழுதியவர் யாரென்று தெரியவில்லை.

தமிழக வொழுகெனு மக்கட் சட்ட
மிதுமு வாயிரத் தெண்ணூ றடிகளை
யிருபத் தொருபாவி னேற்றெழுந் ததுவே
வகுத்த தொழுக்க வழக்கப் பாகம்

வழக்குத் தீர்ப்பினி வகுப்பாம்
சிவாருட சித்தன் செய்ததிது வாழ்கவே

இவ்வரிகள் நூலின் அறிமுகம் போல் உள்ளன.

கி.பி. 1923-இல் முதன்முதலில் விருதை சிவஞான யோகி யால் அனுப்பப்பெற்று மிகுந்த பொருள் நெருக்கடிகளுக் கிடையில் திரு. தி.ம. சண்முகம் பிள்ளை அச்சிட்டு, தமிழ் இலக்கிய உலகிற்கு ஓர் அரிய நூலாகத் தந்துள்ளார் என்றால் மிகையாகாது.

நூலின் கருத்துக்களும் தலைப்புகளும் திருக்குறளுடன் பல்வேறு இடங்களில் ஒத்துள்ளன. ஒரு சில இடங்களில் திருக்குறளை அப்படியே எடுத்து ஆசிரியர் நூலில் கையாண் டுள்ளார். ‘மறுமணப்புதுமை’ என்ற தலைப்பில்

‘‘எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு’’

என்ற குறள் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது.

குப்பைக் குவியலாய் ஈரப் பதனுடையதாய்க் கூட்டித் தள்ளும் நிலையில் இருந்த இந்நூலை மீட்டெடுத்து முதுமுனைவர் இரா. இளங்குமரன் அவர்கள் நூலாக்கம் செய்ததற்கு இலக்கிய உலகம் அவருக்கு என்றும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளது.

இந்த ஆண்டு (2010) நம் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ‘அருட்சுனைஞர்’ என்ற பட்டயப் படிப்பினைத் தொடங்கி யுள்ளது. இதனை அறிந்த முதுமுனைவர் இரா. இளங்குமரன் அவர்கள் தமிழக ஒழுகு எனும் மக்கட்சட்டம் அழிந்துவிடாமல் மறுபதிப்பு செய்ய வேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார்.

எண்பது ஆண்டுகளுக்குமுன் பதிப்பிக்கப்பட்ட இத்தகு அரிய நூலைத் தற்போது நான் துணைவேந்தராக உள்ள கால கட்டத்தில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் வெளியிடுவதைப் பெருமையாகக் கருதுகின்றேன்.

இந்நூலில் முதுமுனைவர் இரா. இளங்குமரன் பல்வேறு கோணங்களில் அணுகி நுணுகி ஆய்வுரை வழங்கியுள்ளார். அவர்களுக்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

**(மு. பொன்னவைக்கோ)**

சிவம்

# முதற் பதிப்பாசிரியர் முகவுரை

கோவிற்பட்டி, பக்திவிளைகழகத்துத்தலைவரும், தமிழ்ப் பிரமசூத்திர ஆசிரியரும், தமிழ்ச்சித்தவைத்திய சங்கத்து முதல்வரும், தமிழ் வைத்தியப் பத்திராதிபரும், தென்மொழி வடமொழி யென்னும் இருமுதன்மொழி வல்லாரும், ஆங்கில முதலிய பிறபன்மொழியறிஞரும், தமிழ்ச் சைவப்பெருஞ் சொற்பொழி கொண்டலுமாகிய மறைத்திருவன், விருதை சிவஞானயோகி களால் ''தமிழக ஒழுகு என்ற மக்கட் சட்டம்'' என்னும் பெயரில் தொன்னூல் எனக்கு அனுப்பப்பட்டு வந்தது. அத்துடன் அவர் களுக்குத் தமிழ்ச்சித்தவைத்திய சங்கத்தின் இரண்டாவது பெருநாடு சென்னையிற்கூட்டி நடாத்தவேண்டிய பொறுப்பு மிகுந்திருப்பதாயும், தமிழகவொழுகை விரைவில் அச்சிற்பதித்து வெளிப்படுத்த வேண்டியதாகிய இன்றியமையாத பொதுநல ஊழியத்தை யென்பாற் சுமத்தியிருப்பதாயும் ஒரு கட்டளையும் அவர்கள் எனக்குத் தந்துளார்கள்.

யானோவணிகப்பொறுப்புப்பெரிதுமுடையேன். அத்துடன் கொழும்பு விவேகாநந்த சபை ஆதரவில் ஞாயிறு தொறும் சிவனடியார் கதாப்பிரசங்கம் பக்கவாத்தியத்துடன் 6 யாண்டுகளாக இடையறாது நடாத்திவரும் பொறுப்பும் யெனக்குக் கடமையாக அமைந்திருக்கிறது. அதுவுமன்றி யிடையிடையே கோவிலிலும் பெருஞ்செல்வரது கலியாண வீடுகளிலும், அன்பரது பஜனைமடம், திருவிழாத்தேவாரக்கோஷ்டிகளிலும், புதுக்கணக்குப் போடும் பெருவணிகரது கடைகளிலும் கதை நடாத்தற்கும் பாடுதற்கும் அடிக்கடி யென்னை யழைத்துக்கொண்டு போவார்கள். பிறசபை களுக்குப் பிரசங்கத்துக்கும், தேவாரம் பாடுதற்கும் என்னை வரும்படிவேண்டிக்கொள்வதுமுண்டு. இத்தனை பொறுப்புடைய எனக்கு யாண்டும் பொதுநலவுழைப்பே பெருந்தவமெனக் கொண்டாடும் நம் யோகிகள்தந்த கட்டளை மறுக்கத்தகாததா யிருப்பினும், நேரமின்மையை நோக்கி நான் சிறிதுகவலுற்றேன்.

ஆயினும் அவர்கள் கட்டளையை மறுத்தற்கு என் மனம் ஒத்து வரவில்லை. இந்நிலையில் அந்நூலை நான் படித்துப்பார்க்கத் தொடங்கினேன். அதிற் சொல்லிவரும் எங்கள் தமிழகத்துப் பண்டை ஒழுக்கத்தின் அருமைகளைப் பார்த்துவருங்கால் தன்னிகரில்லாத் தலைவனது பிரிவு பொறுக்கலாற்றாத, தன்னிகரில்லாத் தலைவியைப்போல ஒரோ விடத்துச் சீற்றங் கொள்வேன். ஒரோவிடத்து அழுவேன். ஒரோவிடத்துப்புலம்புவேன். ஒரோவிடத்து அறிவயர்வேன். ஒரோவிடத்து மறைந்த வொழுக்க மீண்டு வருதலை யெதிர்பார்ப்பேன். இத்தகைய நிலைமை கண்ட வெனது அரும் பெருந்தோழர் இருவர் என்னை நோக்கி நீங்கள் கண்டு திளைக்கும் அற்புதத்தை எங்களுக்கும் படித்துக் காட்டுதல் வேண்டும் எனக் கேட்டார்கள். ஆறுநாள்வரை சி.வ. கிட்டங்கியில் வைத்து முறையே முழுவதும் படித்துப் பார்த்து வந்தோம். கேட்டுவந்த யாவரும் இழந்த அருமைமிக்க பொருள் எளிது கைக்கு வந்தாற்போல் இன்பந்தலை சிறந்தாராகி இந்நூலை யச்சிட்டு வெளிப்படுத்துதற்கு வேண்டு பொருளுதவி செய்வதாகக் கூறினர். ஒருவரே உதவி செய்யக் கூடுமானாலும் இந்நல்லறப் பயன் அன்பரனைவருக்கும் பங்காயிருக்கட்டு மென்று அவரவர் கட்குத் தோன்றிய அளவில் பொருளுதவி செய்தார்கள். அது கைகூடி வரவே இம்முதுநூலை வெளிப்படுத்தும் பேறம் எனக்குக் கிடைக்குந் தவமிருந்தமை என்னை மிக மகிழ்விப்பதாயிற்று.

பொருள் வரவைப் பொருள் தந்தாரது பெயர் வரிசையிற் கண்டு கொள்க. பொருள் தந்தவர்களுக்கு ரூபாய்க்கு ஒரு புத்தகவீதங் கொடுத்து விட்டேன். இச்சமையத்தில் தமிழகத்துக்கு இன்றியமையாத சிறந்த மெய்கண்டான் என்னுந் திங்கட்புதினத்தாள் ஆதரிப்பாரின்றியும் 200 நேயர்களுக்கு மேல் இலங்கைவாசிகள் பணம் அனுப்பிக் கொடுக்காதது பற்றியும் சில வி.பி.பி. திரும்பி வந்துவிட்டமை கொண்டும் ஊக்கங் குன்றிச் சிறிது தளர்நிலையுறுவதைக் கண்டு அதன்பால் அன்புமிக்குள்ள நான் அதன் முன்னேற்றத்திற்காக மிச்சமிருந்த புத்தகங்கள் அத்தனையும் கைமாறு கருதாது கொடுத்து விட்டேன். மேல் தமிழகவொழுகு என்ற மக்கட் சட்டம் என்னும் இப்புத்தகத்தை அச்சிடுதற்குரிய ரிஜிஸ்டருரிமையும் மெய்கண்டான் ஆசிரியரும், எனது அன்பிற்குரியவருமாகிய பேட்டை த. ஆறுமுகநயினார் பிள்ளையவர்களே அடைந்துகொள்ளும்படி

மெய்கண்டானை விடாது நடாத்திவரவேண்டிக் கொடுத்துவிட்டேன். தமிழகவொழுகை அச்சிட்டு வெளிப்படுத்தியதன் பயனாக எங்கள் 'மெய்கண்டா'னது தளர்வு தீர்க்குமோர் பேரறமும் எனக்குக் கைவருவதாயிற்று.

நம்யோகிகள் முதலாம் பாகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தும் பேரறத்தை யெதிர்பாராது எனக்குதவினமை யாண்டும் மறத்தற் பாற்றன்று, இரண்டாம் பாகத்தையும் வெளிப்படுத்துந்தம் கடமையைக் கூடிய விரைவிற்செய்ய வேண்டுமென்று நான் அவர் களை அன்புடன் வேண்டிக்கொள்கிறேன். தமிழக ஒழுகுஉயர் குடிப்பிறந்த அறிவுடைப்பெண்மக்களும், ஆண்மக்களும், படிக்க வேண்டிய ஒரு நல்லொழுக்க நூலென்பது மெய், மெய், மெய்.

*தி.ம. செண்பகம் பிள்ளை*

சைவகதாப்பிரசங்கசிகாமணி

வத்திராயிருப்பு.

ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா.

## (முதற் பதிப்புக்குப்)
## பணவுதவி செய்த சைவத்திருவாளர்கள்

| | ரூ. | ச, |
|---|---|---|
| 1. உடன்குடி சைவப்பிரகாச வித்தியாசாலை வரவு | 40 | 00 |
| 2. ஷிச.க.ஆ. பரமசிவம்பிள்ளை அவர்கள் | 21 | 00 |
| 3. சி.வ. தையல்பாகம் பிள்ளையவர்கள் | 15 | 00 |
| 4. ரா. ம. ப.செந்திலாறுமுகம் பிள்ளை அவர்கள் | 15 | 00 |
| 5. சி.சு.வ. வயிரவநாத பிள்ளை அவர்கள் | 10 | 00 |
| 6. புரோக்கர் இசக்கியாபிள்ளை அவர்கள் | 11 | 00 |
| 7. சி.சு.வ. பரமசிவம் பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 8. அ.மு.ம. சுடலை முத்துப்பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 9. சி.த. சண்முக சுந்தரம்பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 10. ஆ.சு.இ. ஈச்சுரமூர்த்தியா பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 11. அ.சி.த. வீரவாகு பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 12. தெ. நா. பிரமநாயகம் பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 13. மீ.சி.வ. பிரமநாயகம் பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 14. ரா.ம. மகராச பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 15. வெ.ராம, மயிலப்ப பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 16. இ.க.ச.சண்முகம் பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 17. குலசை. அ.சோ. சொக்கலிங்கம்பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 18. சி.அ. கனகசபாபதி பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 19. மு.சு. சுந்தரம் பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 20. ச.அ. சட்டநாதபிள்ளை | 5 | 00 |
| 21. சி.சு.ஆ. வீரவாகு பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 22. ஆ.ச.சொ. சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் | 5 | 00 |
| 23. சி.வ.அ. கந்தப்பிள்ளை அவர்கள் | 3 | 00 |
| 24. அ.சி. சிவம்பிள்ளை அவர்கள் | 3 | 00 |
| 25. ந.சு.வே. வேலாயுதம்பிள்ளை அவர்கள் | 3 | 00 |
| 26. கருங்கடல் ச.க.ஆ. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் | 3 | 00 |
| 27. ரு.ச. லெட்சுமண பிள்ளை அவர்கள் | 3 | 00 |
| 28. L.மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் | 3 | 00 |
| 29. மு.சு.ச. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் | 3 | 00 |
| 30. சூ.செ. தாணுப்பிள்ளை அவர்கள் | 3 | 00 |
| 31. ச. அருணாசலம் பிள்ளை அவர்கள் | 2 | 00 |
| 32. ச.த.வீ. வீரக்குமாருப்பிள்ளை அவர்கள் | 2 | 00 |
| ஆக ரூ. | 219 | 00 |

# தமிழக ஒழுகு
# என்ற
# மக்கட் சட்டம்

## பதிப்பாசிரியர் எழுதிய ஆய்வுரை

### 1. தமிழக ஒழுகு - நூல் வரலாறு

இலக்கியமா இலக்கணமா புலமையாளர் வழக்கில் இருந்து மட்டும் தோன்றுவன அல்ல. அவ்வாறு தோன்றின் முழுமை யுடையன ஆகா.

புலமையர் வழக்கையும் பொதுமக்கள் வழக்கையும் தழுவிய இலக்கிய இலக்கணங்களே முழுமை பெற்றனவாம். ஆதலால், தொல்காப்பியப் பாயிரம்,

''வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலம்'' தொகுக்கப்பட்டதாகக் கூறியது.

இவ்விலக்கிய இலக்கணங்கள் தோற்றமுற்ற அடிப்படை, வாழ்வியற் கட்டு, வளர்ச்சி, சிறப்பு என்பவற்றைக் காலம் காலமாகக் காக்க வேண்டும் என்பதேயாம்.

ஒரு **பழக்கம்** விடாமல் தொடரின் நல்லதாக இருப்பின் அதனைக் காணும் பிறரும், அப்பழக்கத்தை மேற்கொள்வர். அப்பழக்கம் பலராலும் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் பொழுது, அது **வழக்கமாகிவிடும்**. அவ்வழக்கம் மேலும் வலுவாகவும் வளமாகவும் அமையும்போது, **ஒழுக்கமாகிவிடும்**. அவ்வொழுக்கம் அறிவர் அறவர் தலைமையர் அருளர் ஆகியோரால் ஏற்கப்பட்டு **ஆணை மொழியாய் - சட்டமாய்** - அமைந்துவிடும்! அரசுச் சட்டம்போல் மக்கள் சட்டமாய் அமையும். அச்சட்டம், **எழுத்துருப் பெறின் வழிவழி வருவார்க்கு வைப்பு வளமாகத் திகழும்**. இவ்வகையில் கிளர்ந்த ஒருநூலே,

''**தமிழக வொழுகு என்ற மக்கட்சட்டம்**''

என்னும் நூலாம்.

இந்நூல் கி.பி. 1923-இல் முதன்முதலாக அச்சிடப்பட்டுள்ளது. **கொழும்பு மெய்கண்டான்** அச்சியந்திர சாலையில் அச்சாகி உள்ளது. அச்சிட்டவர்,

கொழும்பு விவேகானந்த சபை, சைவ கதாப் பிரசங்க சிகாமணி தி.ம. **செண்பகம் பிள்ளை** அவர்கள்,

தமிழகம் திருவில்லிபுத்தூர் வட்ட, **'வத்திராயிருப்பு'** என்னும் ஊரினர் என்பது அறிய வாய்க்கிறது.

**நூல்நிலை**

இதன் முகப்புக் குறிப்பு, **''மிகப்பழைய ஒழுக்க நூலாகிய இது கோயிற்பட்டி மறைத்திருவன் விருதை சிவஞானயோகி அவர்களால் அனுப்பித் தரப்பெற்று''** அச்சிட்டதாக உள்ளது.

நூல் இயற்றியவர் பெயர் இல்லை. **''மிகப் பழைய ஒழுக்கநூல்''** ''சிவஞான யோகி அவர்களால் **அனுப்பித் தரப் பெற்றது**'' என்பவற்றை அன்றி ஆசிரியர் பெயர் இல்லை.

1955-இல் கழகம் வெளியிட்ட **தமிழ்ப்புலவர் வரிசை** ஒன்பதாம் புத்தகத்தில், விருதை சிவஞான யோகிகள் வரலாறு இடம்பெற்றுள்ளது. அதில் அவர் **இயற்றிய நூல்கள்** என்னும் வரிசையில் 13-ஆம் நூல் **தமிழக வொழுக்கம் என்னும் மக்கட் சட்டம்**'' என்பது இடம் பெற்றுள்ளது.

**''வள்ளுவர் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்''** மூன்றாம் பகுதி, 1963-இல் வெளிவந்தது. அதில், 'சாமி விருதை சிவஞான யோகிகள்' வரலாறு உள்ளது. அதில், **''இவர் அச்சிட்டுள்ள தமிழக ஒழுகு என்ற மக்கட் சட்டம்''** என்ற நூல் என்றே குறிப்புள்ளது.

''தமிழக வொழுகெனு மக்கட் சட்ட
மிதுமூ வாயிரத் தெண்ணூ றடிகளை
யிருபத் தொருபாவி னேற்றெழுந்த ததுவே.
வகுத்த தொழுக்க வழக்கப் பாகம்
வழக்குத் தீர்ப்பினி வகுப்பாம்
**சிவாரூட சித்தன் செய்ததிது** வாழ்கவே''

என நூல் நிறைகிறது.

ஆசிரியர் **'சிவாரூட சித்தன்'** யார்?

1953-இல் அறிஞர் ந.சி. கந்தையா அவர்கள் தமிழ்ப் புலவர் அகராதி வெளியிட்டார். அதில் சிவஞான யோகிகள் விருதை (20-ஆம் நூ.ஆ) என்னும் பெயரில்,

''தமிழக ஒழுக்கை **4000 பாடல்களில் பாடினார்**'' என்று குறிப்பிடுகிறார்.

அவரியற்றிய **'இலக்கிய அகராதி'** வரிசையில், 'தமிழக ஒழுகு' இடம் பெறவில்லை.

நெல்லை விருதை கோயில்பட்டி ஆகிய பகுதிகளில் தொடர் புடைய **இ.மு. சுப்பிரமணிய பிள்ளை** அவர்கள் தமிழகவொழுகைப் படித்துள்ளார். அதனால்,

''தமிழக ஒழுகு'' என்ற மக்கட்சட்டம் என்ற நூலை ஆராய்வோம் எனத் தொடங்குகிறார் : இவரியற்றியது வள்ளுவர் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்!

''**தமிழக ஒழுகு** என்பது அகவற்பாவான் அமைந்த பெருநூல். இதில் 3800 அடிகள் உள. இதில் தமிழ்நாட்டு அரசுமுறை திருமண முறை, குடிகள் ஒழுகலாறு, இல்லறநிலை, தமிழ்நாட்டுக் கல்விநிலை, மறுமணமுறை முதலியனவெல்லாம் தெளிவான நடையில் விளக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் உடன்கட்டை ஏறுதலைப் பற்றிய பகுதியை மட்டும் கீழே தருகிறோம்'' என்று கூறி அப்பகுதியை (பதினெட்டடிகளை)க் காட்டுகிறார்.

நூலைப் படித்துச் சான்று காட்டியவர், **'தமிழக ஒழுகு', சிவஞான யோகிகள் இயற்றியதாகக் காட்டாமல்** அச்சிட்டுள்ளதாகக் குறித்துள்ளார். அச்சிட்டவர் **தி.ம. செண்பகம் பிள்ளை.** அவர் மிகப் பழைய ஒழுக்க நூலாகிய இது கோவிற்பட்டி மறைத்திருவன், விருதை சிவஞான யோகி அவர்களால் அனுப்பித் தரப் பெற்றுத் தாம் அச்சிட்டதாகக் கூறியதை முன்னரே குறித்துள்ளோம்.

மிகப் பழைய ஒழுக்க நூலா?

விருதை சிவஞானயோகி அவர்களால் அனுப்பித் தரப் பட்டதா? அவ் யோகிகளால் இயற்றப்பட்டதா?

என்னும் வினாக்களுக்கு மறுமொழி, **''சிவாரூட சித்தன் செய்தது இது''** என்னும் நூல் நிறைவுத் தொடரேயாம்!

ஆரூடம் என்பது என்ன?

சித்தன் என்பதன் பொருள் என்ன?

ஆரூடன் - **''ஞானத்திற்றேறியவன்''**

சித்தன் - **யோகி**

சிவாரூட சித்தராம் புனைபெயரில் **சிவஞானயோகிகளே இயற்றிய தமிழகப் பழமரபு பற்றிய புதிய நூல் இஃது என்பது வெளிப்படையாம்.**

'தமிழக ஒழுகு' தமிழ்நாட்டில் தமிழ்வீறு மிக்க புலமையர் ஒருவர் செய்த நூல், தமிழகப்பரப்பில் எங்கும் கிட்டப்பெற வில்லை. ஈழத்தில் அச்சிடப்பட்டது. கொழும்பிலுள்ள, திருநெல்வேலி சைவப் பெருஞ்செல்வரது பணவுதவியைக் கொண்டு கொழும்பு மெய்கண்டான் அச்சியந்திரசாலையில் அச்சிடப் பெற்றமையால், தமிழகத்தில் காணல் அரிதாயிற்று; அதனைப் பெற்றுக் காத்தவரும் அரியராயினர்.

யான் அறிந்த அளவில் இப்பொழுது அச்சிடப் பெறுதற்கு வாய்த்த ஒருபடி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராகவும், கழகம் வெளியிட்ட தொல்காப்பியப் பதிப்பாசிரி யராகவும், விபுலானந்த அடிகளாரால் **'கங்கையில் விட்ட ஏடு'** என்னும் விரிந்த கையறுநிலைப் பாடல் பெற்றவரும், தமிழே வாழ்வாகிய தூயதுறவரும், சோழவந்தான் பெரும்புலவர் **அரசஞ்சண்முகனார்** மாணவராய், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராய் விளங்கியவரும் ஆகிய **பேரா. கந்தசாமியார்** வரலாற்றை எழுத, நாற்பது ஆண்டுகளின் முன்னே அவர் பிறந்த கூமாப் பட்டிக்குச் சென்றபோது, குப்பைக் குவியலாய் ஈரப்பதனுடையதாய் கூட்டித் தள்ளும் நிலையில் கிடந்ததில் கிடைத்த நூல் இத்தமிழக ஒழுகு என்ற மக்கட்சட்ட நூலாம். அன்றியும் இந்நூலொடு கிடைத்ததோர் அரிய அறிக்கை **'திருவிடர் கழகம்'** என்னும் பெயரியதாம்! இவ்விரண்டும் வேறு எங்கும் கிடைக்கப் பெறாதவை.

*19.11.1908*-இல் **திருவிடர் கழகம்** என்னுமோர் அமைப்புத் தோன்றியது. அதனைத் தோற்றுவித்தவரும் அமைச்சரும் மறைத்திருவன் **விருதை சிவஞான யோகிகள்** ஆவர். இக்கழகம், குற்றாலத்தின்கண் கூட்டப்பட்ட அவையில் தோற்றுவிக்கப்பட்ட தாகும்.

கழகத் தலைவர் திருவன் சீர்காழி கே. சிதம்பரமுதலியார். துணையமைச்சர்கள் மூவர், கழக உறுப்பினர்கள் ஐம்பத்து ஒன்பதின்மர். அவருள் ஒருவர் மறைத்திருவன் மறைமலையடிகள்.

அவையின் நோக்கம் கட்டளைகள் அனைத்தும் தூயதமிழில் அச்சிட்ட சிறு சுவடி அது.

நோக்கங்கள் ஆறு, கட்டளைகள் பதினைந்து அச்சிடப் பட்டுள. சுவாமி விருதை சிவஞான யோகிகள் **நிலையுற்ற அமைச்சர்.** இக்கழகம் தோன்றிய காலம் *19.11.1908.*

அச்சுவடியில் உள்ள குறிப்புகள்

1. திருவிடரின் பழைய வரலாறுகளை ஆராய்தல் என்பது திருவிட நாட்டின் முற்கால பிற்கால நிலைமைகள் யாவை? திருவிடர் என்பவர் யாவர்? திருவிடர் தோற்றம் யாது? அன்னவர் அறிவு கைத்தொழில் செட்டு கடற்செலவு, உரிமை, மொழி, நூல், தெய்வக்கோள், மணம், தூய்மை, உணவு, ஒழுக்கம், வழக்கம், அரசியல், அவைக்களம், சீர்த்தேற்றம் முதலியவை எத்தகையன என ஆய்தல்.

2. திருவிடமொழியின் உண்மை வரலாறுகளை ஆராய்தல் என்பது, திருவிட மொழியாகிய தமிழின் தோற்றம் யாது? அதன் இயல்பு யாது? அது இயல்மொழியா செயல் மொழியா? அதன் வளர்ச்சி எவ்வாறு? அதினின்று தோன்றிய மொழிகள் எவை? அதிற்பிறமொழிகளின் கலப்புளதா? அவையாவை? அதன் எழுத்தின் (இலக்கண) அமைப்பு எத்தகைத்து? தமிழ்த் தொன்மை நூல்கள் யாவை? தமிழ் மொழியின் முதனிலைகள் (பகுதிகள்) எத்தகைத்தன? உலகிலுள்ள மொழிகள் அனைத்துக்கும் அல்லது ஒவ்வொரு சிறந்த மொழிகளுக்கும் தமிழுக்கும் என்ன ஒற்றுமைகள் அல்லது வேற்றுமைகள் உள்ளன? என்பது முதலியவற்றைப் பற்றி ஆய்தல் என்பவை.

**இக்குறிப்புகளைத் தாமே தலைக்கொண்டு கடமை செய்தார் யோகிகள்** என்பது அவர் இயற்றிய நூல்களாலும் அவர் கருணாமிர்த சாகரத்திற்கு வழங்கிய சிறப்புப் பாயிர - 250 அடியளவு - அகவலாலும் விளங்கும். அவரியற்றியதே ''**தமிழக ஒழுகு** என்ற மக்கட் சட்டம்'' என்னும் நூல் என்பதும் தெளிவாம்.

**மெம்பர்** என்னும் சொல்லைத் தமிழாக்கம் செய்ய முயன்று நிறைவு பெறாது இப்பொழுது 'மெம்பர்' என்றே எழுதுகிறேன். ''இன்னும் ஆற அமர யோசித்துப் பார்த்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொருமுறை சொல்கிறேன்'' என்கிறார் பாரதியார்.

ஆனால், **திருவிடர் கழக அறிக்கையில்**, தலைவர், துணைத் தலைவர், அமைச்சர், துணைஅமைச்சர், உறுப்பினர், பேரவை, பொருளாளர், ஆண்டறிக்கை, தீர்மானம், திருவன், மறைத்திருவன் முதலிய அரிய தமிழாட்சி கோலோச்சுகிறது.

21 அகவல்களால் ஆகிய இத்தமிழக ஒழுகு ஐந்தகவல்களில், நிற்குமே (4), வாழ்வரே (6), வழக்கமே (10), செய்வரே (11), வாழ்கவே (21) என்று கூவிளம் கருவிளம் ஆகிய சீர்களாய் ஏகாரம் கொண்டு முடிந்துள. சங்கநாள் தொட்டு, இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை அகவற்பா தேமா, புளிமாச்சீர்கள் ஏகாரம் பெற்றே முடிந்துள என்பதை நுண்ணோக்கு நோக்குவார் கண்டுகொள்ளாமல் தள்ள முடியாது. ஆதலால், பழைய வழக்குகளைப் பற்றிப் புதிதுயாக்கப்பட்ட நல்ல தமிழ்வள நூல் தமிழக ஒழுகாம்! சிவஞான யோகியார் இயற்றியமையாலும் சிவப்பணியே தவப்பணி என அவர் வாழ்ந்தமையாலும் தமிழ் மணம் சிவமணமாகவும் திகழ்கிறது எனல் அமையும்.

## 2. சிவஞான யோகிகள் வரலாறு

கொங்கு நாட்டு **அவிநாசியில் இராமசாமிப்பிள்ளை கிருட்டிணம்மாள்** என்னும் இணையர்க்கு 1840-ஆம் ஆண்டு இவர் திருமகனாகத் தோன்றினார். **சிவஞானப்** பெயரொடு விளங்கிய இவர், தம் தந்தையாரை மூன்றாம் அகவையிலும் தாயாரை ஐந்தாம் அகவையிலும் இழந்தார். இவர்க்கு வாய்த்த மாமன்மார்கள் இவரைப் பேணி வளர்த்தனர். தமிழ்க்கல்வி ஆங்கிலக்கல்வி இரண்டும் கற்றார்.

இவர் மாமன்மாருள் ஒருவர் உதகைக் குன்னூரிலும், மற்றொருவர் பல்லடத்திலும் இருந்தனர். முன்னவர் அரவணைப்பினால் **ஆங்கிலக் கல்வி** மேலும் சிறக்க வாய்ந்தது. பல்லடம் மாமனாரால் **அருளானந்த** அடிகள் என்னும் துறவர் உறவு வாய்த்தது.

தொழில் செய்ய அவாவிய சிவஞானம், **வெல்லிங்டன்** நகரை அடைந்தார். ஆங்கொரு பெருவணிக நிறுவனப் பணியில் அமர்ந்தார். அக்காலத்து அவ்வூரில் **சச்சிதானந்த** அடிகள் என்பார் தொடர்பு சிவஞானத்திற்கு உண்டாயிற்று. அவ்வடிகள் சித்த மருத்துவர்; ஓகப்பயிற்சி மிக்கார்! அவர் தொடர்பு, சிவஞானத் திற்கு அக்கலைகள் இரண்டையும் வழங்கியதுடன் **சிவஞான யோகிகள்** என்பதற்கு அடித்தளமும் ஆக்கிற்று.

''சித்தமுறை பல பயிற்றிப் பெரிய பட்சம் வைத்திருக்கும் குணக்குன்றே அருள் சச்சிதானந்த மருத்துவ தேவே'' என்று இவர் பாடுவதால், அடிகள் திறமும் அவரிடம் இவர் பெற்ற திறமும் விளங்கும்.

**சிவஞானம் 'யோகிகள்'** ஆனார்!

வணிகப் பணியை விடுத்தார். உடுமலைப்பேட்டை வட்டத்தைச் சார்ந்த **மடத்துக்குளம்** சென்றார். திருக்கோயில் தொண்டிலே அங்கே ஒன்றினார்! பூசகராய், ஓதுவாராய்க் கடன்பூண்டார். பின்னர்ப் **பழனியை** அடைந்தார். இவர் பழனியை அடைந்த போது **மாம்பழக் கவிச்சிங்க** நாவலர் புகழ்பெருகி நின்றார்! அவரை அடுத்துத் தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சி சிறக்கப் பெற்றார்.

பலப்பல திருக்கோயில்களை வழிபடும் ஆவலில் புறப்பட்ட யோகிகள், விருதுநகரைச் சேர்ந்தார்! அங்கே இவர் செய்த தொண்டும் நெடிய தங்குதலும் இவர்க்கு **விருதை சிவஞான யோகிகள்** என்னும் புகழ்ப் பெயரை நல்கின.

அவ்வூர்ச் சிவன்கோயில் பலவகைகளாலும் பழுதுபட்டுக் கிடந்தது. அதனைப் புதுப்பித்துப் பொலிவுறுத்தும் கடமையைத் தாமே அள்ளிப் போட்டுக் கொண்டார்!

அறம் செய்யப்புகுவார், பொதுப்பணி நாட்டம் உடையார் எவ்வாறு செயல்பட்டால் எடுத்த செயல் எளிதாய் எப்படிச் சிறக்க நிறைவேறும் என்பதை உலகம் அறிய வெளிப்படுத்தினார். அது, அக்கோயில் வழிபாட்டுக்கு வருவார் இல்லங்களிலெல்லாம் ஒவ்வொரு **மண்கலயம்** வைத்துவிடுவது. சமையல் செய்யப்போகும் போது, அக்கலயத்தில் **ஒரு பிடி அரிசி** அள்ளிப் போட்டுவிட்டு எஞ்சியதைச் சமைப்பது என்பது அத்திட்டம்! தாய்மார் உள்ளம், இத்தெய்வத் திருப்பணியை உவந்து ஏற்றுக் கடைப்பிடியாகக் கொண்டு செயலாற்றியது.

திங்களுக்கு ஒருமுறை அவ்வரிசியை எடுத்து விலையாக்கி அவ்விலைப்பொருளால் கோயில் திருப்பணியைச் செய்தார் யோகியார்! கோயில் உள்வேலை வெளிவேலை கோட்டை கோபுரம் என எழுந்தது! அத்திருப்பணி அவ்வூர்வாழ்மக்களுக்கு **அறப்பணி செய்முறையைச் சொல்லாமல் சொல்லிச் சுடர வைத்த உண்மையை எண்ணுவார் எண்ணமெல்லாம் பளிச்சிடும்!**

''வல்லான் வகுத்ததே வாய்க்கால்'' என்பதை நிறுவினார் யோகியார்.

திருப்பணி செய்தலில் ஈடுபாடுடைய செட்டி நாடு சென்றார் யோகிகள்! ஆங்கும் பணம் திரட்டினார் : அறப்பணியில் பயன் படுத்தினார். பின்னர் ஆங்கிருந்து எட்டையாபுரம் சென்றார்.

அங்கே **குருநாத சாத்திரியார்** என ஒரு **வடமொழிப் புலமையர்** விளங்கினார். அவரை அடுத்து வடமொழிப்பயிற்சி சிறக்கப் பெற்றார். பதஞ்சலி யோகசூத்திரம், வியாசர் பிரமசூத்திரம் ஆகியவற்றையும் அவற்றின் பேருரைகளையும் தெளிவாகக் கற்றார். அதனால், பிரமசூத்திரத்தைத் தமிழாக்கம் செய்து, வேத நெறியோடு சைவ நெறியும் விளங்க உரைவிளக்கமும் இயற்றினார். அங்கிருந்து கோயில்பட்டிக்குச் சென்றார். அங்கே **'பக்தி விளை கழகம்'** என ஒரு கழகத்தைத் தோற்றுவித்துத் தம் காலமெல்லாம் அங்கேயே இருந்து அரும்பணி செய்தார்.

மாநாடு சொற்பொழிவு நூல் அச்சீடு பொதுப்பணி என அரும்பணிபுரிந்த யோகிகள் 21.4.1920-இல் **''தமிழ்நாடு சித்த வைத்திய சங்கம்''** என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். அரசின் துணையொடு பல்வேறு நகர்களில் சித்தவைத்திய மாநாடு நடத்தினார். கண்காட்சிகள் அமைத்தார். இவர் **தொண்ணூற் றொன்பது** ஆண்டுகள் வாழ்ந்ததாக இ.மு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார். ஆனால் நாள் குறித்திலர் (கி.பி. *1840-1939*; திரு. *1871-1970*) என்ற குறிப்பே உள்ளது. **இவரியற்றிய நூல்கள் :**

1. செப்பறை வெண்பா
2. நெல்லை அந்தாதி மாலை
3. திருச்செந்தில் சிலேடை வெண்பா
4. பதஞ்சலி யோகசூத்திர மொழிபெயர்ப்பு
5. பிரமசூத்திர மொழிபெயர்ப்பு
6. தமிழ் மொழியும் சிவநெறியும்
7. தமிழர் தொன்மை
8. வேதாகம உண்மை
9. கீதாமிர்த மஞ்சரி
10. சிவஞான விளக்கம்

*11.* சுவேதாசுவதா உபநிடத மொழிபெயர்ப்பு

*12.* தமிழும் மருத்துவமும்

*13.* தமிழக ஒழுகு என்னும் மக்கட் சட்டம்

*14.* கோயில்பட்டிப் புராணம்

*15.* தேவோபாசனாதீபம்

முதலியன என்கிறார் **கருப்பக்கிளர் இராமசாமிப்புலவர்.**

உலகத்தில் முதன்முதலாக மக்கள் தோன்றிய இடம் தமிழகம். அதில் தோன்றிய மருத்துவம் தமிழ்மருத்துவம். ஆதலின் உலக மொழிகளுக்கும் மருத்துவங்களுக்கும் தாயாக விளங்குவன தமிழும் தமிழ்மருத்துவமுமாம் என்கிறது தமிழும் தமிழ்மருத்துவமும் என்னும் நூல்.

இக்காலத்தில் தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் தந்தையர்க்குப் பிறந்து தமிழ்மொழி பேசும் தமிழ் பலர்க்குத் தமிழ்மொழியிலும் தமிழ்நூல்களிலும் அபிமானம் குறைந்திருத்தல்போல உலகிற்சிறந்த முறைகளையுடையதும் தீராத நோயென்று பிற வைத்தியர்களால் கைவிடப்படும் நோய்களைத் தீர்ப்பதும் அவமிருத்துக்கள் வாராமல் தடுப்பதும் ஆயுளை விருத்தி செய்வதும் காயசித்தியைத் தருவதுமான மருத்துவ நூலிலும் அபிமானம் குறைந்திருக்கிறது'' என்கிறார் மாநாட்டுக் கண்காட்சி அறிக்கையில்.

இவர் சென்னைக்குச் சென்று சித்தவைத்திய சங்கம், மாநாடு எனப்பணிகள் செய்த காலத்தில், ஆங்கிருந்த சைவசித்தாந்த சண்டமாருதம் **சோமசுந்தர நாயகரிடம்** பழகி வேதாந்த சித்தாந்தத் திறங்கள் மேலும் பெற்றமையும் அறியவருகின்றது. இவர்தம் இசைப்புலமை **கருணாமிர்தசாகரத்திற்கு** இவர் வழங்கிய சிறப்புப் பாயிரத்தால் நன்கு விளங்கும். மேலும், குமரிக்கண்ட ஆய்வு, வேர்ச்சொல் ஆய்வு. தமிழே உலக முதல் மொழிக் கொள்கை என்பவற்றை யுடையவர் இவர் என்பதையும் விளக்கும். தமிழக ஒழுகில் இத்தடங்கள் மேலும் பளிச்சிடுதலை அதனைக் கற்பவர் தெளிவுற உணர்வர்! நல்ல தமிழ்த்துறவர் சிவஞான யோகிகள் என்னும் முடிபு எவர்க்கும் தோன்றும்! அதேபொழுதில் சீர்திருத்தச் செம்மலும் பெண்ணுரிமை பேணு பெரியரும் இவர் என்பவையும் விளங்கும்.

## 3. தமிழக ஒழுகு - நூல்நிலை

''முதலாவது ஒழுக்கவழக்கப்பாகம்'' எனநூல் முகப்பில் குறிப்புள்ளது. நூலிறுதியில்,

''வகுத்தது ஒழுக்கவழக்கப் பாகம்
வழக்குத் தீர்ப்பினி வகுப்பாம்''

என்றுள்ளது. வகுப்பாம் என்ற வழக்குத் தீர்ப்பு வகுக்கப் பட்டதா? வகுத்து அச்சிடப்படாது அகன்றதா தெரியவில்லை.

''அறவாழி அந்தணன் அம்மை அப்பன்
தலைநாள் உலகுக்குத் தந்த திருநெறிச்
சைவந் தழீஇய தமிழக ஒழுகிது''

என்பதால் இந்நூற் பொருள் தெளிவுறும்.

''நாட்டு வழக்குடன் ஏட்டு வழக்கையும்''

தொகுத்துக் கூறுவதாகக் காப்புக் கூறுகிறது.

''ஒழுக்கம் உடையவர் உயர்ந்த மக்கள்
இழுக்கப் பட்டோர் எளிய மாக்கள்''

''பல தொழில் உண்மையில் பலகுடிப் பிறப்புள''

''புரிதொழில் எல்லாம் பொதுவுல குக்கே''

''உறுப்பின்ஒன் றசைவறின் உடல்முடங் குதல்நேர்
ஒருதொழில் முடங்கின் உலகியங் காதே''

''எல்லாரும் உடன்பிறப் பென்றுறல் அறிவே''

''ஆலயம் மடங்கள் ஆசிரி யத்தவர்
அறச்சாலை அம்பலம் அவையுறைச் சாலை
கல்லூரி முன்னாக் கழறப் படுமெலாம்
அனைவருக் கும்பொது வாமென அறிக''

இவ்வாறு பொதுமை நலம் போற்றியே மக்கட் சட்டம் நடையிடுகிறது.

''முழுமுதல் பொதுவாதலால் அதனை அனைவரும் வணங்கத் தடை ஆகாது. தமிழ்மொழி வளர்ச்சி சைவ உணர்ச்சி ஆக்கல் சைவர்க்கு அகத்திய மாமே'' என்கிறது.

''எவர்க்கும் தெய்வம் இகழேல் எனுமறை
ஒக்கும்: அதனை உணர்ந்தோர் உயர்ந்தோர்''

என்பது பலப்பல சமயத்தர்க்கும் பொதுநோக்காக இருக்க வேண்டும்!

ஒவ்வொரு குடும்பமும் ஓர் அரசு; தந்தை அரசன்; தாய் அமைச்சர்; மக்கள் குடிகள்; ஊராள்பவர் கரையாளர்; நாடாள் வேந்தர் தலைவன் பாண்டியன்; அவன் துணை அரசர் இருவர்; மூவேந்தரும் மண்ணகம் காத்தனர். குடும்பத்தலைவன் போன்றவனே அரசன். அரசனுக்கு எத்தனை ஆண்மக்கள் இருப்பினும் தலைமகனுக்கே ஆளுரிமையாம். மகன் இல்லையேல் மகள் ஆள்உரிமை பெறுவாள். மகவே இல்லையேல் தத்தெடுத்தல் உண்டு.

ஆள்வோன் பெயர்ப் பொருளைக் காட்டிக் காட்சி மேடை யாக்குகிறார் ஆசிரியர். அறவர் துறவர் அந்தணர் அருளர் திருமடம் பற்றியுரைத்து மணமுறை பேசுகிறார். களவறம் கற்பறம், வடவர்மணமுறைகூறித் தமிழர் மணச் சடங்கை உரைக்கிறார். பிள்ளை வீட்டார்க்குச் செய்வது மொய்; பெண்வீட்டார்க்குச் செய்வது சுருள். மணச்சடங்கு கூறியவர் இல்லறச் சிறப்பை விரியக் கூறுகிறார், மெய்த்துறவர் பொய்த்துறவர் கண்டு தெளியக் கூறும் இவர் பெண்டிர் துறவும் ஏற்கிறார். அறுவகைப் பார்ப்பார் இவரெனக் கூறுகிறார்.

விலை, ஒற்றி, உடம்பிடி, நன்கொடை, அறனிலை, ஈடு, விடுதலை - என மக்கள் வழக்கில் உள்ள பொருளியல் முறைகளைத் தெளிவிக்கிறார்.

வடவர் நெறியால் வந்த மணச்சடங்கு மாற்றம் வாழ்வியல் முறைமாற்றம், ஒழுக்கக்கேடு என்பவற்றைக் கடிந்து

''மனுவறம் மக்களை வருணாச் சாரக்
கோடரி கொடுபல கூறுகள் செய்ததை''ச்

சொல்லிக் குமைகிறார்! தமிழும் சைவமும் போற்றல் தமிழரறம் என்கிறார்.

**நூல்நடை**

பழநாள் மரபில் செய்யுள்கள் எல்லாமும் யாப்பியல் அமைவே அமைவாய் அச்சிடப்பட்டன. அப்பயிற்சி அனைவர்க்கும் இல்லாமையால் எளிதாகக் கற்கும் வகையால் சொற்களைப்

பிரித்தும் உகரம் பிரித்தும் அடைப்புக்குறியிட்டும் பழம் பாடல் களை அச்சிடும் முறையும் உண்டாயிற்று. ஓரளவு பொருள் புரியினும் யாப்பியல் மரபு அறிய வாய்ப்பில்லா நிலையை அஃதேற்படுத்தியது.

இந்நிலையில், பழமரபுப்படி - யாப்பியல்படி - அச்சிட்டு அதன்கீழேயே அதனைச் சந்திபிரித்து அச்சிட்டு நூலாக்கும் முயற்சியும் எழுந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழக **இராமாயணப் பதிப்பு** அவ்வாறு வந்ததற்கு ஒருசான்று.

இந்நூல் எளிய ஓட்டம் உடையது; நடையும் ஆற்றொழுக் கானது. ஓரளவு பயிற்சி யுடையாரும் பொருள் புரியுமாறு நிறுத்திப் படித்தால் பிரிப்பதில் இடர் வாராது! தடை சற்றே உண்டானால், தள்ளிவிடாமல் சற்றே எண்ணி நிறுத்திச் சிலபக்கங்கள் படித்த அளவில் விரைந்து பிரித்தலும், பொருள் தடையின்றிப் புரிதலும் இயல்பாகிவிடும்.

நூல் நிறைவாகவரும் 21-ஆம் அகவல் **'ஒற்றுமைநயம்'** என்பதைச் சான்றாகப் பிரித்துக் காட்டப்படுகின்றது. இவ்வாய்வுப் பகுதியில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள அடிகள் எல்லாமும் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. இவையும் பிரிப்புக்குச் சான்றுகளாம்.

**ஒற்றுமை நயம்**

படைக்கும் தலைநாள் படைத்த மக்கள்,
அனைவரும் முழுமுதல் அருள்முத் தமிழ்மறை
ஓதவும் ஒழுகவும் உரித்துடை யவரே;
ஓரினத் தவர்எனும் உணர்வுடை யவராய்,
ஒருவருக்கு ஒருவர் உற்ற துணைவராய்,
மணபேதம் உணாப்பேதம் மாறிநீத்து இருப்பினும்,
சைவம் பேணத் தமிழை வளர்க்க
எல்லாக் குடியும் இயைந்துறல் அறிவே;
நாளும் உழைத்துஆக்கு நயம்பொது வாமே;
இன்னணம் ஒருப்பட்டு இருக்க விடாமல்,
பற்பல இனபேதம் பகுத்து,உயர்பு இழிபு
பேசிப் பிரித்தது, பிறர்கட்டு நூலே;
பிரிவு பலமுன் பிரித்தவர் ஆரென
ஆய்வாரேல், தமிழகத்தர் இலையெனல்

வெள்ளிடை மலைபோல் விளங்கு மிக்கோர்க்கே;
அப்பிரிவு இங்குஇயலாவழி ஒதுக்கிக்
குடிப்பிறப்பு இயலுறு கொள்கைக்கு இடரின்றித்
தொல்நெறி காப்பவர், தொல்அற வோரே;
கடல்கொண்டது ஒழியக் கனற்குஊட்டல் எத்தனை?
எத்தனை நூல் கொள்ளை இடப்பட்டு ஒழிந்தன?
எத்தனை கைத்தொழில் இழந்தன தமிழகம்?
அஃதறிந் தெனும்விழித்து அயல்நெறிப் படாதுஇனித்
தமிழகத்து ஒற்றுமை தனையாக்கி வாழ்மின்!
திருவருள் அம்மைகைச் செல்வராய் வாழ்மின்!
தமிழக ஒழுகெனும் மக்கட் சட்டம்
இதுமூ வாயிரத்து எண்ணூறு அடிகளை
இருபத் தொருபாவில் ஏற்றெழுந் ததுவே;
வகுத்தது ஒழுக்க வழக்கப் பாகம்
வழக்குத் தீர்ப்பு இனி வகுப்பாம்
சிவ ஆரூட சித்தன் செய்ததுஇது வாழ்கவே!

தமிழக ஒழுக்கம் கூறும் இந்நூலாசிரியர் தம் இயற் பெயரையோ வழங்கு பெயரையோ கூறாமல் வேறொரு பெயரைப் புனைந்து கொள்வானேன் என்ற எண்ணம் சிலர்க்குத் தோன்றலாம்.

பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த புலமையாளர்கள் புதுநூல் யாத்துப் பழநூல்போல் காட்டல் என ஒன்றை மேற்கொண்டனர்.

பழநூல் பெயரால் அந்நூல் கிடையாமையின் புதுநூல் செய்து அப்பெயர் நாட்டினர்! அந்நூலே ஈதென்றனர்!

தாம் செய்த நூல்களில் தம் பெயரைச் சுட்டாமல், பழம் புலவர் பெயர்களைச் சுட்டினர்.

தம் பெயரை மொழியாக்கம் - மொழிபெயர்ப்பு - எனச் செய்து அப்பெயரால் நூல் வெளியிட்டனர்.

யோகிகள் காலம் அது! அச்சூழலில் தம் பெயரைப் பொறியாமல் புதுப்புனைபெயரை அமைத்துக் கொள்ளத் தூண்டியது! ''இப்பொழுது இயற்றப்பட்டது தானே, இவர் இயற்றியது தானே'' என அறிந்தாரும், அறியாரும் எண்ணாமல் தொடர்பிலாப் பழையர்

நூலைக் கொள்வதுபோல் கொள்ள ஏற்படுத்திக் கொண்ட பொருந்தா நெறியாம். இத்தகைய இடர், வரலாற்றுக்குப் பெருங்கேடாக அமைந்தது உண்மை!

பழைமையொடு புதுமை பொலியும் இந்நூல் நூற்றாண்டுக்கு முற்பட்டது. கடந்த நூற்றாண்டில் ஏற்பட்ட உலகவியல் தமிழக வியல் மாற்றங்கள் மிகப் பல. அவற்றை எண்ணின் தமிழக ஒழுகு சிறக்கும். புதுவன புகுதல் தவிர்க்க இயலாதது மட்டுமன்று! வேண்டுவதுமாம்!

## 4. நூல் வெளியீடு

யோகிகள் மக்கட் சட்டம், பகுத்தறிவு, சீர்திருத்தம், தனித்தமிழ், இனமானம், தமிழிசை, தமிழ்வழிபாடு, தமிழ்நெறிக் கரணம் என்பவற்றுக்கெல்லாம் வைப்பகமாகவும், முன்னோடியாகவும், பல்வேறு இயக்கங்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்தது! ஆனால், எங்கோ ஒருவர் பரணையில் கிடந்து பரவாமல் போயிற்று!

நெடிய காலமாகப் பாதுகாத்து வைத்திருந்தயான், இதனைப் பற்றிய செய்திகள் சிலவற்றை அவையில் வைக்கும்போது, ''நூல்படி கிடைக்குமா'' என அவாவிக் கேட்டனர்! தாம் அச்சிடுவதாக உள்நாட்டில் சிலரும் அயல்நாட்டில் சிலரும் வேண்டினர். எனினும், ஒரு முடிவுக்கு வாராமல் காலம் கடந்து வந்தது.

ஒருநாள் செய்தித்தாளில் **'அருட்சுனைவர்'** பட்டயப் படிப்பு திருச்சிராப்பள்ளி **பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில்** தொடங்கும் குறிப்பை அறிந்தேன். மகிழ்ந்தேன்.

**கோயில் வழிபாடு, குடும்பச்சடங்கு, பழம்பண்ணிசை** என்பவற்றைத் தாய்மொழியாம் தமிழ்மொழி வழியே பயிற்றி அப்பயிற்சி பெற்றார்க்குப் பருவத்தேர்வுகள். செயல்முறை விளக்கங்கள் எனத் திட்டமிட்டுப் பாடத்திட்டம் வகுத்துத் தருவது தமிழுணர்வாளர்களுக்குத் தேனாகத் திகழ்ந்தது! அதனைத் தாமே தக்கவாறு எண்ணித் தீர்மானித்து அரசிலும், பல்கலைக்கழக நிலையிலும் ஒப்புகை பெற்றுத் துணிந்து நிறைவேற்ற வந்த அறிக்கையை அடுத்தே பாடக்குழுவும், பயிற்றாளர் தேர்வும் உடனுக்குடன் முடித்த பெருந்தகைத் துணைவேந்தர் **மு. பொன்னவைக்கோ** அவர்கள் செயல்வீறு பெரிதாம்!

**'மாலியம்', 'சிவனியம்'** இவ்விரண்டொடு **'சால்பியம்'** ஆகிய மூவகை வழிபாடும், மூவகைச் சடங்கு நெறிகளும் தமிழகத் தொல்பழநெறி மீட்டெடுப்பாகப் பல்கலைக்கழகமே ஏற்றுக்கொண்ட ஒப்புகை, பாரதியாரின்,

"பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்பதையும், **பாரதிதாசனாரின் தமிழியக்க ஆணை மொழிகளையும்** அப்படி அப்படியே நிறைவேற்றற் கடனாகக் கொண்டதாகவும் எனக்குப் புலப்பட்டது. அத்திட்டத்திற்கு ஒரு கருவிநூல் போல்வது இத்**'தமிழக ஒழுகு'** என எனக்குத் தோன்றவே, பாடத்திட்டக் குழுவுக்குச் சென்றயான், இந்நூலைப் பற்றி உரைத்த அளவில் ஒரு புதையலைக் கண்ட மகிழ்வில் உடனே படியெடுத்து அச்சிட அச்சீட்டுத் துறைக்கு ஆணையிட்டார் துணைவேந்தர்!

தக்க இடத்தில், தக்க காலத்தில், தக்கவரால், தக்கவர்க்காக வெளிப்படப் போகும், தகவு நூல் 'தமிழக ஒழுகு' என மகிழ்கிறேன்! பல்கலைக்கழக முத்திரையொடு வெளிவரச் செய்யும் பேற்றை வழங்கிய துணைவேந்தர் அவர்களுக்கும், பதிப்புத் துறையர்க்கும், அச்சிட்டவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்! பயில்வார் பயன், தமிழ் பெற்ற பேறாம்!

*இன்று பொங்கல் நாள் (சுறவம் 01, 2041; 14.01.2010)*

*பொங்கல் மகிழ்ச்சி!*

*தமிழர் பொங்கலாம் தமிழக ஒழுகு பொங்குக!*

இன்ப அன்புடன்

***இரா. இளங்குமரன்***

உ

சிவம்.

# தமிழகவொழுகு

என்ற

# மக்கட்சட்டம்.

(முதலாவது ஒழுக்க வழக்கப்பாகம்.)

மிகப்பழைய ஒழுக்க நூலாகிய

இது

கோவிற்பட்டி,

மறைத்திருவன், விருதை

சிவஞானயோகி அவர்களால்

அனுப்பித்தரப்பெற்று

கொழும்பு, விவேகானந்த சபை சைவகதாப்பிரசங்கசிகாமணி

வத்திராயிருப்பு

சைவத்திருவாளர்,

தி. ம. செண்பகம் பிள்ளை

அவர்களால்

கொழும்பிலுள்ள திருநெல்வேலி

சைவப்பெருஞ் செல்வர்களது பணவுதவியைக்கொண்டு

கொழும்பு, மெய்கண்டான் அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது

இதன் விலை] 1923 [ரூபா 1.

உ

சிவமயம்

# [illegible]

என்னும்

# [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அச்சிடப்பெற்றது

[illegible] விலை] 1923 [[illegible] 1.

உ

சிவம்

# தமிழக வொழுகு என்ற மக்கட் சட்டம்

## முதலாவது ஒழுக்க வழக்கப்பாகம்

### க. காப்பு

அறவாழி அந்தணன் அம்மை யப்பன்
தலைநாள் உலகுக்குத் தந்த திருநெறிச்
சைவம் தழீஇய தமிழக ஒழுகிது
வழக்காற்றில் உள்ள மக்கட் சட்டம்
பாண்டி முதல்முப் படிமர பாக்கொளும்
நாட்டு வழக்குடன் ஏட்டு வழக்கையும்
துரீஇயறி அளவில் தொகுத்தினிது
இயம்புவல் காக்கும் எண்குணன் தாளே.

### உ. முதனூலெழுச்சி

உலகம் என்பது உயர்ந்தோர் அவரே
பரனால் முதனாள் படைக்கப் பட்டனர்
படைத்தவன் வைத்தும் பாண்டி மருதை;
மருதைநன் மக்கள் வழங்கி யதுதமிழ்;
மருத நிலத்தின் தலைநகர் மருதை;
மருதை இடைநிலை மாறிப் போலியாய்
மதுரை எனவும் மரீஇவழங் கிடுமே;
வடவர் மதுரா வடநாட் டுளதே

தமிழ்ப்பொறி முப்பான் ||சார்பொலி இருபான்
ஆய்தப் புள்ளியொன் றாதனி நிலைப்பொறி
யாம்ஒலி யோடெழுத்து ஐம்பத் தொன்றே
அவற்றொடு,
முறையே உயிர்மெய் முற்றுத் தனிநிலை
சுழியள பெடைகுறுக் கம்மே வினாசுட்
டின்ன எழுத்தும் எண்கட் கெழுத்தும்
மறையைந் தெழுத்தும் வயங்கும் ஓமுஞ்
செவிவழி மாந்தியெண் சிந்தை நிறைமொழி
மாந்தர் வைத்தருண் மந்திர எழுத்தும்
நெடுங்கணக் கின்கண் நிறைந்தன அன்றே
அகரம் முதலுயி ராயும் சுட்டா
வழங்கும் இடத்து வழங்குதல் போல
நெடுங்கணக் கெழுத்துகள் நிறைமொழி மாந்தர்
தெரிக்குங் கான்மந் திரம்எனப் படுமே
மாந்தல் வினையடி மாந்தது முதல்குறீஇ
இருத்தல் வினையடி யிருவொடா யங்கடை
பெற்றுமந் திரமாம் பெயர்தமிழ்ச் சொல்லே
காதுவழி மாந்தி கணித்துள்வைத் திருக்கப்
பெறுபொருண் மந்திரம் பிறவேட்டி லின்றே

---

||சார்பொலியிருபான் - முப்பதெழுத்துக்களினுட்பட்ட ச-ச-ட-த-ப, என்னும் ஐந்தெழுத்துக்களுந் தமிழ்ச்சொற்களுக் கிடைநின்று, தம் இயற்கையொலிக்கு மாறாகவொலிக்கும் இருபது செயற்கையொலிகள். அவை வருமாறு:-

1. ககரத்தில் - எக்கர், வங்கம், கங்கு, அகம், எஃகு, எனவரும் பெயர்களில் ஐந்தொலியும், 2.சகரத்தில் - எச்சம், வஞ்சம், பஞ்சு, சூழ், சண்பை, சுற்றம் - காசு, என வருஞ் சொற்களில் ஆறு ஒலியும், 3 டகரத்தில் - கட்டில், பண்டம், வண்டு, என வரும் பெயர்களில் மூன்றொலியும், 4 தகரத்தில் - அத்தம் சேந்தன், நந்து என வருஞ்சொற்களில் மூன்றொலியும்

வடநூன் மந்திரம் வடவர்தம் பாட்டே

(௩அ) முதுதமிழ்,

முதனாட் பயிற்றிய முதல்வன் மக்கட்கு

அறம்பொருள் இன்புவீ டாமுயிர்க்கு உறுதி

தருநாட் பொருண்மறை தமிழா கமங்கள்

முற்று முதவினன் முதலிரு நூலவை

அதுமுத னாண்முத லருளலி னாம்பெயர்

(சச) அவைதாம்,

பொருவில் இலக்கியம் பொதுவும் சிறப்புமா

நிற்க அவற்றின் நிறைந்த பொருணிலை

தேற்றே ரணமுந் திருந்திலக் கணமும்

பெற்றனர் குரவர் பிறங்கவர் வழியே

நயந்தரும் இயலிசை நாடக மென்ன

முத்தமி ழறிவு முகிழ்த்தநன் மக்கள்

வழிநூல் பலவும் வகுத்தனர் சிறந்தார்

(௫௨) அதனால்,

அறம்பொருள் இன்பமும் வீடும் அணிபெற

வழுத்துந் தமிழக மாண்பு பெரிதே

தமிழ்நூல் குயிலிய சைவம் பெரிதே

---

5. பகரத்தில் - அப்பன், உம்பர், செம்பு என வரும் பெயர்களில் மூன்று ஒலியும் ஆக இருபதுமாம். (ஸரளவர்ணவிம்ஸதி என்பார் வடவர்) இவற்றிற்கு முறையே,

க்க-ங்க-ங்கா-ஹ-: எனவும், க்ஷ-ஜ-ஞ்ஜா, ஸ்ஸ, ஷ, ஸ எனவும், ட்ட-ண்ட-ண்டா எனவும், த்த-ந்த-ந்தா எனவும், ப்ப, ம்ப, ம்பா எனவும் வடவருக்கு எழுத்துக்களமைத்துக்கொடுக்கப் பட்டன. இவ்வெழுத்துக்கள் புதுமையென்பதற்கு,

''ஆப்யஸ் ஸர்வே ஸமுத்பந்நாஸ்த்ரிம்ஸத் வர்ணாஸ்ஸவிம்ஸதி'' (இச்சத்திகளால் முப்பது எழுத்துக்களும் இருபது (சார்பொலிகளுங்) கூடியுண்டாயின.) என வரும் பௌஷ்கராகமப்பாட்டுஞ் சான்றாதலறிக.

சைவச் செம்பொருள் தானே பெரிதே
செம்பொருள் அன்பு சிறத்தல் பெரிதே
சிறந்த விரண்டறஞ் செயன்மிகப் பெரிதே
யறவோ ரிம்மையின் படைதல் பெரிதே
யடைமறு மைக்கா மானிடம் பெரிதே
யரனருள் பெறுந்துற வறமும் பெரிதே
துறவர்பே ரின்பந் துய்த்தல் பெரிதே
துய்ப்பித் தருள்குரு தொன்முறை
(கூ௪) நாளும் பெரிதென நாடறிந் ததுவே.

## ௩. உலகநிலை

தமிழ்நூல் வழிப்படுந் தமிழகத் தறிஞர்
கடவு ளாணை கடவா ராயினர்
கடவுளு மிவரைக் கருதுநன் மக்களின்
வைத்தா ளுதலின் மக்க ளிவரே
மக்க ளுயர்திணை மக்களல் லாப்பிற
வொக்கவஃ றிணையென் றுரைப்பதித் திறனே
மக்கள் மகாரே மனித்தர் மன்பதை
யிவையொரு பொருட்சொல் என்பா ரறிஞர்
மகவி னின்றே மன்முன் னிட்டே
இவைதோன் றிற்றென்று இயம்புவர் அறிஞர்
ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும்
பண்டுதொட் டுண்மையிற் பகுப்பிவ ணின்றே
யொழுக்கம் உடையோர் உயர்ந்த மக்கள்
இழுக்கப் பட்டோர் எளிய மாக்கள்
வழீ இயிடைப் பற்றிய வல்லார் நடுவ
ராக ஒழுங்குகொண் டாமுத லிடைகடை
முப்பாற் பிரிவு முதல்வன் அருளிய

நெறியை யுலகி னிலையிடு மளவே
**மக்களுட் பிரிவெம் மான்வகுத் திலனே**
மக்களுந் துணிகுடி மக்களு மிஞ்சி
யொதுங்கிய மாக்களு மொழுங்கு வழாஅமை
யான்முதல் விட்டடை தலினிடை கடைவிட
வுண்டாய்த் திகழ்வதிவ் வுலகறிந் ததுவே
(அஅ) ஆகலின்
கொண்டு கொடுத்தலுங் கூடி நுகர்தலும்
விடுபட் டதுபிற வேலைகட் கெல்லா
மொருவர்க் கொருவ ருறுதுணை யாவார்
கூட்டு வணிகங் குத்தகை வாரங்
கைத்தொழில் பலவுங் கலந்துசெய் வாரே
மகடூஉக் களினளா வளாவலிங் கின்றே
பலதொழி லுண்மையிற் பலகுடிப் பிறப்புள
**புரிதொழி லெல்லாம் பொதுவுல குக்கே**
யுழுவோர்க் குடையு முடைநெய் பவர்க்கூணுங்
கொல்லர்க் குடையூண் கொழுநெய் கதிர்பிறர்க்
காவன போல வாமெலா மதனா
லொருதொழில் பிறரதென் றுரைத்தற் கின்றே
யொருதொழில் சிறிதென் றுரைத்தற் கின்றே
யொவ்வொரு தொழிலையொவ் வொருகுடி பற்றிச்
சிறந்து தொடர்பாத் திகழ்தர லாலே
நாட்டி லொழுங்கு நடைபெற லாய்த்தே
யுறுப்பினொன் றசைவறி னுடன்முடங் குதனே
ரொருதொழின் முடங்கி னுலகியங் காதே
யாகலி னவரவ ராற்றுத லாற்ற
லறனாங் குடிவாழ் வழிவதின் றுயர்வாங்
குறும்பு முனைத்தாற் குடிப்பிறப் பொழியு

மொழியா வழியர சுணர்வுறுத் தாள்வன்
முனைப்பினத் தொழில்பிறர் முயலுதல் வழக்கே
யின்றெனிற் றாந்தா மியலள வியற்றுவ
ருழுவிப் பவர்தா முழலிழி பின்றே
காலை யுழவர் கரும்பொற் கொலருச்சி
மாலைவண் ணாரினன் மக்கண்முன் னுளரே
வயனிலன் விளைபொருள் மாடா டிவைநிகர்
கைத்தொழில் பொருளாப்பின் கண்டுபற் றினரே
தன்னூ ழியனுடை தருபவ னென்றிடி
னவனூ ழியனுண வாக்குந னாவான்
கைத்தொழி லெவர்க்குங் கண்ணியந் தருமே
யாகலிற் றொழிலையாள் பவருய ரறிவரே
யண்ணர் முதல்வரா வயன்மனை தத்தா
மிளைஞரி லிடையரா வியைந்துறக் கடையர்
நண்பரில் வாழ்வதிந் நாட்டு வழக்கே
யில்லறத் தவரே யிந்நெறி பேணுவர்
தீரத் துறந்தார் சிவப்பெருஞ் செல்வம்
பங்குகொள் கடனிமுப் பாற்குஞ் சமனே
முறையிதா லினக்குடி மூன்றுமோ ரினமே
பழமை பயிறலிற் பற்றுவிட் டயலா
ருறவாற் பிறரிய லுபர்வாய்த் தோன்றப்
புதுவது பற்றிப் போற்றுந ருளரே

(௱௩௨) அவரால்,

எள்ளுந சிலவு மேற்குந சிலவு
மாக்கலந் தியனெறி யறனெனப் படுமே
விரவ லொரீஇமுது மெய்நெறி பேணு
மறிஞரும் வேறுள ராலிரு திறத்தரிற்
கொள்ளுநர் தொன்னெறி குன்றாது நிற்றலுந்

தள்ளுநர் தம்முறை தாழாது போற்றலு
மொழுக்கப் பிரிவென வுள்ளுவ ரறிஞு
ரம்மட் டன்றி யாட்பிரி வின்றா
**லெல்லாரு முடன்பிறப் பென்றுற லறிவே**
தலைநாட் டொடங்கித் தழீஇவருந் தொன்னெறி
முதல்வ னருளலின் முஞ்ச விடாஅப்
பேணலெல் லோர்க்கும் பெரிதொரு கடனே
அங்ஙன மிவரு மவர்ப்பேணல் கடனே
யவரவ ரினக்கட் டவர்தமிற் பேணி
வருவது மக்கள் வழக்கா றாமே
யாலய மடங்க ளாசிரி யத்தவ
ரறச்சாலை யம்பல மவையுறைச் சாலை
கல்லூரி முன்னாக் கழறப் படுமெலா
**மனைவருக் கும்பொது வாமென வறிக**
(௱௫ உ) ஆமெனின்,
அழுக்குடை யுடீஇநீ ராடல ராகி
யெச்சிற் றம்பல மிரீ இக்கவு ளசைஇயர்
ஞுண்டு மச்சி நத்தை செத்தமா
டுண்டுபல் விளக்கா வூத்தைவாய்த் தீம்பர்
மாடாடு கோழி வதைக்குவன் னெஞ்சர்
கொடுநோ யாளர் குடிவெறி காரர்
முதலிய பலர்க்கு முழுமுதல் பொதுவால்
**வணக்கந் தட்பது மரபிலை யன்னோர்**
பண்டைத் தீதிப் படிவிடுத் ததைநினைந்
ததுதீர்ந் தினியெனு மறிவும் பொருளும்
படிவ நலமும் பகவ னருள்செய
வேண்டித் தனித்தனி விலகிநின் றேத்தற்
கிடம்பெற லவருக் கியைந்த கடனே

மக்க ளுடன்குடி மக்களு மாங்கே
யிடைஞ்சலின் றிறையை யிறைஞ்சுதல் கடனே
காமக் கிழத்தி காதற் பரத்தையென்
றில்வாழ் புறத்தியு மேனை விலைமினுங்
குலமகண் மாருட் குலையமிண் டாம
லொதுங்கி யிறைபணி யுஞற்றுதல் கடனே
யிடர்ப்பட நெருக்கித்தொட் டேற முயல்வது
தரமுயர் பிழிபினைத் தான்காட் டுவதே
பிறர்போற் றாமும் பேறுற வொதுங்கி
வரிற்பெருந் தன்மை வருந்தா னாவே
மேலும் வியர்ப்புற்று மெய்நாற லின்றே
வெம்பிணி தொத்தாத மெய்நல னுண்டே
குறியே ததையுட் கொண்டிறை வணக்க
மியற்றி வரிற்பய னெய்துவர் மேலோ
ரிவணடை கொடுநல னெலாமா ராய்ந்து
நிலையிற் பிரித னெறிக்கழி வாற்றல்
செய்வதெண் ணாதுஞ் செய்வார்த் தடுத்து
மொற்றுமை யறிவார்ந் தொழுக்கப் பட்டுந்
**தமிழ்மொழி வளர்ச்சி சைவ வுணர்ச்சி**
**யாக்கல் சைவர்க் ககத்திய மாமே**

(௱அசு) இதனிடை,
சைவ மொரீஇச்சிலர் சமணர் சைநர்
சமர்த்தர் சாத்தர் சந்தணி வைணவ
ரெனப்போ யினரவ ரிறைஞ்சுங் கோயில்
போற்றி யடிக்கடி போர்விளைக் காமல்
வாழ்வா ராயின் மகிழ்வுறு முலகே
**யெவர்க்குந் தெய்வ மிகழே லெனுமறை**
**யொக்கு மதனை யுணர்ந்தோ ருயர்ந்தோர்**

பிறரை வெறுப்போர் பிறரால் வெறுக்கப்
படுவ ரதைவிடப் பயிலுத லறிவே
தாம்பிறர்த் தாழ்த்தித் தகைபடைப் பான்வழி
பார்ப்பார் செய்கை பலிப்பதிங் கின்றே
தன்னறி வின்றித் தரற்பெற லின்றிப்
பிறர்க்கடி மைப்படல் பேதையர் செயலே
தம்மவர் சொல்லைத் தட்டிப் பிறர்சொல்லை
நம்பி யவர்மா ணவரா யினர்சிலர்
மற்றவர் தமிழக மரபறி யாரே
சைவர் சைவர் தமக்குடன் பிறந்தோர்
சைவப் பொருளிற் சமவுரித் துடைமையின்
சைவர் தமக்கயற் சமயிக ணண்ப
ரவரவர் பொருளவ ரவர்க்குரித் தாகலி
னங்ஙனம் பிறசம யத்தோர் தனித்தனி
யுணர்ந்துகொண் டாரே லொருமைகை வருமே
யொற்றுமை நயத்தா முயர்வை வெறுத்தே
யயலார் வாழ்வி லழுக்கா றுடைமையின்
பிறர்பொருள் கவரப் பேரவா வெழுதலின்
விழைவுகை வராவிடின் வெகுளி யெழும்பலின்
கருத்தழி யதனாற் கடுஞ்சொலுண் டாகலின்
†பொய்யுங் கோளும் புறணியும் பழியும்
மலிந்துல கின்கண் வழக்கு மிகுதலின்

---

†1. பொய் - உள்ளதை மறைத்து இல்லாததைக் கூறுதல். (தப்புப் பேசல்.) 2. கோள் - அவன் இவனைக் குறைகூறினதாக இவனுக்கும், இவன் அவனைக் குறைகூறினதாக அவனுக்கும் படும்படி பிறர்வாய் வழிவழங்கி நேரிலிருவருங் கலக்கவிடாதபடி செய்து மூட்டிவிடுதல் (புறங்கூறல்) 3. புறணி - முன்னர்ப்புகழ்ந்து பின்னரிகழ்தலாகிய குண்டணி. (கோறணி.) 4 பழி - தன்பேர்படாமல் அனைவரும் நம்பத்தக்கதாக நல்லவர்மீது பொல்லாங்கைப் பரப்பல்.

மக்க ணிலைகுலை மனத்தரா யினரே
யெல்லாம் வல்ல விறைசெய லொருபாற்
கண்டா மெனினுங் கடிநாய் புழுத்துச்
சாநா ளளவுந் தடைப்படுத் தடக்கலிற்
றீயர்க் கடிந்து சிறையிற் படுத்துத்
திருவாளர்ப் பேணுதல் செய்தல் செங்கோ
லரசன் கடனென் றருமறை முழங்கலி
னுலக நிலையை யுணர்ந்தே
(உ௱உச) யமைதிசெய் தாளுத லரசர்க்குக் கடனே.

## ச. அரசியலாக்கம்

அறிவாற் குணத்தா லாண்டான் முதிர்ந்த
தமப்பன் பாட்டன் றமைத்தழீஇ யாய்ந்து
தோட்டம் நன்செய் தோப்பு புன்செய்
முதலிய நிலத்தொடு முகிழ்த்த விளைபொருள்
பேழைப் பணமின்ன பெருங்கூழ் சிறந்தே
யன்பா ரடிமைகொண் டரணார் வளவுறை
தந்தை யரசனுந் தள்ளை யமைச்சனும்
மக்கள் குடிகளு மானத் திகழ்தருங்
குடும்ப வரசு குயிற்றுந் தமிழக
மதன்கண் மருவுண வாக்கத் தகுநிலன்
மருத மெனப்பெயர் வாய்த்துத் திகழுமே
(உ௲சூ) யாங்கே,
சிறிச்சிறி தாசெழ நீர்த்தறம் பேண
மேன்மக னூர்தொறு வேண்டப் படுநா
ளடுத்தலி னின்றி யமையாமை நோக்கிக்
கண்டெடுத் தூர்தொறுங் கரையாளர் வைத்தார்
மற்றவ ரூரை வரம்பிற் படுத்தாள்வர்

மதியழி சிற்சில மக்க ளவாவாய்ப்
பட்டுப் பொழியைப் பழன வரம்பை
யரிந்து நிலங்கவ ரறிஞரும், பாய்ச்சற்
கூறியற் றமுக்கா றுடையருஞ், செய்கை
பிழைக்கின் வெகுண்டு பிழைசெய் வலியரும்,
பொதுப்புகின் பொய்கோள் புறணி பழிச்சொற்
காரருஞ் சிறந்தார் கரையாள ரவரை
நாட்டாண்மை காட்டி நல்வழிப் படுப்பர்
சிலநூ றாண்டு செலச்சிலர் முனைத்துச்
செல்வப் பெருக்காற் செருக்கு மிகலாகிக்
குற்றவா ளிகணட்புக் கொண்டன ரதனால்
தாறு மாறுக டலையெடுத் தனவே
யந்நாட் கரையாள ரனைவருங் கூடி
யூர்தொறு மறிஞ ருடன்பாடு பெற்றன்றி
முதன்மை கைவிட முடிவுசெய் தனரே
பின்னரொவ் வூர்தொறும் பெரியோர் குழுக்கூட்டிப்
பேசி நல்குரம் பெரிதுபெற் றனரே
நாட்டாண்மை காட்டி நயந்தறம் பேணலி
னேற்றுரை கடந்து நிமிர்ந்தோ ரடங்கினர்
அந்நா ளொழுங்கொரீஇ யவர்தள்ளப் பட்டுத்
திணைதொறு மேறினர் திறம்பினர் வாழ்ந்தார்
மற்றவர் தாமே மாக்க ளெனப்பட்டு
மல்கித் திருடுவர் வழிப்பறி செய்குவர்
மாடு கடத்துவர் வயன்முதல் விளைநிலன்
விளைவுகொள் வாரது விலக்கரி தாய்த்தே
யூர்தொறுங் குழப்ப முயர்தர லாய்த்தே
யுடன்கரை யாள ருயர்குடி மேலோ
ரனைவருங் குழீஇயாய்ந் தரசாக்க வுறுதி

செய்தா ருடனே தெரிந்தெடுத் திட்டா
ரவனே பாண்டிய னைந்தச் சந்தீர்த்
தாண்டன னவன் றுணை யரச ரிருவரை
வைப்பமூ வேந்தரு மண்ணகங் காத்தனர்
மக்க ளொழுக்கம் வழாதறம் பேணி
யிடர்ப்பா டிலரா யினிதறி வார்ந்தே
யருளாள் வாரா யாயுள் பெருகி
வழிவழிச் சிறந்து வளர்ந்தனர் வாழ்வார்
(உ௭அ) அந்நாள்,
அமைச்சுமுன் னுயர்நிலை யாளர் குடும்பச்
செலவு பெறலன்றித் தேட்டங் கருதிலர்
படையா வாருமப் படிப்படி பெறுவர்
காலாள் குதிரை கைமா மணித்தே
ரெனநால் வகைப்படை யிறைவர் படைத்தனர்
வயம்பெறு செங்கோன் மன்செல வுக்காக்
குடியாறி லொன்று கொடுத்தனர் கடமை
யஃதிலை யென்றா லரசிய லின்றே
யாகலிற் குடியா லமைத்த கரையாளர்
தம்மா லமைத்த தகையர சன்பாற்
குடிக்கட் டழியாதுங் கொள்கை பிழையாது
மவரவ ரினக்கட் டறிந்து வழக்கினை
யூர்தொறுங் கரையாள ருகந்து தீர்த்தலிற்
றீரா வழக்கினைத் தீர்க்கும் பொறுப்புடன்
மாக்களை யடக்கி மக்களை வாழ்விக்கும்
பொறுப்புந் தாங்கும் புரவல னானான்
றெளியா வழக்கினைத் தெளியத் தெரிவுசெய்
தைவ ரிடைவிட் டவர்க்கொடு தீர்த்திட்டு
நாட்டுக் குவகை நல்குதல் வழக்கே

யூர்தொறுங் கரையாள ருறைதலின் மேலிறை
யிருத்தலிற் றெரிவுசெய் தெடுப்பவர் வருதலின்
வழக்கே யடிக்கடி வராதடங் கிற்றே
வளர்பிறை போனடை வளர்தர லாய்த்தே
திணைதொறு மாக்களிற் றெரிவுசெய் தொருவனை
முதல்வனாக் கிடவவர் முனைப்படங் கியதே
பிணைமுறிப் படியவர்ப் பேணா விடிற்றிணைத்
தலைவனைப் பாண்டியன் றான்பிடிப் பானே
யாதலிற் குழப்பமின் றாய்த்தறன் வளர்ந்தது
நாடு சிறந்தது நம்ப னருள்வழி
தமிழ்நன் மக்கள் சால்பின ரானா
ரரசு முதனிறீஇ யதுதமி ழகமே
(௩ாய) யாகலின்,
இறைவன் றன்னா லினத்தாற் பகையான்
மாக்களாற் கள்வரான் மக்கட் கிடருறா
தாராய்ந் தழிவி லரணாற் றுவனே
குடியொருப் பட்டுக் குயிலுவ தெதுவுஞ்
செவிக்கொளு மிவன்செயல் செங்கோன் முறையே
வழிவழி யரசா வருதலின் முதுமையை
மறந்திந் நிலைதானே வந்தது மற்றிது
தந்தை பாட்டன் றான்றே டியதென
வரசர் மறந்து மறிமட ரின்றே
தந்நலத் திற்கிறை தான்குடி படைத்திலன்
குடிநலத் திற்கெனக் குடிதந்த பேறென
வழிவழி யரசா வருபவன் றேர்தரக்
குருபடிப் பித்தலிற் கோனறி வினனே
யாகலிற் றான்குடி யாளெனக் கருதி
யிறைவரு வாயி னிடுசெல வொழியக்

கருகூ லத்துள கைப்பொரு ளெல்லாங்
குடிநலத் திற்காங் குவைப்பொரு ளெனவே
வைத்துப் பேணுவன் மற்றதி லிருந்து
செய்வன செய்து திகழ்குடி பேணுவ
னரசுக் கெத்தனை யாண்மகா ரிருப்பினும்
முதல்வன் றனக்கே முறைவரும் பட்டம்
மற்றவர் படியும் மதிப்பும் பெறலுட
னுயர்நிலை யினரா யுழைத்தீட் டுவரே
மகவி லிறைக்குப்பெண் மகண்மண மின்றுறின்
மகளர சாட்சி வருவதும் வழக்கே
மகளர சவண்முதன் மகன்பெறு வானே
பெண்மக வாண் மகப் பெறாவிறை ஞாதியிற்
றத்து மகற்கொள றமிழக வழக்கே
யின்றெனிற் குடிகுழீஇ யெடுத்துவைப் பாரே
குடியென லீண்டுக் கோனினக் கரையாளர்
பிறந்த குடியொரீஇப் பிள்ளையில் குடிக்குத்
தனையனாய்த் தாண்டுசேய் தான்றத்து மைந்தன்
கடவுட் கடுத்தவன் காவல னாகலின்
செழுநிலங் கண்கண்ட தெய்வமென் றேத்தலின்
குடியர சிறைதரக் கொள்பொரு ளுண்மையின்
முன்னவர் தேடிய முதலெது மின்மையின்
தெய்வந் தன்னலஞ் சிந்தியா முறைமையின்
செலுத்துந் தவப்பயன் செய்தவர்க் கருளலின்
தெய்வ நிகரிறை செயும்பொறுப் புடைமையின்
முதலிடம் பெறுங்கோன் முதுகுடி நல்கிய
பொருள்குடிப் பொருளெனப் போற்றிக் குடிக்கின்பு
வருநெறிக் குதவல் வழிவழி வழக்கே
யிவண்டமி ழகத்தர சியலியன் றிடுமே

(ரு ரு ச) அரசுதான்,
மக்களுட் பிணக்கம் வராவழிக் காக்கவும்
மாக்கண் முனைத்தான் மடக்கி யொடுக்கவும்
தெய்வத் திருநெறி சிதைவின் றியக்கவும்
உலக வொழுக்க முலையாது பேணவு
முழவு வணிக முணர்கலைப் பயிற்சி
செய்தொழில் வரைவு சிற்படு சிற்ப
மெனுமறு தொழில்க ளினிதியல் விப்பவு
முலகறு தொழிலினொவ் வொருதொழில் கண்ணும்
பலபிரி வுளவவை பண்ணுவோர்க் குவகை
குன்றா தியைந்தசெங் கோன்முறை புரியவும்
வைக்கப் படுதலின் மறாஅது தன்கடன்
பொதுநல வூழியம் புரிதலென் றறிந்து
வம்பெழிற் றந்தைதன் மகவொறுத் தலினெறி
புரிந்து குடியெலாம் போற்றவாழ் குவனே
குருகைப் பிரம்பிற் குடிகளை நடாத்து
நெறியிறை கைக்கோ னேர்படு செங்கோ
லறவைக் கருமைசெ யைய னரைய
னறிஞர் காட்சிக் கடுத்தலி னண்ண
லயலார் தமையெதிர்த் தடக்கலி னாண்டகை
குடிகளைத் தாங்கிக் கோடலி னேந்தல்
குடிதமின் முதன்மை கொடுத்தலி னினனே
யினன்கண் ணொளிவிரா யிருளகற் றுதலின்
குடிகளை யளாய்நலங் குயிற்றலி னினனே
பெருமான் பெருந்தகை பெருமகன் முதல்வன்
றலைவ னெனும்பெயர் சார்ந்ததிப் பொருட்டே
யாறிலொன் றிறைகொள லாலிறை யிறைவ
னெதிர்த்தார் தமையெதிர்த் தேறலிற் பொருநன்

குறும்பரைத் தாழ்த்திறை கொள்ளலிற் கொற்றவன்
மாக்க ணடுங்கச்செய் வன்மையிற் றோன்றல்
திகையெலா மிசைதோன்றச் செய்தலிற் றோன்றல்
மாக்கட்கு மாறுசெய் வளம்பற்றி மாறன்
மக்கட்கு வாழ்வருள் வழக்கால் வழுதி
தேளத்தைச் செழிக்கச் செய்தலிற் செழியன்
றென்றமிழ் பேணலிற் றென்னன் றமிழ்நாடன்
றென்னில னாளுந் திறன்கொடுந் தென்னன்
பொதியிலை யுடைமையிற் பொதியவெற் பினனே
யுருப்படப் பார்த்துல கோம்பலின் மீனவன்
கடிப்பகை யாய்மறங் கைத்தலின் வேம்பன்
கொடிதா ராயிவை கொள்ளலுஞ் சான்றே
குமரியாற் றிசைதழூஉங் குமரிச் சேர்ப்பன்
குமரிமீன் கொடிதழீஇக் குமரிச் சேற்ப
னொல்லா ருயிர்கவ்வற் குரிமையிற் கவுரியன்
குடிக்குயர் வருணிலை குயிற்றலி னுசித
னுச்சி யுச்ச முச்சித முசித
மிவையுயர் வுணர்த்தி யிவர்தமிழ்ச் சொல்லே
குடியை யளாய்நலங் குயிற்றலிற் கூடற்கோ
கைவரு நற்றவங் கருதலிற் கைதவ
னுடைநிகர் மான முதவலிற் பஞ்சவன்
கடவு ளருளியல் காத்தலிற் காவல
னறச்சாலை கல்லூரி யம் பலங்கோயி
லுறைச்சாலை பேணி யுதவலிற் புரவலன்
மக்கட்கு நன்னிலை வழங்கலின் மன்னன்
மக்கள்தம் நன்னிலை வழாதோம்ப மன்னன்
மதிப்பரு ணன்னிலை வழாமையின் மன்னன்
பலரும் விரும்பப் படுதலின் வேந்தன்

மாறன் பொறையன் மாரொரு குடியின
ராயினு முதன்மை யார்க்குரித் தவன்றன்
பழமைப் பெயரே பழையன் பாண்டியன்
பண்டு பழமை பண்டுமுன் னீண்டிக்
கடைகொடு பாண்டி கடவு ளருளிய
லுடைய பழம்பதிக் கொருபெய ராய்த்தால்
பாண்டி நாடே பழம்பதி யென்னவுந்
தென்னாடுடைய சிவனே யென்னவும்
வருதலிற் பாண்டி மண்டலம் பழைதே
கடவுணா டிஃதெனக் கழறலின் முதிதே
பழம்பதி யாகிய பாண்டிமன் பாண்டியன்
பழநாட் டிறைவழிப் படுமன் பழையன்
மற்றிப் பெயரெலாம் வழிவழி யாவரு
மரசுக ளுரிமைகொண் டாடுதொல் பெயரே
தத்த மொழுங்கு தவறா தியங்கிடு
மினக்குடி மூன்றுவந் தேறு குடிபல
தமிழகம் பொறுத்தலிற் றகவுறு மரச
னவரவ ரியலி னவரவ ரிருப்பக்
கோமுறை செய்தலிற் கோகோன் கோமான்
வெய்யரை யொழுக்கத்து மீட்டலின் மீளி
யெனும் பெயர் சிறத்தற் கியைந்து
(சருஉ) வாழர சாக்கம் வழிவழி நிற்குமே.

## ரு. ஆசிரியநிலை

குலவுங் கரையாளர் குடியூர்க் கொருகுடி
யம்முதன் மையர்கிளை யாவுள சிலவே
யவர்தமிற் பலவூ ரடங்கொரு நாட்டிற்
கிறையா யிருந்தா ளிறைகுடி யொன்றே

முத்தமிழ் நாட்டிற்கு மூன்றே யிறைகுடி
யரசர் கிளைக்குடி யாவுள சிலவே
யொருநூறு குடியுள வூர்க்கொரு வணிக
ரமைதலின் வணிகர் குடியுமவ் வளவே
வணிகர் கிளையா வருகுடி சிலவே
மற்றக் குடியெலாம் வளத்தமிழ் நாட்டிடை
குலனுய ருழவர் குடியென வறிக
வவர்தமி லிடைத்தோன் றைம்பெரு வேளிர்
குடிகண் மிடலுயர் குடியவை யைந்தே
துணையாம் பதினெண் டொழிலாளர் குடியுள
முதன்மையு மிடைமையும் முறைதேர்ந் தெடுத்து
வைக்கப் பட்ட வலாரா சிரியர்
அவர்தமிற் றீக்கைசெய் யாசிரி யக்குடி
சாவு நன்மை தமைநடப் பிப்பான்
பயின்று செய் முறைபுரி பண்ணவர் தங்குடி
யாலய வழிபா டாற்றுதற் காமுறை
யறிந்து நடாத்துபட் டாரகர் தங்குடி
யறம்பொரு ளின்புவீ டறிந்தறி விப்பதும்
முப்பொரு ளுண்மை முறைநிலை யிடுவதும்
புரிதொழின் மேற்கொண்ட போதகர் தங்குடி
யில்லறக் குரவரா மிந்நாற் குடிகளு
மாசிரியக் குடியென் றறையப் படுமே
யிவரோ ரினத்தின ரெனப்படு வாரே
யிவர்நான்கு கிளையின ரெனவாழ் வாரே
யில்லறத் தவர்க்கெலா மிவர்குரு மாரே
மந்திர நீராட்டி வைக்கப் படுதலி
னாசிரி யத்தொழி லன்றிவே றின்மையி
னூர்க்கா ணிக்கைகொண் டுயிர்வாழ் வாரே

உம்பளிக் கைபெற் றுயர்ந்தோ ருளரே
செய்துண்பான் காணிச் செய்களும் பளிக்கை
யுண்பதற் களிப்பதே யும்பளிக் கைப்பொருள்
தொழிலாள ருழவர் தோலா வணிகர்
கரையாள ரரசுவேள் கைகுவித் திறைஞ்சி
முதலிடந் தரப்பெறு முதன்மையர் குரவர்
அவர்தாந் திருநெறி யாள்வோ ராவா
ரறவோ ரிவரே யந்தண ரிவரே
வாழகங் குரவர் மடமெனப் படுமே
மடுத்தரும் பொருளையுள் வைக்கப் பெறுமிடம்
மடமெனப்படுவது வழிவழி வழக்கே
(சஎகூ) இவர்க்குமேல்,
உலகப் பற்றி லொரீஇய பகவர்
கடவுட் பற்றினைக் கைக்கொளும் பகவர்
மேலாந் துறவர்க்கு மெய்வழி காட்டவும்
நல்லறக் குரவர்தம் நன்னிலை பார்க்கவும்
நடுநின் றுலகுக்கு நலஞ்செயல் வேண்டி
யரசனிற் சைவத்தை யாளு மரசரா
யாலயம் நூற்கோயி லறநிலைப் பொருள்களைப்
பார்க்கும் பொறுப்புள பண்டா ரத்தரா
யெல்லாக் குடிக்கு மிறைவனிற் பொதுவிருந்
திரண்டறத் தவரு மேத்த வாழ்வார்
கைலையா சிரியன் கால்வழிப் பட்டமா
வைத்தலிற் கைலை வழியின ரிவரே
யரசுங் குடியு மளவளாய்த் தெரிவுசெய்
தெடுத்துவைக் கப்படு மிப்பக வரைத்தாங்
குருமடத் தலைவராக் கொளுந்தமி ழகமே
யவர்சிவத் தோடிரண் டறக்கலந் தமர்தலி

னிறவா நெறியின ரெனப்படு வாரே
யவர்தம் மிடத்தி லமர்தரத் தக்க
வுயர்நிலை யினர்த்தெரிந் துணர்வு கொளுத்தி
வைப்பது வழிவழி வழக்கா கும்மே
யன்றேற் குடியு மரசுங் குழீஇ யாய்ந்
தியலுணர் துறவியை யிருத்துதல் வழக்கே
துறவியின் றேலவர் தொல்லறப் பொருளைக்
குடிக்குக் கடத்திக் கொடுப்பது திடனே
மற்றமர் வோர்நெறி வழீஇயின ராயி
னொதுக்கிப் படிகொடுத் தோம்பப் படுவரே
யரசொடு குடிகுழீஇ யடுத்தொரு பகவரை
யெடுத்துடன் வைப்பது மிந்நில வழக்கே
பகவரைப் பாராப் பதர்களிங் கின்றே
பாரா விடினறம் பாழ்பட் டிடுமே
பகவரா வார்தம் பாட்டரின் றேட்டிலை
யம்மை கொட்டைநூற் றாக்கிய பொருளிலை
யறப்பொருள் சிவப்பொரு ளாமென் றறிவுற்றுத்
தலைமை துறவிக்குத் தந்த உலகத்தின்
கருத்துவப் பிப்போர் கடவுளின் வாழ்வா
ரன்றேற் றலைமையை யன்றிழப் பாரே
யொருகுரு வட்டத் தொருமுறை பகவ
ரூர்தொறும் புக்காங் குளகுடி கட்கருட்
காட்சி கொடுத்தருள் காணிக்கை பெற்று
வழங்கறம் போதித்து வருவதும் வழக்கே
கந்தரத் துயர்ந்த தரத்தரும் பணிந்தியை
காணிக்கை தந்தேத்திக் கைகட்டி வாய்பொத்திச்
சூழ்வரச் சிவிகையிற் றொன்மை விருதொடு
சின்ன முழக்கிச் சிவனென ஊர்வலம்

வருமா சிரிய மடபதி யானோ
ருலகெலாம் பேணு முலக குருவாவ
ரத்தகை யுயர்நிலை யாளர் செயத்தக்க
செய்வா ராகிச் சிவநெறி பேணுவர்
செயத்தக்க செய்கலா தாராய்த் திருந்தவுண்
டுறங்கி வீண்பொழு தோட்டுவர் சைவர்க்குப்
பகைவ ராவார் பகவரா காரே
மக்கட் பதடியா வாரவர் தாமே
சைவர்க்குத் தூக்கந் தருபவ ரவரே
தமிழ்சைவம் பேணுந் தரமவர்க் கின்றே
யவர்க்குயர் நிலைதகா தாற்றள்ளப் பட்டுப்
பெயர்ந்து படிகொடு பின்னுறை வாரே
யாகலி னறிஞர்தா மாவார் பகவரே
தமிழகக் குருமடந் தாம்பல வாயினு
முலக குரவ ரொருவ ரவராணை
தாங்கிய கிளைமடந் தாம்பிற மடமெலாம்
மடபதி யாவரு வாரெலாந் தமிழர்
(ரு ங அ) அதாஅன்று,
சமயா சிரியர் தம்பெய ராலுங்
குருமட முண்டாய்க் குலவுவ சிலவே
குருப்பட்டத் தவர்முதற் குருவின் பெயர்கொள்வர்
குடிலர் செயலாற் குழப்படி யுள்ளாய்
மூவேந்தர் தம்மின் முரணி யுழல்கையிற்
றலைமைக் குரவரின் றரங்குறு கிற்றால்
பழைய குருமடம் பலவாச் சிதறின
மறைந்தன சிலமுது மரபினின் றனவே
யெவ்வெக் குருமட மெத்திறன்
(ரு ச அ) விளங்குமத் திறன்பேணல் வேந்தர்க்குக் கடனே.

## சூ. மணமுறை

**களவு கற்பெனக் கண்ணிய விருமண**

**வாற்றுப் படுத்தரு ளாணை வழியறன்**

இரண்டும் வழாஅ தியலுந் தமிழக

மரபு வழக்கே வழிவழிச் சிறந்தது

புணர்ந்துடன் போகிய காலையுங் கற்புப்

பற்றித் திகழ்வது பண்டை வழக்கே

யந்தண ரரசர் வணிகர்வே ளாளரென்

றவிர்மே லோர்குடி யறுமுத் தொழிலாளர்

குடியிவ் விருபாலிற் குழப்படி செய்து

தள்ளப் பட்டுத் தணந்தறி வுற்றபி

னொழுங்குகைக் கொண்டுயர் வுறுபுறக் குடியிவை

முப்பால் புரிமண முறைமுது வழக்கே

மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்

கடையர் கைக்கொளுங் காலமு முண்டே

ஆசார் வடிவுல காயத நூலும்

மயலார் மாயா வாத நூலு

மாங்கா லத்தை யடுத்துத் தாலகர்

கேண்முளை சுவேத கேது வையர்

மணமுறை யறியா வடவர் தம்மிலுஞ்

செயப்பட யாத்தனர் தென்ன ரியறழீஇ

யதைப்பா ரதத்தி லாதி பருவத்து

நூற்றிரு பத்தெட்டி னுவன்றனன் பாண்டுமன்

குந்திக் கதையுளங் கொளுந்தவர் தேர்வர்

மணமுறை முன்னிலை வடவர்க் கென்பது

வழிவழித் தமிழக மணமுது வழக்கே

(ருளச) முது மணம்

பிள்ளை மனைக்குப் பெண்ணை யழைத்துவந்

தியம்பறு நாண்மண மேழா நீர்ச்சடங்
காற்றி வழிவழி யறம்பேண லியல்பே
பெண்வீட் டிற்குப் பிள்ளையை யழைத்துவந்
தாங்குத் திருப்பூட் டயர்தலு முண்டே
யிடம்பொரு ளேவ லியல்பாந் தரத்திறங்
கொண்டியன் மணமிரு கூறா காதே
பெண்ணிற்குத் தாலி பிள்ளை கட்டலின்
பிள்ளைக்கத் தாலி பெண்கட் டாமையி
னாளன் பிள்ளையு மாட்டி பெண்ணு
மாகலி னரசமைச் சாயே வாழ்தலின்
பெறுவிப் பான்றவன் பெறுவாள்பெண் ணென்றலின்
பேறிரு வர்க்கும் பெரும்பொரு ளாகலி
னீரிடத் தெங்கே யியலினுங் கைப்பிடி
யொன்றே யாக வுகக்குந் தமிழக
மைந்துபொன் பெறினு மாயிரம் பெறினும்
பெண்வீட் டார்பொன் பெறாச்செல விடினும்
மணத்தின் வேற்றுமை வகுக்கமாட் டாரே
†வடவரி னெண்மண வழக்கினுட் படாத

---

†வடவரினெண்மணம் - பிரமமும், தெய்வமும், ஆரிடமும், பிரசாபத்தியமும், காந்தருவமும், ஆசுரமும், இராக்கதமும், பைசாசமுமாம், அவைவருமாறு:-

1. பிரமம் - பெண்ணைப் பெற்றவன் வலிதே தேடிப்போய், ஒருவனைத் தெரிந்தெடுத்துக் கொணர்ந்து, தன்செலவாற் றாலி கட்டிவைத்து அவரது வாழ்க்கைக்கு வேண்டப்படுவன முற்றுங் கொடுத்தல். பெண்வீட்டுப் பணஞ் செலவாயிருத்தலின், அப்பெண் வயிற்றிற் பிறக்கும் பிள்ளையினது நல்வினையினாலே இருபத்தொரு தலைமுறைக்குப் பெண்ணைச்சார்ந்தவர் துறக்கத்தின் வாழ்வர். (அறநிலை).

2. தெய்வமணம் - வேள்விகளிற் கைதேர்ந்த ''இருத்துவிக்கு'' எனப்படும் ஆசிரியன் பெண்ணைப் பெற்றவனிடத்துக் கேட்டால்,

தமிழக வழக்குத் தனிச்சிறப் பதுவே
புதுவதைத் தொன்மை பொருமெனன் மடமே
யவண்டொல் காப்பிய ரறைந்ததுண் டேயெனின்
றுறையமை நல்லெனற் றூக்கி யடக்குக
(ருகூஅ) தமிழ் நாட்டில்,
அப்ப னுடன்றோன் றத்தை மகளு
மம்மை யுடன்றோன் றம்மான் மகளு
முறைப்பெண் ணாவர் முறைப்பெ ணலங்கடை
யொரோவழித் தமக்கை யுழிமகட் கொள்வ
ரில்லெனி னிம்முறை யினர்மகட் கொள்வ
ரன்றெனிற் றம்மு ளயலார் மகட்கொள்வர்
வழிவழி யாவரு வழக்கிது வாமே

---

யாதொரு தடைசொல்லாமல் ஒப்புக்கொண்டருள, இருபாற் செலவுடன் மணந்துகொள்வது, இவள் வயிற்றுப்பிள்ளை செய்யு மறத்தால் பதினான்கு தலைமுறைக்கே பெண்ணைச் சார்ந்தவர் துறக்கம் பெறுவர். (ஒப்பு)

3. ஆரிடம் - அன்றைக்கு நடைபெறும் மணவேள்விக்கு வேண்டப்படும் பசுவுமானு மொன்றோவிரண்டோ கொணர்ந்து தருவோனுக்குப், பெண்ணை யணிசெய்து தீ முன்னர். மணந்து கொடுப்பது, இவள் வயிற்றுப்பிள்ளை செய்யுமறத்தால் ஏழுதலை முறைக்கே பெண்ணைச் சார்ந்தோருக்குத் துறக்கவாழ்வுண்டாம். (பொருள்கோள்).

4. பிரசாபத்தியம் - பிள்ளைவீட்டார் வேண்டின், பிள்ளையினது குலமும், ஒழுக்கமும் பிடித்திருக்குமாயின் ஒப்புக்கொண்டு பெற்றோன் பெண்ணையணிசெய்து பிள்ளைவீட்டிற் கழைத்துக் கொண்டு வந்தருளத் தீமுன்னர் மணந்துகொள்வது இப்பெண்பெறும் பிள்ளையினது நல்வினையால் பெண்ணினது குடும்பத்தாருக்கு மூன்று தலைமுறைக்கு வீடுண்டு. (ஒப்பு)

5. காந்தருவம் - கேட்பவரூங் கொடுப்பவரு மின்றிப் பெண்ணும் பிள்ளையும் நேர்பட்ட இடத்தில் உடன்பட்டுக் கூடுவது. இவள் வயிற்றுப்பிள்ளைசெய்யும் நல்வினை தீவினைகள் கலந்தொருதலை முறைக்குப் பயன்றரும். (யாழோர் கூட்டம்.)

யயலார் மகட்கொளி னவர்குழூஉம் பந்தரி
லொருவரை யொருவ ருணர்ந்தறி யாரெனு
மினத்தவ ராகலி னெங்கெனு மொட்டுண்மை
யளவளா மங்குளா ரறிந்துவப் பாரே
யுணர்மண வீட்டா ருசாய்முக மன்செய்வ
ரறிய வறியமற் றவருநன் றாற்றுவர்
மணத்திற் பழங்குடி வலிமை யெளிமை
மொழிதற் கிலாவணம் மொய்சுரு ளுண்மையின்
மகிழ்வருள் சிறப்பா மணநடை பெறுமே
பிள்ளைவீட்டார்மொய் பெண்வீட் டவர்சுருள்
தருமப் பெயரே தம்மொய்க் குழாமும்
மகள்வழிச் சுருள்கேள் வளைக்குங் குழாமும்

---

6. ஆசுரம் - பெண்ணைப் பெற்றவனுக்கும், ஞாதிகட்கும், இவ்வளவென்று வரையறுத்துப் பொருள் கொடுத்துப் பிள்ளை வீட்டுச்செலவு செய்தே மணந்து கொள்ளுதல். இவள் வயிற்றுப் பிள்ளை புரியறத்தால் பிள்ளையைச் சார்ந்தவருக்கே வீடுண்டு (அரும்பொருள்வினை,)

7. இராக்கதம் - மூடன், கிழவன், பிணியன், முடவன், இன்னோரன்ன வெவனாயிருப்பினும் பெரும்பொருள் தருவோனுக்குத் தான் பெற்ற பெண்ணைக் கொடுப்பது, பிறன் பெண்டைத் தன் வலிமையா லெடுத்துவைத்துக் கொள்வதுமிது. இவள்வயிற்றுப் பிள்ளை கணவன்கோத்திரத்தையே யுயர்த்தும்.

8. பைசாசம் - உறங்கி மெய்மறந்து கிடப்பவள், கட்குடித்தறி வழிந்துகிடப்பவள், அறிவுமயக்கங்கொண்டலைபவள், பேய்க் கோட்பட்டவள்; இன்னோரன்ன பெண்களைச் சேர்தலும், மருந்தீடு முதலியவற்றால் வயப்படுத்துக் கூடலுமாம். இது செய்வோர் பேயுருவடைவர். (பேய்நிலை)

இம்முறை புதுவழக்காகக் கையாளப்படுவது. முற்காலத்தில் அறநிலை, ஒப்பு, பொருள்கோள், தெய்வம், கரவுக்கூட்டம், அரும்பொருள்வினை, இராக்கதம், பேய்நிலை என்ற வரிசையில் வழங்கிவந்தது அரும்பொருள்வினைக்கு முன் வழங்கிய பொருள் வேறு. அவர் நாகரிகப்பட்டபிறகு கண்ட இப்பொருள் வேறு.

தொடர்புயர் நிலைமை தோற்றுவிப் பனவே
மணக்கடன் கிடாதுடன் வருமெனல் பழமொழி
யேழையு மணத்திற் கெனக் கடன் பட்டில
னிரந்து மணப்பவ னிந்நிலத் தின்றே
யிரக்கின் றிலர்கட னேற்கின் றிலர்தர
மிழக்கின் றிலர்பிறர்க் கிளைக்கின் றிலரினத்
திகல்கின் றிலர்பிரி கிலர்முது குடியெலா
மிவர்செயல் பிழையென வெதிர்த்து வியாசர்
சுமந்துபை லநசி தோற்றடங் கினரே
**வடவரும் பின்றழீஇ யினர்தமிழ் வழக்கே**

(சூ உ அ) அதுதான்,
மணப்பந் தரினமை மணவரை யின்கண்
சைவா சிரியன் றானமைந் தருளி
முன்னோன் றொழுகை முதற்றான் றொடங்கி
சிவமே சிவையே சிவன்சிவை மகவே
சிவப்பொருட் பிழம்பே சிவனருள் வடிவே
ஓம்பொரு ளாளா ஓம்பொறி முகத்தோய்
ஓமிடத் துறைவோய் ஓமொலி வடிவே
முழுமுதற் பொருளே மூத்த பிள்ளாய்
முன்னிற்கு முன்னவ முக்க ணுடையாய்
முச்சுட ராயோய் முழுதுல காள்வோய்
மூவர்க்கு முதல்வாமுத் தமிழ்த் தலைவா
தமிழா சிரியா சைவா சிரியா
தமிழ்ப்பழம் பதியாய் தமிழ்வல் லவைநாத
சித்த ரகத்தவ சித்தி துணைவா
புத்தி துணைவா புகழமிழ் தேந்தி
விரிந்த செவியாய் விரிமறை யுணர்வே
வேத விளக்கே மேன்மைநன் கருள்வோய்

துதிக்கைக் குரியாய் தும்பிக் கையாய்
தொண்டர்க்குத் துணைவா தொல்குல தேவே
அன்பர்க் கன்பா அடியார்க் கெளியாய்
அன்பகம் புரிவோய் அருள்பதித் தருள்வோய்
பீடைதீர்த் தருள்வோய் பிணிக்கு மருந்தே
பேழை வயிற்றோய் பெரிதுணத் தருவோய்
கட்டியாள் கயிற்றவ காட்டியாள் தோட்டிய
கவ்வைத் துணையே கடவுட் கணபதி
தண்டைக் காலாய் தண்ணரு ளாளா
அறுமுகன் றமையா அழகிய மணாளா
உகந்தினி தருள்வா யோமெனு மறையைப்
போற்றி முடிசூட்டிப் பொருந்த வழிபட்டு
அருள்வளர் முக்க ணப்பநின் றிருமுன்பு
நின்னரு ணோக்கா னிகழ்மணம் நடைபெற
ஊறுதீர்த் தருளி யுறுதுணை யாய்நின்று
நன்கு நடாத்தி நலனெலாம் புரிந்து
பிள்ளையும் பெண்ணும் பிரிவிலன் பார்ந்தே
யில்லறம் பேணி யின்பந் திளைத்து
நன்மக்கட் பெற்று ஞயம்பட வாழ்ந்து
தமிழ்மணங் கமழுஞ் சைவந் தழீஇநல்
லால்போற் றளிர்த்தே யறுகுபோல் வேரூன்றி
மூங்கிலி னனசுற்றம் முசியாமல் வாழ்வோங்கிப்
பல்லாண் டுறக்கண் பார்த்தருள் கென்று
நறுமலர் தூவி நன்கு வணங்கி
(சூ எ ய) வேண்டுதல்செய்து,
விளக்கொளி திருவென விளங்கன் பார்ந்து
வழிபாடு தொடங்கி மணமலர் தூவி
யருளே போற்றி யறிவே போற்றி

யறன்வளர்த் தொளிரு மம்மே போற்றி
முயல்வினை போற்றி முச்சுடர் போற்றி
யிறைமுக் கண்ணா மிறைவி போற்றி
அம்மே போற்றி யாருயிர் போற்றி
திருவே போற்றி திருமுன்னர் நடைபெறு
நன்மணஞ் சிறப்ப நல்லருள் புரிந்து
மணமக்க ளாமன்பர் மகிழ்மெய் நலமும்
விளைநன் னிலமும் விளங்கறப் பொருளும்
நல்லுற வினரும் நல்லறி வுடைமையும்
அன்பே வலரும் ஆண்மைத் திறமையும்
அறிவுயர் மக்களு மாமெட்டுச் செல்வங்கள்
திகழ்தர விளங்குந் திருக்கண் சாத்திப்
பல்லாண்டு வாழப் பல்லாண் டருளி
யறநெறி நிறீஇயின் பருத்தி வீடருள்
செய்தல் வேண்டுஞ் செந்தமிழ்த் திருவே
யொளிவடி வாய வுமையருட் டாயே
(சூ கூய) யெனவேண்டிப்,
பணிந்தருள் கொண்டு பானிறை நாழி
தனையற வடிவாத் தானினை வுற்று
நல்லறங் கும்பிட னயந்து தொடங்கி
யறமே போற்றி யருந்துணை போற்றி
யறவாழி யந்தண னாணை போற்றி
துறவறம் பெரிதெனச் சொல்லமுன் னின்ற
யாக்கை நிலையரு ளன்னமே போற்றி
யில்லறந் துறவற மெனுமீ ரறந்தரு
நல்லறம் பேண நடைபெறு நன்மண
மக்களு னன்பர் மகிழ்வா னருள்செய
நாளுந் துணையாய் நயனரு ளம்மே.

(எாஉ) எனவும்,
வழிபாடு செய்து வழங்கருள் பெற்று
மணமகன் றனையு மணமக டனையும்
முன்பின் வரித்து முறைநினை வறிக்கை
பண்ணுதல் குரவர் பண்ணத் தொடங்கி
சிவனருட் செயலால் சிறந்தநல் லூழால்
வாய்த்தநற் செல்வியை மங்கல நிறைந்த
நன்னா ளிதனில் நல்ல ஓரையில்
ஓங்கறம் பேணற் குற்ற துணையாய்
ஒருயிர் இரண்டுமெய் யுறைதலி னிருந்தே
யன்புற் றின்பார்ந் தவிர்மக்கட் பெற்று
வளர்த்து வாழ மணப்பா னருளா
லிணக்கிய சிவைதவன் இனிதருள் செய்கவென்
றுறுமன தறிக்கை யுஞற்றி மகற்கொடு
பிள்ளையார் திருஅறம் பேணுவித் தருளி
குருவரு ளான்மணக் கூறையை யெடுத்து
''சிவன்சிவை போலச் சிறந்து வாழ்க'' வென்
றருளி மகட்குமவ் வாறுசெய் துய்ப்பார்
மகணினை வறிக்கை வழுத்துங் காலை
செல்வியை யெனுமிடைச் செல்வனை யென்பர்

(எஉஉ) அதன்மேல்,
மந்திரக் கூறை வாங்கி யுடீஇமகிழ்
மணமக்க டம்மை வரித்தருள் குரவர்
பிள்ளையார் திருஅறம் பேணுவித் தருளி
மணமக னறிவுறூஉ வழங்கச் செய்வர்
பெற்றோர் தேர்ந்து பெரியோ ரிணங்கி
கற்பறி வொழுக்கங் காதாரக் கேட்டு
வாழ்க்கைத் துணையா மணக்க வுடன்பட்டுப்

பட்டோலை தீட்டிய படிநல் லோரையில்
கண்ணாரக் கண்டு கருத்தொருப் பட்டே
உற்றார் உறவினர் ஊராருஞ் சூழ்ந்த
மணப்பந் தரின்கண் மணவரை புக்குச்
சிவகுரு சான்றாக சிவமுதல் சான்றாக
சிவைத்தாய் சான்றாக திருஅறஞ் சான்றாக
தெய்வங் கூட்ட திருவாளர் வாழ்த்த
எனதுடல் பொருளுயிர் ஈந்தன னுனதா
இரண்டுட லோருயிர் என்குடி நின்குடி
எனநினைந் தெனையாண் டினிதின் பருத்தி
நன்மகார்ப் பெற்று நற்குடி தழைப்பான்
அருள்பதி யறம்பெரி தாகலி னன்பார்ந்
தில்லறம் போற்ற லினிதது செய்க
என வறி வுறூஉமக னியம்பித் தன்னை
யொப்பிக்கை செய்த லுகந்து கொண்டபின்
மணமகள் தானுமவ் வாறு வழங்குவள்
இதுகண் டருந்தவ மியற்றிப் பெற்று
வளர்த்தறங் கருதி வைத்துக் காத்தருள்
பெற்றவர் மகிழ்ந்துநம் பெண்ணுக்கு வாய்த்தவ
னறவோ னாகலி னறமாகு மென்றெழீஇப்
பெண்ணைத் துணையாகப் பெற்ற பிள்ளாய்
எமதுகா வற்பொறை யேற்றருள் பிள்ளாய்
கருதறம் பேணுதல் கருதிய பிள்ளாய்
மருமக னாவுனை வாய்க்கப் பெற்றேம்.
மகட்காப் பாம்பொறை வழங்கினம் நீயே
யினியிவட் காக்க விவளொடொத் துறைக
நல்லறம் புரிந்து நயக்க வறிவுயர்
நன்மக்கட் பெற்று நாளும் வாழ்க

வெனவாழ்த்தி மருகன்கைத் கேந்திழை தன்னைத்
தந்தை பற்றித் தாய்நீர் வார்த்துத்
தரப்பெறல் கைப்பிடி தானா கும்மே
தருமிது கன்னிகை தானம் மகட்கொடை
யெனவழங் குவது மிந்நில வழக்கே
பெண்ணின் வாழ்க்கை பெற்றோர்க் கினித்தலின்
கரும்பாங் கன்னலிற் கணித்திட்ட பேர்கன்னி
பைங்கழை யிற்காக்கப் பட்டவள் கன்னி
யப்ப னிடத்தம ரழியாத நாட்கன்னி
கன்னிகைப் பிடித்தீதல் கன்னிகை தானம்
தருதல் வினையடி தருதா வாய்க்கடை
அம்சா ரியைபெற் றாந்தானப் பொருள்கொடை
இப்பொரு ளறிந்தோர்க் கிவை தமிழ்ச்சொற்கள்
கன்னிநா டெனுவழக் கத்தைக் கடிவரார்
(எஎ உ) பின்னர்,
தலைவன் றுணையாந் தலைவியைக் குடிக்கொரு
தலையா வைப்பத் தளைவதாந் தாலி
யரசுதன் றுணையா மமைச்சன் றனக்குத்
தருமுத் திரியிற் றளைவதாந் தாலி
மறையிலா முத்திரி வாங்கவும் பெறுமே
வாங்கொணாத் தாலி மந்திரத் தாலி
ஆகலின் பிள்ளையா ரருளுருப் பொறித்த
தாலியைச் சிவகுரு தான்சிவ னாகி
வாழ்த்தித் தரப்பெற்று மணாளன் மகிழ்ந்து
சிவகுரு சான்றாக சிவமுதல் சான்றாக
சிவைத்தாய் சான்றாக திரு அறஞ் சான்றாக
அரசுனா னரசிநீ யமைச்சும் நீயாய்
நல்லறம் பேணி நங்குடி தழைப்ப

விரண்டுட லோருயி ரெனவொருப் பட்டமை
அயற்குடிப் பிறந்தவு னகத்தி லிருப்ப
வணிவதித் தாலி யானுள வரையு
மெனைப்பேணி யென்குடி யினிதுபே ணிடவுனைக்
கட்டுப் படுத்திடக் கட்டுநன் மகிழ்ந்து
தருகெனக் கழுத்துத் தரத்திருப் பூட்டு
நடைபெறும் பல்லியம் நன்கு முழங்கிட
வதுமங் கலநா ணணிதல் திருப்பூட்டல்
தாலி கட்டெனத் தான்சொலப் படுமே
கலித்தலொ டிவர்நன்மை லியாண மாமே
கலித்த லொலித்தல் கவின்யாணர் நன்மை
மங்கல மென்று வருசொலுந் தமிழே
மங்குத லடிமங்கு மற்றல மலாதது
வடவர் திருப்பூட்டு வழக்குமுன் னின்றே

(ஆ) இதன் மேல்,

அறுசுவை பறிமாற லாளனுண் கலத்துணல்
மெய்நலந் திளைத்தல் மிளிர்மண வினையே
உறுதி மணப்பட் டோலை யெழுதல்
மணமக்க டம்மில் வழங்கு கொடைசெயல்
கைப்பிடி யாற்றல் கழுத்தணி பூட்ட
லுண்கலத் துண்ண லுடனலந் திளைத்த
லாகிய வாறுறுப் பார்ந்தது மணமே
செல்வ ராறுநாட் செய்வது வழக்கே
காலையு மாலையுங் கடமைசெய் தாறு
வேளையி லறுவினை மிக்க செய்வாரே
காலை நடுமாலை கடமைசெய் திரண்டு
நாளையி லறுவினை நடத்துவர் மிக்கோ
ருறுதிமுன் னாளி லுஞற்றிக் காலை

யுறுமூ வினையாற்றி யுச்சி கலன்றழீஇ
மாலை நிறைவாற்றி மகிழ்வொடு மெய்நல
னார்த லொருநாளி லாற்றுவர் சிலரே
யாறுமூன் றிரண்டொன் றாயிவர் நாட்கொடு
மணத்துயர் விழிவு வகுக்கிலர் மேலோர்
செலவே தரந்தரந் திகழ்தரு மன்றி
மணமக்கள் பெரீஇக்குறீஇ வாழ்க லின்றே
கூட்டமுங் கொண்டாட்டும் குறீஇப்பெரீ இப் போமே
யிருப்பார் மணமக்க ளிற்கணுள் ளவரே
வழிவழி யிங்ஙனம் மணப்பது வழக்கே
(அஉச) அதா அன்று,
சிவக்கனல் வளர்த்தல் சிவகும்பம் வைத்த
லவிர்முளை தெளித்த லரசாணி கட்ட
லூச லசைத்த லுயர்மண வரைசுற்ற
லம்மி மிதித்த லருமீன் காட்ட
லேத்தி யிறக்க லிசைபட வாழ்த்த
லறுகிட லாட லாலத்தி சுற்றல்
ஊர்வலன் வரன்முத லொவ்வோர் குறிக்கொண்
டிடையிடை நடைபெற லிந்நில வழக்கே
யிங்ஙன மணவினை யியன்று
(அரு ச) பிள்ளையும் பெண்ணும் பிரிவின்றி வாழ்வரே.

## எ. இரண்டறம்

பிள்ளையும் பெண்ணும் பிரிவிலன் பார்ந்திங்
கழகிய குடும்ப வரசா யமைச்சா
யறம்பொரு ளின்ப மவாய்ச்சிறந் தவற்றி
னறம்பற் றியவொழுங் கறிந்து புரிந்து
மதிப்பரு ளுழவு வணிகம் வரைவு

கைத்தொழில் சிற்பங் கலையறி வென்ற
வாறு தொழிற்க ணவரவர் பயின்ற
வொருதொழிற் றிறம்பெற வுஞற்றித் தேடி
வைத்துண் டின்ப மறைவழித் துறைதேர்ந்
துடனலந் திளைத்துல குயரிய குடியாய்
நன்மகார்ப் பெற்று நல்வழிப் படுத்து
வளர்த்தொன்று பத்தா வருகுடி பல்கிப்
பெருக வாக்கிப் பெரும்பொரு ளுலகை
யழகுறச் செய்வதில் லறமெனப் படுமே
யன்னவில் லறத்தைநல் லறமென்ப மேலோர்

(அ௫ய) அறவோரில்,
ஆடவன் றானுழைத் தருளலு மவன்மனை
யுழைத்திடு கணவற் குணவாக்கி யூட்டலும்
மக்களை வளர்த்தலும் வளர்குடிக் கண்ணுள
மூத்தவர்ப் பேணலும் முறையுடன் பிறந்தோர்த்
தாங்கலுந் தாய்வழி தந்தை வழிகொண்டு
கொடுத்த வழியிம்முக் குடிக்குநன் காற்றலுந்
துறந்தவர்க் கிடுதலுத் துவ்வா தவர்க்குத்
தருதலுந் தொழிலாளர் தமக்கு வழங்கலுந்
தென்புலத் தார்தெய்வம் விருந்தொக்க லின்புறக்
கடப்பா டருளலுங் கடவுட் பணியெனக்
கருதுதல் வழிவழி கற்றவர் வழக்கே
தானுண லிறைவன் றருதேகங் காப்பா
னிறைதே கவ்வுயி ரேறிய முதன் மெய்
தேவுயிர்க் குயிராத் திகழுயிர் மெய்தேக
மதுபே ணாவிடி னறம்பேண லின்றே
செய்வித் திடலுஞ் செய்தலு முழைப்பே
யுழைத்துத் தேக மோம்பி னதைவைத்து

நல்லறம் பேணி நலம்பெற லாமே
யுள்ளுறை யிறையை யுணர்ந்துய்ய லாமே
யருணலன் மறவா வதூஉமிறை பணியே
யரசுதன் னாட்டைநன் காள்வது போல
வவரவர் குடியாட்சி யவரவர்க் குரித்தே
யாள னறத்திற் காந்தொழி லாள
ரெவரையும் பேணுத லிறைபணி யாமே
யுண்ணக் கிடையார்க் கூட்டுவோ னிறைவ
ன தூஉஞ்செய லிறைபணி யாமென வறிக
விருந்து புறந்தரன் மெய்த்துற வோர்க்கிட
லவர்தம் மிறைபணிக் காகலி னிறைபணி
பெற்றோர் குரவர் பெருமா னடியார்
வீடடை நாள்விழா மேலவன் பணியே
யீன்றவ ருயிரோ டிருக்குங் குரவ
ராலயம் பேணலு மரன்பணி யாமே
பெற்றவ ரின்றேற் பிறக்கில மாசான்
கற்பித் திலாவிடிற் கண்டில முண்மை
யாசே குற்ற மாவெதிர் மறையே
வாசிலா தாசறுத் தறிவருள் பவனாசா
னவனுணர்த் தியசெய லரன்பணி யன்றோ
வுயர்முச் சுற்ற மொக்க லுடனளாய்
வாழ லிறைபணி வழாதமைப் பதுவே
யின்னன மெய்கண் டில்லறத் துறைதவர்
தணாதறம் பேண்மகத் தரலு மிறைபணி
யத்தகு பொறைக்குடி யரசிவ ராகலின்
போற்றிய வறமும் பொருளு மின்பமும்
நிலைத்து மேலவாய் நிகழ்வெறுப் பிவர்கால்
வருநிலை திருவருள் வழங்கிய மேனிலை

யெலாமிறை பணியென வெண்ணு மிவர்தம்
நினைவின் படிதவ நிலையதாய்த் தம்ம
(அகூஅ) வதன்மேல்,
அரசினை யொன் றுபத் தாகப் பகிர்ந்திட்டு
மக்கட் காட்சி வழங்கித் துறவறம்
பற்றி யிறைவழி பாட்டிற் பொழுதோட்டுந்
தவத்தமர் வாரிது தமிழகத் துறவே
யிடம்பொரு ளேவ லெல்லா மிருந்து
மவைபொருட் படுத்தவற் றழுந்துத லொழிந்து
சிவவழி பாட்டிற் றிறம்பாமை துறவே
தவந்துற வெனவேறு தமிழகத் தின்றே
சித்தஞ் சிவன்பாலாய்ச் சிறக்கச் சிறக்க
விரண்டற்றுத் துய்க்குமின் பினிதுகை வருமே
யந்நிலை யருளா லணைவிப்ப தாமே
யெடுத்துச் சுமந்துதா னேதரு வானிறை
யீதா கொடுவென விரப்பதிங் கின்றே
தொண்டர் மைந்தர் தோழர் துணையிவர்க்
காவ தறிந்துசெய் வார்தமிழ் மக்கள்
தங்கடன் றவறாத தமிழக மக்கட்குப்
பிரான்முற் றறிவினன் பேரறி வினனா
லாவ தருள லவன்கட னாமே
யாய்சோ றிடுபசி யாற்றே னெனவழு
மகப்பதத் தவர்வேண்டல் வழுவா காதே
யஃதறி யறிஞ ரறவோ ரந்தண
ரெனப்பட் டுலகெலா மிறைஞ்சத் திகழ்வ
ரிருப்பிடன் விட்டிவ ரேகலு மின்றே
யேகினு மறிவுறுத் திருத்தல் வழக்கே
திருவருள் பதிந்து செலுத்துந் துணையுடை

யிவர்பிழைக் காளா யிடல்வழக் கின்றே
தென்னா டுடைய சிவனாஞ் சைவ
னெந்நாட் டவர்க்கு மிறைவ னாகலின்
வேண்டுவார் வேண்டுவ வேண்டியாங் கருள்செய்
முதல்வனா யிருந்து முறைசெயல் வழக்கே
யதுதமி ழகமய லார்க்கருண் முறையே
யிம்முறை யறிந்திங் கிறைபா லிடையறா
வன்புவைத் துளத்தவா வற்றவர் துறவோ
(கூ௩ ௨) ரிவர்முன்பில்,
இருங்குடும் பப்பொறை யெடுத்தற் கஞ்சியோ
வேலா மையினோ வில்லா மையினோ
தரம்பிழை பட்டோ தவறினுட் பட்டோ
பிறப்பிழி பாலோ பெருமடி யாழ்ந்தோ
நோய்ச்சலுட் கொண்டோ நொய்மையுட் கொண்டோ
தூற்றுமில் லாலோ சோரவில் லாலோ
வேறுமா றாக வெதிர்க்குமில் லாலோ
தாய்பிழை கண்டோ தான்வெறிப் பட்டோ
தன்மடந் தீரான் றனிமடங் கட்டிப்
பொறியிலார் பணிந்தருள் பொருள்கவர்ந் துணவோ
வேறெது பற்றியோ வெளிப்படுந் துறவிகள்
தம்மிலு மெய்யர் தாமிருப் பாரே
பொய்வே டங்கொடு புலவுண லவினுணல்
கஞ்சாப் புகைக்குடி கட்குடிக் காளாய்த்
திரிதந் திறைபணி செயலறி யாரா
யலைவோர்த் துறவரென் றார்பகர் வாரே
யவரினுங் கொடிய ரருந்துற விகள்போல்
வேடமிட் டயற்புல வேந்துள வினராய்ப்
பெரிதறி வுறுமவர் பிறங்கறி விலராஞ்

செல்வரை யடுத்துநந் தேளத்துள வுணர்வார்
தேட்டங் கருதிச் சிலர்துற வினர்போல்
காட்டிப் பலர்பொருள் கவர்ந்துபின் விடுவ
ராசா னாய்ப்பல ரடித்தொண்டு செய்யக்
கற்றறிந் தவர்வேடங் கட்டிவாழ் குவரே
யவருல கைப்பிரித் தாளவல் லாரே
யவரிடத் துயர்நிலை யவரு மிருப்பரே
யித்தகைத் துறவிக ளியங்கலி னாய்ந்து
பேணுதல் தமிழகப் பெரியோர் வழக்கே
துறவா டவர்க்கெனச் சுட்டப் படாமையின்
மகளிருந் துறந்து மங்கைபா கன்றளிக்
கடிமைக ளாய்த்தே வடியரா யினரே
பரத்தைநா டவரைப் பரத்தைய ரென்பர்
பரமெனல் பெரிதாம் பருப்பொருட் பெயரே
பரந்துநிறை பொருளும் பரமெனப் படுமே
யவரூ ரூரா யலையமாட் டாரே
யவர்கோ யிற்கட் டளைப்படி பெறுவரே
யாடவர் துறந்துல கலைவது வழக்கே
யவர்க்கறச் சாலை யமைத்தூட்டுந் தமிழக
மவரி னிளைஞரை யடுங்கா மத்தீக்
காறுதல் தேவடி யாண்மாரருள்வ
ரதுமக வில்லார்க் கருவீ டிலையெனு
மயனூல் வழிப்பட்டிங் காமிடை வழக்கே
யாகலி னெண்ணான் கறத்திதூஉ மொன்றே
யவர்குடிப் பிறப்புவே றாகத்திகழுமே
திகழிட மாடத் தெருமாடக் குடிகுடி
புதுவதித் துறவும் பொறுத்தது தமிழகம்
வடவர் கலப்பால் வந்ததித் துறவே

மகளிர் துறவிங்கு மணாளன் வழிபாடே
யுடற்றுணை சென்றா லுயிர்த்துணை யாமிறை
வழிபாடு தானே மடவார்க் கழகே
யவர்வீ டடங்கி யான்பணி புரிந்து
வாழ்வது தானே வழிவழி வழக்கே
கோயிற் பணியிக் குலமாதர்க் கின்றே
துறவா திருப்பினுந் தொல்லைநல் லறவோ
ருயிர்பிரிந் தொருநா ளுடலும் பொருளுநீத்
தேகுதன் மெய்யாங் கிறந்தபின் றூய்த்தவர்
வழிப்பிறந் திடுமவர் மக்கடம் முன்னவர்
தேடிய பொருள்களைச் செவ்வே பகிர்ந்துகொண்
டாளு முயர்குடி யரசர்க ளாவார்
வழிவழி மரபு வழக்கிவ ணாமே
துறவவாந் தந்தைதன் றோன்றல்கட் குள்பொருள்
பாத்திடற் குரிமை படைத்தனன் மற்றவர்
பாத்திடல் வேண்டா பாரைத் துறந்தபின்
பாத்தெடுப் பார்தாம் பாத்துக்கொள் வாரே
பாத்திடென் றீன்றவன் பாற்கேட்குஞ் செல்வரைப்
பண்டைத் தமிழகம் பயப்பதே யின்றே
தந்தைதன் பொறைமைந்தர் தம்பால்விட் டிறைபணிக்
கேறுத றுறவஃ தின்றிச் சுமைதாங்கி
யாய்நின் றிறத்தறுற வாமையென் றறிக

(சூ ச) இதன்மேல்,

பிறந்தநா டொட்டுப் பிறங்குநல் லறத்தைப்
பற்றல ராகிப் படிக்க ணிரண்டற
வொழுக்க முலகுக் குரைக்குந ருளரே
யவருமில் லறந்தே ரறிஞரா வாரோ
வவருரை யில்லறத் தவர்கொள னெறியோ

வவருமில் லறமொளித் தறிந்தனர் கொல்லோ
வவருரை தவறின் றமைவது மென்னே
நுகர்ந்தவ ரினுமிக நுண்ணுணர் வென்னே
யெனச்சில பேசுவோ ரிந்நிலத் துளரே
யவர்முற் பிறப்பினில் லறநெறி திளைத்து
வெறுத்தவ ராகி விடுகுறை முடிப்பத்
தோன்றின ராகலிற் றொல்லறி வுடைமையின்
படியுயர் தற்குப் பகர்வது வழக்கே
யுயரறி வின்முற் றுப்பே றுடைமையின்
பிறக்கும் பொழுதே பெரிதறி வுடையராய்
மதிக்கப் படுமவர் மாண்பு பெரிதே
யிம்மையில் லறமுற்றி யிறைவழி பாட்டமர்
துறவிமே லிவர்நிகர் தோன்றுதல் வழக்கே
யாகலி னிவருல காட்சி
(சூ உ ச) வெறுத்தன்பர்ப் பேணுவர் விடுமிவ னருளே.

## அ. முதுகுடிவகை

அந்தண ராகிய வாசிரி யக்குடி
யரைய ரெனுங்கரை யாளர் பழங்குடி.
செட்டிப் பட்டந் திகழ்வணி கக்குடி
சேண்டுலை துவ்விற்குச் சேர்மானப் பொருள்வரும்
முதல்குறீஇச்செண்டாய் முரணுற்றுச் செட்டாய்த்துத்
திரைகடல் சென்றும்பொன் றேடுவர் செட்டிகள்
செட்டு சிக்கனம் செலவிடார் செட்டிகள்
செட்டு வணிகஞ் செய்பவர் செட்டிகள்
வண்மிக லிகுத்தல் வழங்க லடியிகு
வணிகர் மிகுதி வழங்குவோ ராவர்
வண்மிக லீகைபொன் வணிகர் மிகுசெல்வர்

இடைகுறீஇக் கைகவ்வா யியன்றபேர் வணிகர்
வணிகம் பொருள்மிக வளர்க்குந் தொழிலே
மிகுகா ராளராம் வேளாளர் நற்குடி
காலுதல் பொழிதனீர் கால்வது காரே
கார்பொழி நீருங் காரெனப் படுமே
வேளாண் மாந்தர்க்கு வேண்டப் படுமந்தக்
கார்ச்சிறை செய்தாளுங் காரணத் தாலவர்
காராள ரெனவும் கழறப் பெறுவரே
வேளாண்மை செய்பவர் வேளாள ரானா
ரிந்நான் கினத்தரு மிப்ப ரெனப்பட்டு
முதுகுடி யாரெனு முதன்மை படைத்தன
ரும்பரின் வலாரென்றொ ரொற்றுக் காட்டலி
னிப்பரென் றிடலும்ப ரெளிமைக்குச் சான்றே
படைப்புக் காலந் தொடுத்துப் பயிலற
வொழுக்க மிவர்பா லுறுதிபெற் றிருத்தலின்
றமிழ்மக்க ளிவரே சைவ ரிவரே
யிவர்தமி லொருகுழா மிவர்ந்துதென் சோணாட்
டமர்ந்தனர் காரைவே ளாளராய்ச் சிறந்தார்
மற்றொரு குழாமெழீஇ வடசோ ணாட்டி
லமர்ந்தனர் முதன்மைவே ளாளராய்ச் சிறந்தா
**ரந்தண ரரையர் வணிகர்வே ளாளரென்**
**றுரைக்கப் படுமிவ ரோரினத் தாரிவர்**
முதுகுடி பழங்குடி முதற்குடி நற்குடி
பசுங்குடி யுயர்குடி யெனப்பெயர் படைத்தன
ரிவர்தமி லொழுக்கத் திழுக்கிய சிலர்பிரிந்
தொழுக்க முடைமை குடிமையென் றுணர்ந்தபின்
வேந்த னிடந்தர மீண்டுவந் துகந்துசெய்
பதினெண் டொழிலாளர் பதினெண் குடியே

மற்றிவர் தாமும் மக்க ளொழுங்குகொண்
டன்புடன் மக்களி லமர்ந்தன ரிருப்பர்
தலைவரு மிடையருந் தமிழகப் பண்டியல்
பற்றித் தமிலொருப் பட்டுவாழ் வாரே
வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி
தொன்மை யுழவர்க்குத் துணைபிற தொழிலெலா
மாகலி னுலகுழ வதுபேணி வாழுமே
(சூ எ உ ) யுழுதுண்ணல்,
மேன்மைய தென்று விளைபொரு ளாக்கி
நாளுஞ் சிறப்புறு நம்பிக ளாயின
ரிவர்தமி லொருநிலத் தெடுக்கும் விளைவுகள்
விளையா நிலத்துக்கு வேண்டப் படுபவு
மங்ஙன நிலந்தொறு மாக்கும் விளைவுக
ளில்லா நிலத்தா லெடுக்கப் படுபவு
மிஞ்சி விளைபொருள் வேண்டப் படுநில
னடையப் படுபவு மாவன வாகலின்
வேளாளர் தமிற்கொண்டு விற்றற் கியைந்து
செட்டு விழைந்தது செயச்செட்டி யாயினர்
பண்டமாற் றுதல்செட்டி பண்டை வழக்கே
காலந் தொறுங்கொண்டு கட்டிவைத் துக்கொடு
நாடொறும் விற்றலும் நடப்பா யிற்றே
பொன்னுக்கு மாற்றுதல் புதிய வழக்கே
மாக்க ளிவர்பால் வழிப்பறி செய்தலும்
வேளாளர் தம்பால் விளைபொருள் கவர்தலுந்
தொடங்கிய நாளது தொலையக் கரையாளர்
குழீஇத்தங் குடியிலோர் கோனெடுத் தமைத்தலி
னரையர் குடியது வாகிச் சிறந்ததே

யிம்முக் குடிகட்கு மிரண்டறங் கற்பித்துத்
தீக்கை செய்முறை சிவாலய வழிபாடு
கழிப்பவு மறிவுநூல் கழறவு மாராய்ந்
தெடுத்துவைக் கப்படு மிறைவரா சிரியர்
மந்திர நீராட்டி வைக்கப் படுமவர்
தமக்கு முதலிடந் தமிழகந் தருமே
**யிவளவி னாற்குடி யென்னப் படினு**
**மொருபந் தியிற்கூடி யுண்ணுவ ரிவரே**
**கொண்டு கொடுத்துக் குலாவுவ ரிவரே**
**யாகலி னோரினத் தவரென வறிக**

(சூா உ) அடுத்தோர்,
பிறங்குமுன் னோருடன் பிறந்தவ ரெனினு
மொழுங்குவிட் டடங்கா தொரீஇமீண் டமையி
னொருகா லழிந்துணர் வுற்றுத் திருந்திய
மடவார்க்கும் மாசற்ற மானார்க்கும் மாற்றங்
காட்டுங் காட்சியிற் கடவு ளருளியன்
மதிக்கப் படுவணம் வரம்பறுத் திருப்ப
ரன்னவர் தொழிலாள ராகலி னலுப்பற
வூனுக் கூனிட லுறுதி யென்று
முதிரந் தேனுக் கூறு மென்று
மூன்றே னுண்ண லுகந்துகொண் டாரே
யிஃதுயர்ந் தவரோ டிவரைப் பிரித்தது
சிலரிவர் தமிலூன் றேனுணல் விட்டார்
விடினுமொர் பந்தியின் மேயிவ ருண்பரே
கொளலுங் கொடுத்தலுங் குடிமாறிச் செய்கில
ரவர்தமிற் றீர்த்து மறுத்துங் கட்டிலர்
சிலரதூஉ மாமெனச் செய்துவந் தாரே
யிதினு மிழுக்கினோ ரினத்தைவிட் டகல்வா

ரொவ்வொரு குடிக்குமொவ் வொருமூப்ப ருள்ளார்
நகர்தொறு மவர்க்கொடு நடைபே ணுவரே
யிவர்தமி லறாததுண் டேற்றீர்ப்பர் கரையாள
ருலகியல் பேணு முயர்ந்தோர்க் கிவர் துணை
யின்றே லவராணை யெதுநட வாதே
யடங்கா தெவர்நிமிர்ந் தாரவர் சுள்ளாணி
யெனும்பெறத் தொழிலாள ரீகில ரதனாற்
கட்டுக் கடங்கிக் கடவு ளருளிய
னடைபெற லாய்த்திந்த நாட்டி னம்ம
கரையாளர் காப்புத் தொழிலாளர் கைபார்த்த
தாகலிற் காப்பாள ரவரோ விவரோ
வண்ணரு மிளைஞரு மாவற னிறீஇவாழ்வர்
மற்றிவ ரொற்றுமை மதிக்கத் தக்கதே
யறம்பொது வாகலி னவரியைந் தோம்புவர்
பிரிந்த விளைஞரிற் பேணுவ ருயர்ந்தோ
ரிருபா லாரு மியைந்தொத்து வாழ்தலி
னரனாணை நிறூஉந்தமி ழகஞ்சிறந் தோங்கிற்று
நான்கு முதற்குடி நடுக்குடி பதினெட்டு
மவரவர் வரம்பழி யாதொருப் பட்டுப்
பொதுநல மனைத்தும் புரிந்துவப் பாரே
யாலயங் கல்லூரி யவையுறைச் சாலை
யறச்சாலை குருமட மம்பலம் பொதுவே
சைவத் திருநெறி தானிவர் பேணுவர்
தமிழை வளர்ப்பது தானிவர் பேணுவர்

(ஐளச ச) மூன்றாவார்,

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படுமெனு முண்மையு
மிழுக்க முடைமை யிழிந்த பிறப்பாய்

விடுமெனு முண்மையும் விளங்கு மாறே
தேனுண லூனுணல் சிறுதெய்வம் போற்றல்
செத்தாரைத் தேவெனச் சிந்தைகொண் டழிதல்
மூத்தாட் புணர்தன் முறையிலாட் சேர்தல்
களைந்தாட் கூடல் கைமையைக் கட்டல்
மக்கட் பொருள்கவர் மாக்களாய்த் திரிதல்
மடிமை தருமிடி மலிந்துதம் மில்லைத்தங்
குடிக்க ணீடு கொடுத்தல் கொள்ளன்
முதலா மிழிசெயன் முற்றிய குறக்குடி
யிவைகுறைந் தேறியு மிருக்கு முறிக்குடி
யித்தகு குடிசில யிவணுள வம்மா
வுவர்தாங் கடையரென் றொதுக்கப் பட்டன
ருவருக் குவர்தம் மொழுக்க முயர்வே
புறப்படுத் தவரையும் பொறுக்குந் தமிழகம்
(சூாகூ உ) முப்பான்மேல்,
மேலவர் தமிலியல் விட்டொதுங் குநரும்
நடுவர் தமிலிய னழீஇயொதுங் குநரும்
தள்ளப் பட்டவர் தாம்பிரிந் திருப்ப
ரவர்தா மழிநடை யாண்மா ராவ
ரவரே விலைமக ளாரெனப் படுவ
ரழிச்சரி யார்குடி யாமவர் குடியே
சிவன்கோ யிற்பணித் தேவடி யார்குடி
யிவரில் வேறா யேற்றம் பெறுமே
யிவர்தாம் புறக்குடி யினரா வாரே
மேனடுக் கீழென விளங்குமுப் பாலன்றிப்
புறக்குடி வேறாப் புகலப் படுமே
பண்டைப் பிரிவுமுப் பாற்குடி யவைநிகர்
புறக்குடி யொருபாற் புதுவதாய்த் தம்ம

விங்ஙனங் குடிப்பிரி விருப்ப தறிந்தே
யவரவர் வழக்கெவ னவ்வணந்
(சூா எ அ) தனித்தனி யொழுகிய றருந்தமி ழகத்தே

## கூ. உயர்ந்தோரொழுக்கம்

ஊறுசெய் யாமை யுயரற மாக்கொள
லெவ்வுயி ரேனு மிடர்ப்படி னிரங்குத
லெல்லா வுயிர்க்கு மிதவுசெய் தின்புற
லதர்ப்பட் டழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ
லிழுக்கா வியன்ற வறம்பேண லெஞ்ஞான்றுஞ்
செந்தமிழ் வளர்ச்சி சிவப்பொரு ளுணர்ச்சி
கைவரப் பெற்றுக் கற்றவ ருடனளாய்
மறச்செய லைந்தும் மறந்துஞ் செயாதுறல்
தம்மினப் பெண்களைத் தாமணஞ் செய்குத
லைம்பெரு வேள்வி யாற்றிச் சிறத்தன்
முச்சுற்றஞ் சுற்ற முறைமை வழாதுறன்
மூவகை யோர்க்கிட முதன்மை படைத்தல்
கற்புங் காவலுங் கடனாக் கொழுந்தகை
நங்கை யுடன்வாழ் நம்பியா யுயர்த
லறிவு நிறையோர்ப்பு கடைப்பிடி யாடவர்
மரபினும் நாண மடமச்சம் பயிர்ப்பிவை
யாட்டிகண் மரபினு மாயுரம் பெறுத
லுடன்பிறந் தோர்கட் குறுதுணை யாத
னண்பா ரறிஞரை நாடிநட் பார்தல்
ஞாதிக ளுள்ளம் நலிவுசெய் யாதுற
லுலகோ டொட்ட வொழுகல் கடைப்பிடித்
தீன்ற மக்கட் கிருபொரு டானேர்
நல்லொழுக் கத்தை நடந்து காட்டுதல்

படியொரு கரையிற் படுத்துப் பேணுநற்
கரையாள ராணை கடவா தடங்கல்
காணப் படாத கடவுட் கடுத்தமன்
செங்கோ லாணையைத் தேவரு ளாக்கொள
லரசுக் காறிலொன் றருள லொழுங்கே
யித்தகை யொழுக்கத் தியலு
(சூஉாஅ) முதுகுடி யொழுக்கம் முதன்மைய தாமே

## ய. பண்டைமரபு வழக்கம்

தந்தை தேட்டந் தான்பெறு மைந்தர்
வழிவழிப் பெறுவது மரபு வழக்கே
தந்தையுள் ளளவுந் தமிழக மைந்தர்
மறந்தெனும் பங்குகொள் வதுவழக் கின்றே
யறிவிலாத் தந்தை யரும்பொரு டொலைக்கத்
துணியிற் றடுப்பது தோன்றல்கட் குரித்தே
தோன்றலின் றேல்வாழ்க்கைத் துணைக்கஃ துரித்தே
யவளொத் துறினு மன்றிறந் தாலுந்
தீச்செல வைத்தடை செயல்ஞாதிக் குரித்தே
யொருத்தியின் மேலு முரிமைகொ டந்தை
பொருண்மகார்க் கெல்லாம் பொதுப்பொரு ளாமே
யினம்விட் டயற்பெண் ணெடுத்து மணப்பவன்
றள்ளப் படுத றமிழக வழக்கே
வைப்பா மொருத்தியின் வயப்படும் பிழைஞ
னவள்சமைத் தருள்சோறுண் டாற்றள்ளப் படுவன்
விலக்கப் பட்டவன் விலக்காத பிழைஞன்
பொருளுக் கினத்தி புதல்வ ருரிய
ரயலினத் தாட்கு மவள்பெறு மகார்க்கு
மவனுள நாண்முயன் றாக்கு வருவாயி

லேதெனுங் கொடுப்பினுண் டின்றெனி லின்றே
யழிநடை யார்மிக லாகா தென்பது
முதுபொரு ளவர்க்கிலா முறைகாட் டிடுமே
யொருத்தி வயப்பட் டுரியனே செப்பிதழ்
தரினு மதுசெலத் தக்கதின் றாமே
யப்பன் மருளா லயலவர்க் கீடு
வைப்பினும் விற்பினும் வாங்குவா ரின்றே
முதுபொரு ளில்லை முயன்றுசெய் பொருளெனும்
பாட்டன் றருமுடற் பாட்டினுண் டாகலின்
மகாருட லப்பன் வழங்கலிற் றந்தைதேட்
டளித்த மகார்தம தாக்கொளன் மரபே
முதுகுடி நல்லாரை முத்தமிழ் நாட்டினர்
பொருடேட விடாமையிற் பொருட்பங் கவர்க்கிலை
யாயினும் பெற்றவ ரறத்தைக் கருதிப்
பெற்று வளர்த்துப் பெருமை நிலைபெறப்
பூணணிந் தியைமகட் பொருள்பல வரிசைக
ளருளி மணப்பித் தருமைசெய் வாரே
யாண்மக்க ளுழைத்தீட்ட லவர்க்குரித் தாமே
வழிவழி யுழைப்பவர் மனக்கருத் தின்படி
மரபு நெறிவழாஅ மகார்பொருள் பகிர்வர்
முயன்றுசெய் செல்வமு முன்னவர் காணியு
மகார்க்கொளித் தடைய வழிதந்தைக் கின்றே
வாழ்க்கைத் துணைவியா வருமினத் துரிமைகள்
வயிற்றுப் பிறந்தவர் மகாரா வாரே
மகவிலார் ஞாதியை மகவா வுடையரே
மகவிலாட் குரியன் மாண்டாற் பொருட்கவ
னுரிமைக் குரிமையுண் டுள்ளநா ளளவு
அவன்றரல் வேண்டா வவள்பெறல் வேண்டா

செப்பிதழ் வேண்டா சிலர்துணை வேண்டா
வுரித்தைத் தடுப்பவிங் கொணாதெவர்க் கும்மே
வருவாய் திளைத்தவள் வாழ்வது வழக்கே
ஞாதியின் முன்னோர் நயந்துசெய் பொருள்வைத்தும்
ஞாதியின் முன்னோர் நயந்தருண் மெய்வைத்து
மாம்பொருட் குடையவ ரவரா வாரே
யவரைவிட் டீவோ னலகையா வானே
நாடி னுஞ் சட்டம் நல்கவொட் டாதே
யாதலின் மேனிலைக் காளாந் தமிழக
மயற்பொருள் கவர்ந்துண லழிமாக்கள் செயலே

(சூஉ சுசு) முதல்வரில்,
உயரிய பண்ணையா ரொன்றா மிரண்டாம்
பாகத்த ரோரூர்முன் பலவூர் முதலிக
ளெழுகூற்ற முடையா ரிருங்கோ முதலிய
வைம்பெரு வேளி ரதிகாணி யாளர்
தகைமுது பெருங்குடித் தனக்கார ரெனப்படும்
நிலனுடைய வேண்மார் நிலைபெறு குடிகளி
லப்பன் றுறவுவீழ்ந் தாலவ னுள்பொழு
துடைமைபங் கிட்டீந்து மொப்பிக்கை யொப்பித்து
மிறைவழி பாட்டுற லிந்நில வழக்கே
தமப்பனின் பத்தாற் றலைச்சற் குயர்ந்தபங்
கீதலைத் தடுப்ப வெவர்க்குமொண் ணாதே
யறஞ்செயற் றட்டவு மாகா தெவர்க்குமே
தமிழகத் தியலிது தழீஇய குடும்ப
வழக்கர சவைக்கு வரற்கிட னின்றே
பிரித்துக் கொளினும் பெருக்குத லின்றிக்
குறைக்கும் படிக்குரங் கொடுத்தலிங் கின்றே
ஆணி யுரைபார்க்கு மறிஞர் வேண்மார்

வாணிகஞ் செய்தலின் வல்லவர் வேண்மார்
காணிவிற் றுண்ணுங் கடையரிங் கின்றே
உலகிற் கருத்தியுண் ணுயரே ருழவர்
நிறுத்துப் பொருளரு ணிறைகோ லுழவர்
வெற்றி நிலையிடும் விறல்வில் லுழவர்
திறம்பாது நடுநிற்குஞ் செங்கோ லுழவர்
முப்பொருண் மெய்தேற்று முதுநூ லுழவர்
நாற்பொரு ணெறிநிறூஉம் நலத்தசொல் லுழவர்
அறுவகைப் பார்ப்பா ராவா ரிவரே
உழவு வணிக மொலிபடு சிற்பங்
கைத்தொழில் வரைவு கலையறி வென்ற
வறுவகைத் தொழில்பொது வறிவொடு செய்துஞ்
செய்வித்து முயரிவர் திகழறு தொழிலோர்
தம்போற் பிறரைத் தாம்பார்ப் பாரே
மரபு வழக்கிவை மறாஅர்பகிர்ந் தருள்கையின்
விலையொற்றி யீடு விடுதலை நன்கொடை
செயாது வருவாய் செய்து திளைத்து
மதிகதி ருள்ள வரைக்கும் வழிவழி
நீநின் மைந்தர் நின்மைந்தர் மைந்த
ரங்ஙனம் வாழை யடிவாழை யாவரு
மெல்லீரும் வாழ்க விப்பொருள் வாழ்க
விதுகொடாற் றறன்வாழ்க வென்று வாழ்த்தி
வழங்கலிற் பொருணிலை மாறுத லின்றே
மாற்றாத சட்டம் மன்றத்து முண்டே
ஆகலி னெளிமைமே லவர்க்குவா ராதே
யறப்பொருட் கென்று மழிவுவா ராதே
நற்பொருள் வைத்தாற்று நல்லறம் பெரிதே
யறப்பொரு டொலைப்பவ ராண்மக்க ளின்றே

யாண்மக்க ணடுநிலை யவர்பெறு வாரே
யாகலி னடுநின் றறிவுடை மக்களைப்
பெறுந்தவ ருயர்குடிப் பிறப்பின ராவா
ரவர்குடி யோங்கு மவர்பொரு ளோங்கு
மவரற னோங்கு மவரறி வோங்கு
மவர்தா மிருமையின் படைவோ ராவா
ரினமெலா மவர்ச்சார்ந் தினிதுமேம் படுமே
யயலுள வறிஞரு மவர்ச்சார்ந் துயர்வரே

(சூ௩ உ௰) இதன்மேல்,

தந்தை முயற்சியுந் தனையரொத் துழைப்பு
மெந்தநற் குடியினு மியல்வது வழக்கே
முன்னோர் பொருண்முதல் முயன்றாக்கல் வருவாய்
வருவாய் புரிந்துணல் வழிவழி வழக்கே
தவவிருப் பில்லாத் தந்தை யிறந்தபின்
சமபங் கடைந்திட றனையருக் கியல்பே
மூத்தோன் மிகப்பெற முயலலா காதே
யுயர்பங் கடையினு மொளித்துவைத் தெடுப்பினு
மிளைஞர் தலையெடுத் திடின்வழக் கெழுமே
யாறுத லருள்கரை யாள ரதுகேட்டுத்
தீர்ப்பா ரவரிடைத் தீரா விடினதை
மன்னவைக் கேற்றி மடக்கிவெல் வாரே
விலையொற்றி யுடம்பிடி விடுதலை யீடென
வுயர்குடிப் பிறந்தோ ருஞற்றுத லின்றே
யறநிலைப் பொருளா யருளுத லுண்டே
விலையொற்றி யுடம்பிடி விடுதலை யீடென
யேழைக் குடியா ரியற்றுத லுண்டே
மற்றவர் ஞாதியை வாங்கு மவர்கூய்
நீவிர் கைவிட னெறியின் றுதவுமி

னெனச்சொல்லி யவர்விடி னிருகையா னீர்வார்த்து
வாங்கல் வழக்குமேல் வழக்கெழ லின்றே
யரசவைக் கதையுட னறிக்கைசெய் வாரே
யாங்குப் பதிந்துகொள் வதுமுது வழக்கே
விலையொற்றி யீடுகள் மேலவர் வாங்குவர்
ஞாதிபொது வைத்தற னடாத்தற் குடம்பிடி
குருமடங் கோயிற்குக் கொடுப்பது நன்கொடை
யறனிலைப் பொருளென்று மதுசொல்லப் படுமே
யூர்ப்பொது விற்கென் றுதவுதல் விடுதலை
யீடொற்றி வைத்தவ னேற்க வருங்கா
லவாவாற் பிணங்கி னவர்பால் வழக்கெழு
மெழினு நொடிக்கு ளினத்தினுட் டீருமே
யறுதியிற் பயன்முதற் கரைபெற லாமே
யறுதிதீர்ந் தாலீ டடைவது வழக்கே
யரசவைக் கதையுட னறிக்கைசெய் வாரே
யிதனிடைக் கொடுபோ யிறுப்ப தவன்கடன்
காணிவிற் றுண்பான் கடையினுங் கடையென
வழங்கு முதுமொழி மானப் படுத்தலின்
கூழுண் டெனினுங் கூட்டிச் சேர்த்துக்
கடன்றீர்த் தன்றிக் கண்ணுறங் காரே
மானக் குடிகடன் வாங்குத லின்றே
யேற்றல் கடன்பட லிரண்டு மிழிபெனல்
வழக்கா றாகலின் வறிஞருஞ் செல்வரு
முழைத்தீட்டி வைப்பதிவ் வுலக வழக்கே
வெளிப்போ யுழைப்பார் மேம்படு மாடவர்
கோதைமார் வீட்டினுட் கொட்டைநூற் றுழைப்ப
ருடைநெய் பவரினு முழைக்கு மிருபாலும்
பகருமிம் முறையிரு பாலு முழைத்தலிற்

கடன்பட மாட்டார் கைமுடங் கிடிற்றான்
வாக்குறு திக்கடன் வட்டமின் றினந்தர
னடைபெறுங் கொள்கட னல்குமுன் சாவரின்
மைந்தர் முகம்பார்த்து மயங்குங் காலை
கவலல் வேண்டா கடன்யாஞ் செலுத்துவே
மெனமைந்தர் சொலக்கவ லின்றா கும்மே
தந்தைகொள் கடன்மைந்தர் தருவது வழக்கே
கடன்கொடுத் தவருளங் கவலலிங் கின்றே
கைக்கடன் தீர்க்கவொர் காலெல்லை யின்றே
யிருகுரு வட்ட மிறுதியொற் றிக்கே
யிடையிலென் றருளினு மேற்பது வழக்கே
தவணைசென் றானிலந் தனிலுரித் தின்றே
யரசவைக் கறிக்கைசெய் தடைவா ருரிமையை
யுடன்பிறப் பண்ண னொழித்துவைத் தெடுத்தா
னடைந்தான் மிகுதியென் றாயிரத் தொருவன்
வருவதுண் டெனினும் வராதயாண் டுளவே
தமையனுக் கிளைஞர் தாமே மகிழ்வுட
னுயர்ந்தபங் கருளலு முலகத் துண்டே
மூத்தோன் பலநாண் முயன்று பொருளீட்டித்
தமப்பனி லன்பார் தமயனா யிருத்தலின்
தன்மகார்க் கென்று தனியீட் டிடாமையி
னவனுக்குக் கூட வளித்த லறமே
யவன்மனை மக்க ளளாயுண் டிருத்தலின்
மிகன்மிகை யெனத்தூண்டி விடின்முது குடித்தம்பி
யொத்துழை யாதுறி னுண்ணமாட்டாரோ
வயலா ரதுசெயி னவர்க்குண வின்றோ
வுணவு பெறலன்றி யூதியம் பெறாரோ
யுடன்பிறந் தார்க்கதூஉ முதவன் மறமோ

வென்றக் கோளரை யெதிர்த்துவெல் வானே
யித்தகை நெறிப்பட் டியலுந் தமிழகத்
தென்றுந் தமப்பனுக் கின்பார் தலைமையும்
மைந்தர்க் குரிமையும் வழக்கே யெழாமையு
முடன்பிறந் தாரோ டொருப்பா டுடைமையு
முரத்துக் குடும்ப வுலைவுத லின்றி
மறமிய லாதறன் வளர்த லியல்பே.

(சூசாச) இப்பால்,
பெருங்குடி முதல்வராய்ப் பெருநிலத் தவரா
யிரண்டு குடிவார மிறைவார மொன்றாப்
பெறுமைம் பெருவேளிர் பெயர்கொணற் குடிகண்
மூப்புப் பட்ட முறைபெற் றுளாரே
யவர்மக்க ளெத்தனை யாயினும் வழிவழி
போனவர்க் கிளைஞர் பொறுப்பார் தலைமை
சிற்றப்பன் சென்றாற் சென்றவன் றமையன்
மைந்தன் வருவன் மற்றவன் சென்றா
லந்நா ளெவன்மூப் பவன்பட்டம் பெறுவ
னக்குடி மதலையு மாமிள வரசே
தலைமை பெறாத தனையரங் கெழாரே
யிக்குடிப் பிறந்தா ரெவருவே ளாவர்
வயதேறத் தான்வரு வார்முதன் மைக்கே
யறிவுங் குணமு மவர்கொடைத் திறமு
மாற்றலு மாக்கமு மளப்பரி தம்ம
அவர்குடிக் கட்பிரி வாற்றுத லில்லை
யரசு மிளவர சருமா யிருப்ப
ரரசிள வரசர்க் களப்பது படியே
யவர்க்குமூ வேந்தரு மருமைசெய் வாரே
யெல்லாக் குடியு மிவர்க்குற வாமே

யாகலி னிவர்முறை யழகிதென் றுயர்ந்தோர்
வழக்கெழா தறாதென்றிவ் வழிபற்றி வாழ்வர்
முதுநிலங் காணியிம் முறைபேண லழகே
மூவேந்த ராட்சி முதல்வ ரவர்முறை
யரசிய லாக்கத் தறைந்தவா றாமே
வேண்மூன்றி லொன்றும் வேந்தாறி லொன்றும்
பெறுதலென் னென்றாற் பெருங்காடு வெட்டி
நாடாக்கு வேள்குடி நாட்டிற் குரித்தத
னாட்சிக் கினம்பல வாங்குக் குடியேற்றி
யுழைப்பிற் கொருபங் குதவித் தனைப்போற்
சமன்செய் தொருபங்கு தான்கொளல் வழக்கே
வழாதாள் வதுவேள் மாண்பது செய்ந்நன்றி
மறவாமை நற்குடி மாண்பது தொன்முறை
வழாதுவேள் குடியை வாழ்விக்க வுயிரைத்
துரும்பா மதித்தாட்சித் துணையா நிற்றற்
கொவ்வொரு குடியு முறுதிகொண் டிருக்குந்
தமிழகக் குடியெலாந் தரம்பேணி
(சூச ச உ) வாழ்வது பண்டை மரபு வழக்கமே

## ய க. பெண்மக்கட்கு உரிமை

பெண்களைப் பெற்றவர் பெரிதறம் பேண
மணாளனைத் தேர்ந்து மகட்கொடை செய்வார்
பிள்ளையைப் பெற்றவர் பெண்ணைத் தெரிவுசெய்
தெடுத்தலும் வழக்கா யிருத்த லுண்டே
பெண்டெரிந் தெடுப்பவர் பிள்ளை யாக்க
மீதல் வழக்கின் றெனினு மணத்தை
யிரண்டாத் தமிழக மெண்ணுவ தின்றே
யாளனைத் தேர்ந்தெடுத் தாற்பிள்ளை யாக்கந்

தரலு மகட்பொரு டரலு மெதற்கெனின்
மணாட்டி யகத்தை மணாள னடைதலின்
பிள்ளை யாக்கம் பெறலுரித் திற்கே
மகட்பொருண் மகட்கும் மகன்பொருண் மகற்கும்
வருவது கருதிய வழக்கஃ தென்க
பெண்ணகந் திருப்பூட்டும் பிள்ளையிற் கழைத்துவந்
தியன்மண வினையு மியற்றுதல் வழக்கே
யிருவீட் டினுவிருந் தியற்றுத லுண்டே
யிருபாற் பொருட்குரித் திற்கிது சான்றே
தந்தை பொருண்மகன் றான்பெறல் வழக்கே
மகனின் றெனின்ஞாதி மகன்பொருள் பெறுமே
மகளின் றெனிற்றாயம் மகட்பொருள் பெறுமே
மகட்பொருட் குரித்து மகனுக்கு வருமே
தாயமு ஞாதியுந் தானாவ னம்மகன்
பெண்டெரிந் தெடுப்பவர் பிள்ளை யாக்கந்
தருதல் வேண்டா தன்னிடத் தமர்தலின்
மணமகட் கொணர்ந்து மணமகன் வீட்டில்
வைத்து மணப்பது வழிவழி வழக்கே
யியன்மணச் சிறப்புண வீரிடத் தியல்வது
பற்றியு மணமிரு பகுப்பாவ தின்றே
வேட்டகத் தவர்தம் விருப்பம் போல
தனையைக்கு மகட்பொரு டருதல் வழக்கே
மகட்பொருள் மகள்பெறல் வழிவழி வழக்கே
மகளின் றெனினும் மகட்பொருள் மகற்கெனல்
வேண்டா விழையார் வேட்டகத் தாரே
யவாமிகற் காஞ்சிறி தவாவிளைக் காதே
யிவள்பொரு ளாவுள தினுமைந்தற் குரித்துண்டு
மகவிலான் மகட்பொருண் மாமனிற் குய்ப்பது

தாயத்தை ஞாதிக டாங்கொள்கி லாரே
வழிமுறை பின்முறை மனையின் மகார்க்கு
மொருத்தி மகட்பொரு ளுதவுகி லாரே
தமிழக வழக்கிது தானா கும்மே

(௬௪அ௪) அதனால்,

மனையுயிர் வீயினன் மகன்மறு முகங்காண்
முன்மகட் பொருளுய்த்து முறைமணம் புரிவ
னதுவழி வழிவழக் காவர லுண்மையின்
மகட்பொருள் கொண்கன் வைத்துண லின்றே
யாகலின் மகவிலா வரிவை பூண்பொரு
ளயன்முகங் காணுமு னாண்டு கழியுமுன்
மாமனிற் குய்ப்பது தொன்றுபடு வழக்கே

(௬௪கூ௨) இப்பால்,

நத்தப் படுபவ னாத னாகலி
னடுநிலை பொறுப்பவ னாத னாகலி
னாற்றுப் பதிப்பவ னாத னாகலின்
மகணாதன் குடிநாதன் மைந்தர்க்கு நாதன்
மகட்கு நத்தலின் மணவாள னாதன்
குடிக்கு நடுநிற்குங் கோன்குடி நாதன்
மகநாத்துப் பதித்தவன் மைந்தர்க்கு நாதன்
மனைவிக்கு நாதன் வழிநாதி யாமே
குடிக்கு முதல்வழிக் குடியெலாம் நாதிகள்
மக்கட்குத் தந்தை வழியெலாம் நாதிகள்
ஞாதி யெனநாதி நடைபெறல் வழக்கே
நாதன் பொருளெலாம் ஞாதிக ளுடைமை
தாய்ப்பொருள் செல்விக டம்முடைப் பொருளே,
தாய்ப்பொருட் குரியவர் தாயத்த ராவர்
தாயமு ஞாதியுந் தனித்தனிச் சொல்லே

பெண்ணுடன் பிறவா ரிரண்டும் பெறுங்காற்
றாயமு ஞாதியுந் தாமா வாரே
மைந்தற் பெறாதவர் மஞ்சற்பா லூட்டி
ஞாதியிற் கொண்டு நயத்தல் வழக்கே
யில்லைப் பிள்ளைக ளில்லை ஞாதிக
ளுடன்பிறந் தாண்மா ருளரே லவர்க்குப்
பொருளுடை யானுள போது மகட்பொரு
ளௌமகிழ்ந் தீதலு மிந்நிலத் துண்டே
தடுப்பா ரின்மையிற் றாம்பெற லாமே
ஞாதியில் லாருடை நற்பொருண் மன்பொரு
ளாறிலொன் றிறைகொளு மாசுப் பொருளுட
னிங்ஙனங் கூடலி னிறைப்பொருள் குடிப்பொருள்
தமிழகத் திறைப்பொரு டமிழர்க் குரித்தே
யாதலிற் குடிபிறர்க் கதுசெல விடாதே
பிள்ளையில் லாதவர் பெண்ணின் மகவெடார்
தங்கை தமக்கையின் றனையனைக் கொள்ளார்
செய்கட னவர்க்கொடு செயல்வழக் கின்றே
செய்கடன் ஞாதிகள் செய்வது வழக்கே
வாழையடி வாழையின் வருகுடி யொவ்வொன்றும்
பல்கிப் பெருகினும் பலவகை யாவுள
கற்கத லியுநற் கதலியு மங்ஙனம்
பலவகை யாவுள படியென வறிக
கன்று நடுமிடங் கரிசல் செவ்வல்
முதலெதி லாயினு முளைப்பது வழக்கே
யினமாறித் தோன்றுத லெங்கணு மின்றே
தந்தை விரைநிலந் தாயென்ப மேலோர்
தந்தை குடிஞாதி தானென்ப மேலோ
ரெல்லாக் குடிக்கு மிதுபொது வறிவே

ஞாதியுந் தாயமு நாட்டிலொன் றென்பது
தமிழக வழக்கிலை தரையெலா மொருமனு
மக்களென் பவர்தம் வழக்கது வாமே
யதன்மே லினப்பிரி வறைகுவ ரவரே
யிறைமுதற் றருமக்க ளெண்சொலக் கணக்கிலை'
யானுமொன் பதுநூ றாயிர மென்ப
தமிழகத் தறிவிது தான்றனித் தனிக்குடி
யாவரு வரம்பழிக் காது தமிழகங்
கடவுள் கட்டளை கடக்காத நற்குடி
மகவிலா விடின்ஞாதி மகவா வுடைமையி
னவர்க்கொடு செய்கட னாற்றுதல் வழக்கே
யவர்செய் கடன்செயி னரனுல கேறுவர்
பிறர்செய் கடன்செயிற் பேயுருப் பெறுவ
ரயலார் செயவர லவர்க்கிடங் கொடுத்தல்
பணம்பறிப் பவரின் பங்கிடு பவரின்
முனைப்பா லெழினு முதுகுடி விடாதே
யூரறிந் தாலவ ரொறுக்கப் படுவ
ரரசறிந் தான்மறி யலின்வைக்கப் படுவ
ராகலி னறிஞரவ் வாறெழ லின்றே
யறிவுயர் முதுகுடி யரன்கட் டளைவழி
ஞாதியாற் செய்கட னடாத்திமேம் படுமே
தயரதன் மதலை சடாயுக்குச் செய்ததுந்
தேவிதன் றவற்குச் செய்யலா மென்பதும்
வடவர் கதைக்கட்டில் வந்தது மிகையது

(சூரு சூய) தமிழ் நாட்டில்,

ஞாதியை யுதிரமா நயந்துகொண் டாடி
நன்மையிற் குழீஇநாளு நலந்திளைத் துவத்தலுந்
தீமையிற் குழீஇத்துன்பந் திளைத்தலு முண்மையின்

பிறர்க்கவை யின்மையின் பிறங்குமெய் தானே
யத்தகைக் குடிகளி லறிவுய ரொருகுடி
மகப்பெறா மையின்ஞாதி மகவா யிருப்பினுந்
தவன்பேர் விளங்கவுந் தன்குடி நிலைக்கவுந்
தத்து ஞாதியிற் றான்கொள லுண்டே
மஞ்சற்பா லூட்டி வாங்குத லதுவே
மழலையைப் பாலூட்டி வாங்கி வளர்த்தலுங்
காளையைத் தொழில்பார்க்கக் கைக்கொண்டு பேணலுந்
தத்தெனப் படுமது தம்மிலொத் தெடுப்பது
மன்னவைக் கறிக்கைசெய் வாருட னதனை
யொருகுடி சிதறாமைக் குகந்து மகப்பெற்ற
தவர்சிவ குருமுன் றரப்பெறல் தத்தே
ஞாதி குழீஇவிழா நடாத்தியின் பார்வர்
பெற்ற மகவிற் பெரிதுரித் தினன்றத்தன்
ஞாதியில் லாதா னயந்ததத் தாயிடின்
ஞாதி யவனுள நலிய வழக்கிட்டுத்
துரத்திப் பொருள்கொள டொல்வழக் காமே
யிஃதினத் தயற்குடி யின்மகட் கொடைசெய்த
பெற்றோ னவர்ச்சார்ந்து பேதுற் றெழின்வரும்
ஞாதி வலாரெனி னடவாதிச் செயலே
யறிவுர னுடையார்க்குண் டாயினு மெழாதே
வழிவழி யீட்டுவோர் வாழ்தங் குடிப்பிறந்
தவர்நுகர் கருத்தின ரன்றிப் பிறர்குடி
யடைய நினைக்கில ராகலி னறவோர்
பழையோ ரெண்ணம் பாழ்படா வழிச்செயல்
ஞாதியிற் றத்து நயந்துகொள் ளுதலே
தத்தெடா விடின்ஞாதி தாம்பெற விடலே
தந்தைசொற் காக்குநற் றவமதா கும்மே

முளையை விரைதரு முளையைத் தராநிலன்
விரைநிலன் சேர்ந்துறின் விளையும் பயிர்நிகர்
கணவன் விரையுங் காதலி நிலனுமாய்
மக்களுண் டாகி வருதலிற் றந்தையைக்
கொடுகுடிப் பிறப்புக் கூறுந் தமிழகம்
பெண்பெறு மைந்தர் பிறர்முத லாகலின்
மகண்மகார்க் குரிமை மகட்பொரு ளாமே
யவர்தந்தை பொருட்கு மவருரி யவரே

(சூசூ௱) ஆனால்,

மைந்தனில் லாமன் மகட்காட்சி யாமெனின்
மைந்தனில் லான்பொருண் மகண்மைந்தர்க் காமே
யென்றன ராராய்ந் தெழாத பிறரே
யரசு பகிர்ந்திங் கடைவழக் கின்றே.
யவன்பொருள் குடிப்பொரு ளாகவைப் பதுவே
யுலகுக் கொருவேந் துவன்மக னிலானே
லயனாட் டிறைமனை யாமகட் கரசோ
செழியற்குச் சோழன் சேரனாய னாட்டிறை
யரசினத் தொருவனில் லாமகட் கரசோ
வயலர செதிரா மரசின மருகன்
பெறத்தர முறினாட்சி பெறுவனன் றின்றே
குடிகுழீஇப் பொருந்தொரு கோவைத் தெரிந்தெடுத்
திருத்தலுண் டிறைகன்னி யிருப்பினவ் வேந்திற்கு
மணப்பித் தவளாட்சி வனைதலின் வருமே
போற்றதூஉ மணாளன் பொறுப்பி னடைபெறு
மிம்முறை யறியா ரியம்பொரு ளின்றே
யைவர்க் கைந்துநா டைந்தூர் விடுகெனக்
குடிலன் கேட்டற்குக் குருபதி கொடாமையை
யறிவார்க் கரசுபங் கருளாமை முதுவதூஉ

மருள்கெனல் புதுவதூஉ மாமெனல் புலனாங்
குருபதி யாக்கங்கைக் கொண்ட குடிலர்முன்
கலிகொள நாடு கடந்தோ டினரே
கவர்பொருள் கவர்பிறர் கைப்படுந் தீதாக்குங்
குடிலனெறி யறமென்ப குடிலநூ லோரே
முதுநெறி வழிப்பட்ட முத்தமி ழகத்தில்
குரிசின் மகளாட்சி குயிற்றலிற் குடிப்பிறப்
பரிவையர் மகவிலா வப்பன் பொருள்கொளச்
செய்கடன் செயத்தஞ் சேயை விடாரே
நெய்ப்பந்தம் பற்றற்கு நேர்வதொன் றுண்டே
(சூசூ௩௰) வழக்காற்றில்,
பெண்மக்க ளுள்ள பெருங்குடிக் கண்ணோர்
மைந்தனில் லான்ஞாதி மாட்டுப் பகைகொடு
பெண்மகள் சேயுடன் பிறந்தாள் சேயினைத்
தன்கடன் செய்தற்குத் தத்தாத் தரவேண்டப்
பெற்றோனைக் கொடுகுடிப் பிறப்போதும் வேளப்ப
குடிப்பிறப் பம்மையைக் கொண்டோது வார்க்கு
மகவா யினைபோலும் மதிமறந் தனைபோலு
மெனையறிந் தனைபோலு மென்றா ளொருமகள்
மழுப்பிச் சிரித்துண்டு வைகினன் சென்றான்
தூவெண் கலையுடீஇச் சுற்றிக் கழுத்திடு
மகள்பாற்றத் தாநின் மகவருள் கென்றான்
மருகனின் மையையெளி மையைத்தெரிந் துன்பொரு
ளவாவுவ னென்றெண்ணி னாயோ மடைச்சியென்
றெண்ணினா யோயா னிணங்கினு மென்ஞாதி
காணின் வரும்போதொக் கலையிற் கொணர்ந்தநி
லிவளீந்த தென்னெனி னென்னுயிர் நிற்குமோ
வென்று கவன்றன ளீன்றவ னம்மே

பொல்லாத ஞாதிக்குப் பொருள்விட லாகாதென்
றறிவுய ருன்பால்வந் தாய்ந்தன னென்றான்
மெய்தா னோவென மின்மனந் திரும்பி
யறிவுய ரப்பநின் னறிவீண் டெழுந்ததென்
பிறந்த குடிபொன்றிற் பெண்மக்க டரம்பொன்றும்
நின்பேர் கெடுநின் னிழற்குப் பிறர்வரின்
ஞாதிக ளயல்போ னழீஇயொதுங் குவரோ
வந்த பிறகுடி மைந்தனும் வாழ்வனோ
வழக்கும் பகையு மலிதர வைத்துநீ
யிருமைக்கும் பெறும்பே றென்னே யையா
கெடுமதி விட்டொழி கேண்மையை யழிக்கிலை
வழிவழி வழக்கை மறத்தல் வேண்டா
நலனீ பெறவும் நம்பின் வாழ்க்கையர்
தொன்மையின் வந்துண்டு தொடர்புற்று வாழவும்
ஞாதியி னொருதத்து நயந்துகொண் டருள்கென
வேண்டுதல் செய்தாள் வேண்டுகொண் டாற்போ
லியைபு காட்டி யிருந்துண்டு சென்றான்
பின்னரும் பகைமை பிடர்பிடித் துந்தத்
தன்னுடன் பிறந்தா டன்வீ டடைந்து
சமயங்கண் டுன்மகற் றரலா மோவென
புதுமையி தென்னே புலன்மாற லென்னே
யென்குடி யுன்குடி யிரண்டுவே றன்றோ
யிருகுடி யொன்றாக் கிடினிழி பன்றோ
நானிணங் கினுமென் னாதன் விடுவரோ
நாத னிணங்கினு ஞாதிக ளேசுமே
யண்ணநின் குடிஞாதி யற்ற குடியிலை
யிரண்டுபெண் மக்களு மிதுதேர்ந் திடினுனை
யறிவுக் கோட்பட் டலைகுந னென்று

மருந்து செயநாளை வந்திடு வாரே
மாதினி யார்சொல் வழிப்பட் டனைகொல்
மருகிக ளொடுநாளை வருவ னியானங்கு
வந்தபின் செய்முறை வழுத்துன னென்றாள்
சமைத்தறு சுவையூட்டித் தமையனை யுய்த்தாள்
மற்றவன் போயிற்கு வழுத்தின னிருந்தான்

(சூசூஅஉ) அப்பால்,

தங்கையண் ணற்குத் தனையைமார் தம்மை
வரச்சொல்லி யாள்விட வந்தா ரிருவரும்
நலனுசா யிருத்தி நறுஞ்சுவை யுணவாக்கி
யவருடன் றானமர்ந் தருந்துங் காலை
யம்மைமீர் நம்பிறப் பகத்திற்கொ ராண்மக
வில்லாக் குறையை யிறைவ னமைத்தன
னண்ண ருளபொழு தக்குடி நிறீஇநாளும்
வீடும் விளக்கும் விளங்கவைக் காமல்
வாளா விருத்தன் மரபோ வென்றாள்
பெரிதுரித் துளநீங்கள் பேசா திருக்கையி
லெங்கட் கென்னை யியலுமுந் தாநா
ளப்பர்வந் தென்பா லவர்பே ரனைத்தத்து
மகவாத் தரத்தம் மருக ரிசைவரோ
வென்றன ரேன்றரா ரிதுசெவிக் கேறி
னம்மான் பான்மதிப் பறுமென லுட்கொண்டு
தனித்துணர் வெழுப்பியுய்த் தனனென்றா ளொருத்தி
மற்றவ ளென்பாலும் வந்தன ரப்பர்தம்
முடன்மூத் ததினவ ருணர்வுமூத் ததனால்
கருத்தறி வித்தனர் கவன்றே னறிந்துதன்
ஞாதிப் பகைமையை நவின்றன ரென்றாள்
சரிசரி நேற்றிங்குந் தமையனார் வந்தார்

நாளையும் மொடுபோந்து நானவண் வந்து
வழியுரைப் பேனென வழுத்தியுய்த் தனனாங்குப்
போய்ச்செயல் செய்தனம் பொறுப்பென்றா ளத்தை
மருகியர் நீர்வரின் வருகுந மென்றா
ராகமூ வரும்பிறப் பகம்புகுந் தனரே
மக்களு நாத்தியு வரக்கண் டுகந்தெழீஇ
யடுத்துவந் தெதிர்நாத்தி யாரே வருக
அம்மவா அம்மவா அத்தை பிறப்பகம்
பார்த்ததண் ணர்க்கறு பானிறை விழாவி
லிரண்டாண்டு சென்றுவந் திடவழி தெரிந்தது
கண்ணம்மைக் கிங்கோர் கணவ னிருந்திடி
னயர்க்கில ரென்றுகண் ணம்மையெனு மருகியை
வளைத்துமுத் தாடிவேள் மனைவி யழைத்துக்கொண்
டாச்சி யாச்சியென் றணைந்துகாற் கட்டிய
மகண்மக் களைமுத்தி மனமலர்ந் தெல்லாரு
முட்புகுந் தமர்ந்தா ருடன்மக்க ளடுக்களை
புக்குநர் சமையல் புரியத் தொடங்கினர்
வெளிப்போ யிருந்த வேளிவர் வந்தமை
யறிந்திலை காய்கறி யடைகாய் பழமெலாம்
வாங்கியுய்த் தனர்வந்து வரவுசாய் மகிழ்ந்தார்
பிள்ளைகண் மூவர்க்கும் பெரிதன் புடனே
திரள்வா ழைப்பழஞ் சீப்புச் சீப்பாக்
கொடுத்து மனைவியைக் கூய்நெய் சருக்கரை
கொடுவென் றிட்டார் கொண்டுதின் றுகந்தன
வாக்கியுண் டடைகா யருந்தும் போதின்
மாதினி யாருள வரைவர லுண்ண
லாகுமப் பாற்பிறப் பகத்தவா வின்றென
அத்தை கூறவு மருகுறை மருகியர்

நீங்களு மிப்படி நிகழ்த்துத லென்னே
யுங்க ளண்ண ருளத்தைத் திருப்பிடி
னிக்குடி யழியா திலங்கிடு மென்றா
ரம்மைமீ ருங்க ளத்தையா ரண்ண
ரென்சொல் வழிப்பட் டியங்குவ தாக
நேற்றுக் கூட நிகழ்த்தின ராமே
யண்ண ரொருமுடிச் சவரிரு முடிச்சிட்டுத்
தாலி கட்டிய தாற்றுணிந் தெதூஉஞ்சொலக்
கடனவர்க் கதுகேட்டல் கடனெனக் கதனா
லென்றலை யுருட்ட லெளிதவர்க் கன்றி
யண்ணரைத் திருத்த வவரா லாமோ
அண்ணரிற் றங்கை யருஞ்சொன்ன தேசொல்வர்
வெறுஞ்சொற் கேதும் விலையிலை நாளைச்
செயத்தக்க செய்தன்றித் திரும்ப விடீரென
மகண்மார் முகம்பார்த்து வழுத்தின ளம்மை
யத்தையா ரேயெங்க ளம்மை பெருந்தன்மை
யுடையா ளினவழக் குணர்வாள் பேச்செந்தை
செவிக்கொள மாட்டாமை தெரிந்ததுங் கட்கு
மப்பர் மனமாற்றி யாவது செய்த
லுங்கள் பொறுப்பென வுரைத்தார் மருகியர்
(சூஎடு௨) கேட்டதுந்,
தமையனார் முன்னர் தங்கை சென்றாள்
மக்களும் பக்கத்து வந்து நின்றார்
அண்ணா வுங்க ளகக்கருத் தென்னே
வீடும் விளக்கும் விளங்கவேண் டாவோ
வெனவிளை யாள்சொல வெங்காய் நீநின்
மருகிய ருடனோர்ந்தும் மக்களி லொருசேய்த்
தரினாளை விழாச்செய்து தத்தெடுப் பேனென

வண்ணா ஞாதியுள் ளழுங்குத லாமோ
வவரை வெறுத்தியா மருள்செல்வற் கேட்பதென்
நம்மின வழக்கை நாமறி யோமோ
யொருகுடிப் பிள்ளைமற் றொருகுடிக் காவதோ
ஒருவர் பொருட்குமற் றொருவர் மகப்பெறார்
பிறர்பொருள் பெறயாம் பிள்ளைகட் பெற்றிலம்
பொருட்குப் பிறந்தவர் புறத்தவ ராகா
ருனக்கு ஞாதிபா லுவர்ப்புத் தோன்றினு
மிறுதிக் கடனவ ரியற்றா திருப்பரோ
யியற்றா விடினர கேறுத லுனக்கும்
ஞாதிகள் குடிக்கிடர் நண்ணலு முண்டெனுங்
கடவு ளாணை கடக்க லாமோ
யுயர்குடி வரம்பழித் தொருநீ திறம்பிடி
னறிவி லூரா ரனைவருந் திறம்புவ
ரறிவு மயங்கலை யாராய்ந் தறிதி
யீன்றவர் பொல்லா ரெனினும் பிள்ளைகள்
பொல்லாங் கென்னை புரிந்தன ருனக்கு
தந்தையைப் போன்மைந்தன் றானிருப் பானெனின்
அவரி லொருவனீ யாகுவை யன்றோ
யாதலி னுனக்கீண் டறிவுமா றியதே
நீயுயர் நிலைபெற நின்கடன் செய்தற்குப்
பிறகுடிப் பிறந்த பிள்ளையு மாவதோ
குழந்தையாந் தரினெங் குடிக்கிசை யுண்டோ
நாங்க ளிணங்கினும் ஞாதிகள் விடுவரோ
விங்குள ஞாதிக ளெம்மையே சாரோ
வெம்முடை ஞாதிக ளீன்றபெண் மக்களை
மணத்தலுன் ஞாதிகள் வழங்காண்க ளன்றோ
வுன்னுடைய ஞாதிக ளுயிர்த்தபெண் மக்களை

மணத்தலென் ஞாதிகள் வழங்காண்க ளன்றோ
கலந்து மணந்தன்றிக் கலிக்கா வியற்கை
மக்களி லமைந்ததின் வழிவழி ஞாதியைத்
தன்குடி யாப்பேணித் தனித்தனி நிகர்பிற
குடிப்பெண் ணெடுத்தனங் குலவழக் கன்றோ.
வெம்பா லுனக்கன் பிருப்பின் மகட்பொரு
ளெனத்தரு வனவெலா மேற்குந மெம்மக்க
ளுனக்கிறு திக்கட னுஞற்றுமென் றெண்ணலை
யுஞற்றினு நீபெற லொன்றுமே யின்றே
கொண்டு கொடுக்குமகட் கொடைவழி யினர்சேயை
யுயர்குடி தத்தாக்கொண் டுகப்ப தின்றே
யாய்க்கொடு குடிப்பிறப் பறைவோர் பிறரே
நம்மிலவ் வழக்கெழி னம்முயர் வொழிந்தது
கொண்டு கொடுக்குங் குடிப்பொருள் கவர்தல்
கொடுவசை யாம்புகழ்க் கொலைஞரது செய்வார்
மகட்பொரு ளாத்தரல் வாங்கினு மொருக்கான்
மகட்பொரு ளாமீண்டு வழங்கலின் வசையிலை
யறிஞர் மகன்ஞாதி யாப்பிற குடிப்புகான்
நீர்கொண் டதைவிட்டு நெறிசெய்மி னென்றாள்
புகன்றதன் றங்கையின் புத்தியை மெச்சிக்
கன்னெஞ் சினையுங் கரைத்தனை தங்காய்
வெளியறி வெனக்கு விராய்மன மாறிற்று
மகண்மாரும் புத்தி வகுத்தனர் நன்றா
யுன்மா தினிக்கிங் குகந்த பிள்ளையைப்
பெற்றவ னென்னைப் பெரியப்பன் மகனண்ண
னென்று மகண்மணத் தினுக்குச் சரிசொலுங்
கான்மதித் தழைத்துக் கலந்துசொற் றானில
னன்றவன் றனைமறந் தனனியா னென்றான்

அஃதியா னறிவ லயர்த்தவன் பின்வந்து
வேண்டி யழைத்தனன் வெறுத்தீர் நீரே
யிளைஞன் பிழைபொறுத் திடுதனுங் கடனே
யவனைநீ ராண்டுவைத் தாய்ந்தெதுஞ் செய்யி
னவனு முமைப்பொரு ளாவைத்துச் செய்வனீ
ரிளைஞனென் றெள்ளினி ரிளைஞன் மறந்தன
னுன்றங்கை யாமென்சொ லொன்றுதட் டிலனவன்
றன்மேற் பிழைசொலத் தரமிலை யண்ணா
வென்றன ளம்மவுன் னெண்ணம் போல
நடத்துகென் றான்வே ணங்கையர் மகிழ்ந்தார்

(சூஅஉசூ) கைகூடிற்று.

வந்தன ருடன்பினர் மற்றோரை வரச்சொல்லி
யக்கைமுன் போயெம்பி யண்ணர் குடிநிலை
யிடநினைத் துன்சேய்த்தத் தெடுப்பது குறித்தார்
நீநின் மனையொடு நேர்ந்தருள் கென்றாள்
தமக்கையார் சொல்லைத் தலைமேற் கொள்வ
லெனக்கிறை யிரண்டுசே யீந்தனன் மேலவீட்
டண்ணர்க் கைந்துள வவர்மக வெடுப்பின்
சிறக்கு முமக்கது தெரியாத தல்ல
தத்துக் கேட்குந் தமையனா ரிதுவரை
யென்பாற் பேசில ரேதோ திரும்பிற்
றாயினு மாராய்ந் தாற்றுதி ரென்றா
னவர்மனப் போக்குநீ யறியாத தின்றே
பிடித்ததை யன்றிப் பிறிதொன்று பற்றார்
மூத்ததம் பியையுன் முன்னை யழைக்குந
ளெனக் கூட்டி வாவென வேகிக் கொணர்ந்திட
வண்ணர்சொற் றதுந்தம்பி யறைந்ததுஞ் சொற்றாள்
நீரே யண்ணர் நினைவத் திருப்பினிர்

மாதினி யார்க்குநம் வடிவழ கனைத்தத்
தாக்கொண்டு கண்ணம்மை யைமணப் பித்து
வைத்துப் பார்க்க மனத்தவா வுண்டது
தம்பியறி யான்யான் றானறி வேன்செயி
னதுதான் பொருந்துமென் றனன்மூத்த தம்பி
பேச்சு முடியவும் பெண்மக்க ளொடுதாய்
வரக்காண் கொழுந்தர் மாதினி யார்க்கெழீஇ
வணங்கி யொதுங்கி மக்க ணலனுசாய்
நின்றனர் தமக்கைக்கு நேர்வந்து தங்கை
பணிந்து மகண்மார் பாலு நலனுசா
யழைத்துட் புகுந்தன ளாங்கிருந் தழைத்துக்
கொழுந்தரிற் கண்ணர் குறித்தது பெறவர
லறிதிரோ வெனவக்கை யார்சொனா ரென்றன
ருமக்கது செயமன துண்டோ வெனவவர்
திகழண்ணர் வரத்தவுஞ் சிற்றில் செயாக்குறை
திருவடி நீர்வைக்கத் தீர்ந்த தினிச்சேயைத்
தரேமெனின் விட்டுத் தாமும் போவிரோ
வழைத்துச் சென்மென வழைத்துச் சென்றார்
மறுநாட் சிறப்பு மரபா நடந்தது
மன்னவைக் குணர்த்தினர் மகத்தத் தெடுத்ததை
வடிவழ கனுக்கு மணந்தார்கண் ணம்மையை
உயர்குடி யதுசிறந் தோங்கிற் றம்ம
பெண்மக்கள் கடமை பிறப்பகம் பேணல்
நெல்லைவேள் குடியீண்டு நிறீஇயினர் பெண்மார்
பொருள்கவர்ந் தொருகுடி பொன்றச்செய் பெண்மக்கள்
பிறப்பக மழித்தாடும் பிடாரிக ளாவார்
மற்றிவர்ப் பெறுதலின் மலடாத னன்றே
யறிவார் தமிழகத் தறவோர்
(கூஅஎஉ) பொருளுங் குடியும் பொன்றாத செய்வரே,

## ௰௨. ஞாதிகளியல்

மக்கள் பெறாதவன் மகத்தத் தெடானெனிற்
செயத்தக்க செய்யான் செத்தா லவன்பொருட்
குடன்பிறந் தவரே யொன்றா ஞாதிக
ளன்றே லவர்மகா ரடுத்த ஞாதிக
ளப்ப னுடன்பிறந் தவர்மூன்றா ஞாதிக
ளவருமின் றேலவர் வழிநான்கா ஞாதிக
ளவரு மிலையெனி னப்பனைப் பெற்றவன்
றன்னுடன் பிறந்தவர் தாமைந்தா ஞாதிக
ளவருமின் றேலவர் வழியாறா ஞாதிக
ளிரண்டாம் பாட்டன் வழியேழா ஞாதிகள்
முப்பாட் டன்வழி யெட்டா ஞாதிக
ணாலாம் பாட்டன் வழியொன்பான் ஞாதிக
ளைந்தாம் பாட்டன் வழிபத்தா ஞாதிக
ளாறாம் பாட்டன் வழிபதி னொன்றா
மேழாம் பாட்டன் வழிபன் னிரண்டாம்
ஞாதிக ளாக்கொடு நடக்குந் தமிழக
மிவர்க்குமேல் ஞாதிக ளிருந்துணர் வுற்றெழி
னவர்வழி மக்களை யரசறிந் தேற்றிடி
னிறந்தோன் பொருளவ ரெய்தலும் வழக்கே

(௯௮௯ ௨) இவரில்,

யாருமின் றென்றறி யறிவன் சாங்கால்
தங்குல குருமடந் தம்மிறை கோயி
லறநிலைப் பொருளா வருணன் கொடைசெய்வ
னன்றி யேது மாற்றவொண் ணாதே
யின்றெனி லரச னெடுப்பது வழக்கே
ஞாதி யிருப்பவ னன்கொடை செயினதன்

பார்வையை ஞாதியின் பால்விடல் வழக்கே
யறனறப் பொருட்குரி யார்க்குப் பயன்றரு
பிறரதைப் பார்ப்பது பிறருக் குழைப்பதே
யாயினும் பிழைபடா தாற்றிற் புகழுண்டு
பிழைபடின் மறத்திற்குப் பிணையவ ராவ
ராகலின் மறப்பய னவர்க்குநல் லறப்பயன்
பொருட்குரி யார்க்கும் புகட்டப் படுதலி
னரனரு ளாணைக் கஞ்சி யொருகுடி
யறப்பொருள் பிறகுடி யார்பார்க்க வஞ்சுவர்
ஞாதிக ளறம்பார்த்த ன்றகுடி வழக்கே
யன்றேற் குருமடத் தமர்துற வார்குரு
தம்பார்வைக் கருள்வது தமிழக வழக்கே
குரவரா வாரிற் குறவரும் வருவதுண்
டவர்பாற் றொண்டர்கண் ணாயுறல் வழக்கே
யிங்ஙனந் தமிழக வியனடை பெறுதலின்
ஞாதி வழிவழி நட்புடன் வாழ்வரே
பரவணி தேராப் பழங்குடி யின்றே
லப்போல் வளைந்து ஞயம்பட வாழ்தலின்
பொருண்மகள் வழிக்குப் போத லின்மையின்
பிறகுடி யறப்பொருள் பெறுத லின்மையி
னறப்பயன் பிறகுடி யடைத லின்மையி
னாய னிறந்தபின் னாச்சி யுரியவள்
ஞாதி பொருளென நாளெலாம் பேணி
வருவாய் திளைத்தவள் வதிவது வழக்கே
கைமைநோன் பாற்றல் கற்பியல் காத்தல்
விலக்க மொழிந்தபின் மெய்ப்பொருட் டொழுதல்
பேணி வரினவர்ப் பேணுவர் ஞாதியே
ஞாதி யெளிமையை நாடிச் செருக்குறின்

பணம்பொருட் படுத்தன்பில் பாவையை மதிக்கில
ரடுக்கிலர் பேசில ராயினுந் தீமைவந்
தூடாடின் ஞாதி யுதிரந் துடிக்குமே
யாதலி னொதுங்கின் றக்குடி கெடாநிலை
யருள்வா னிறைதிரு வடிபராய் நிற்ப
ரறிவுயர் குடிப்பிறப் பாயிரத் தஞ்சாறு
பெண்பால் ஞாதிக்குப் பிரிவாக்கி நின்றிடுங்
கொடியவர் பிறந்த குடியும் புகுந்த
குடியுங் கெடல்பார்க்குக் குறிசொற்ற தாமே
யக்குடி கண்காட்சி யாகலிற் றமிழகப்
பெண்மக்க ளறிவு பெரிதுஞ் சிறக்குமே
நற்குடிக் கைமை நற்றாய் ஞாதிகள்
மக்களா யிருத்தல் வழக்கா றாகலின்
யவரை யேவற்கு மவர்பணி யாற்றற்கும்
கடமையென் றிருபாலுங் கருதுதல் வழக்கே
பொருளுள தாலேவல் புரிகுந ரெனவெண்ணி
னன்றே கூலியா ளாக்கிட வருமே
யவ்வள வன்றிவ ளப்பன் பொருளென
முன்னின ளோவெனன் முதலுரைத் தொதுங்குவ
ரஃதறி யறிவுடை யரிவையர் ஞாதியை
மக்களில் வைத்து வழங்குதன் மரபே

(கூகூ சஅ) யம்முறை,

தனையர் ஞாதிக டாய்மார் கைமைக
ளென்றறி முதுகுடி யிற்பிறந் தறிவுய
ரொருத்தியோர் பெண்மக ளுடைய கைமை
தன்பொருள் காணிக டாமறி கில்லா
ளிளையவர் தாம்பயி ரிட்டு விளைவுசெய்
தறுத்தடித் துக்கொண் டவள்மனை சேர்ப்பர்

பூவுக் காயிரம் பொதிநெல் விளைவயல்
வரகுமுன் பலவும் வரும்பல புன்னிலம்
விளைவன கொண்டிட்டு விற்கு நாளின்
மாதினி யாராணை வாங்கிவிற் றப்பொரு
ளெல்லா மவள்பா லிடுவது வழக்கே
மகள்சூ லாயினள் மற்றது கேட்டுடன்
சின்னம்மை போய்த்தன் செல்வியை யழைத்துவந்
தன்பாப் பார்த்தன ளாண்மகப் பிறந்தது
சிற்றப்ப னின்பாய்ச் சிறப்பெலாஞ் செய்தனன்
மகவைக் கொடுபோய் மகள்தாய்க்குக் காட்டப்
பெயரனைக் கண்டு பெருமகிழ் வார்ந்தாள்
அத்தகு தாயிடை யன்பார் மகள்கைக்குத்
தங்கக் கடையஞ் சமைத்திடச் சொற்றாள்
அம்மே யுனதுசிற் றப்பற் குணர்த்ததை
யென்றா ளதுகேட் டிடவதை மறந்தாள்
அப்பன் பொருள்சிற் றப்ப னறியான்
அம்மை யிடந்தா னளவில் பொருளுள
அவள்மன மின்மையி னாங்கறைந் தாளெனப்
பெண்மையி னினைந்துதன் பேதிதென் றிருந்தாள்
யாரோ விதைச்சிற் றப்பர்க் குணர்த்தினர்
பெருவிலை பெற்ற பெருமா ணிக்கம்
பதித்துக் கடையம் பசும்பொனிற் செய்ததற்
கேற்ற வணிகளு மினிதுசெய் தருளினன்
பெரும்பொருள் தன்னப்பன் பேழையிற் கிடப்பப்
பிறர்பொருள் செல்வி பெறல்வசை யென்றிலள்
அன்புட னேற்றின் பவிர்தரப் பூண்டன
ளிங்ஙன மன்பா ரிவர்குடி சிறந்தது
காலஞ் செலவவள் கடன்புரிந் திளைஞர்

மூவ ரெடுத்து முகமலர்ந் தனரே
யிவர்தமின் மூத்தோ னியான்குடி தாங்கியென்
றயர்த்தும் பரைந்தில னவனை யுலகங்
குடிதாங்கி வேளெனக் கூறு மவனுடைக்
கதைபல வுண்டொரு கதையிது வாமே
யிவ்வா றொருமை யாண்டுமிங் குளதே
ஞாதி பொருள்கொளல் நாளு மியறலின்
ஞாதி பொருளிலா னற்கடன் செய்தலின்
கைமையா மெளியரைக் காத்தவர்க்
(௬௯௯) குணாத்தந்து செய்கட னுஞற்றலும் வழக்கே.

## ௰௫. எளிய மகளிரியல்

மங்கலை யாயினும் வாழ்வற் றவளேனும்
கற்புங் காவலுங் கலனா வுடையவள்
இயல்பெருங் குடியினு மெளிய குடியினு
மதிக்கப் படும்பெரு மாண்புமிக் குளாளே
யழிவுகண் டாலவ ளன்றே யிறந்ததிற்
றள்ளப் பட்டுத் தணப்பது வழக்கே
யீன்றவர் சேரா ரினத்தவர் சேரார்
பாடுபட் டன்றிப் பசிக்குண வின்றே
கடந்தவன் றைக்கே கைமைக் குரிப்பொருள்
ஞாதிகள் கொண்டு ஞயம்பட வாழ்வர்
மங்கலைக் குள்ள மகட்பொரு ளன்றே
மாமனிற் குய்த்திடல் மருகன் கடனே
யவள்மக வுண்டே லவட்கென வைப்பர்
தாயின் மகார்க்குத் தாய்மாமன் காவலன்
என்பது தமிழகத் தியலு முதுமொழி
மாமனின் றேலிள மைந்தன் பொருளை

யவன்வழி யினர்காத் தருளல் வழக்கே
தகவின ருண்டெனிற் றந்தைகைத் தருவர்
தகவின ரின்றெனிற் றந்தைவைத் தருள்வன்
அழிநடை கண்டு மவள்மயக் கத்தால்
ஒருமட னொத்துறி னூரொறுத் திடுமே
உடையவ னிருப்பவூ ரொறுத்தலென் னென்றால்
பிறர்க்குத் துணிபு பிறவாமற் காப்பது
பிணிபடு செடிகட் பிடுங்கி யெறிந்திடின்
றோட்டப் பயிர்நோய் தொத்திக் கெடாதே
குடியழுக் கற்றுக் குலவுதல் கருதி
யழிநடைப் பெண்களை யகற்றுதல் வழக்கே
யாகலிற் கற்பழி யாட்டிகட் டேடினும்
உயர்குடிக் கட்காண வொருத்தி யிராளே

(உசூஉ) இவ்வாறு,

தலைநாண் முதலாத் தழைதரு மொழுக்கம்
வழுவா முதல்வர் வழிவழி யுழுதொழில்
செட்டு தலைமை சிவாசிரி யச்செயல்
உடைமையி னெளிய ரொருவரின் றானார்
ஆயினு மாறிடு மடுவு மேடும்போ
லாகுஞ் செல்வ மற்றவர் தாமும்
உண்டா யிருத்தலி னுயர்குடிப் பிறந்தவர்
இனத்தவர் கையை யெதிர்பார்க் கில்லார்
மானமொ டுழைத்து வருவாய்க் கியையக்
கூழுண் டெனினுங் குடிபே ணுவரே
யவர்தமை யொத்தவ ராப்பொரு ளாளர்
கருதில ரெனினவர்க் கருதிலர் தாமும்
இந்நிலை செவிக்கே றினத்தவர் மற்றவர்
மணமுற் றத்தவர் வராமையை வினவி

யழைத்திணக் கிக்கொணர் வான்புரி வாரே
யப்படிச் செய்கிலா னாயி னனைவரு
மெழுந்தகல் வார்மண மெவ்வா றாமே
யாகலி னொருமையு மன்பும் நிலைத்ததே
யனைவரு மினக்கட் டகறலா காதே
இவ்வொழுங் கியலிங் கெளிய ரிறந்திடின்
ஞாதிக ளூரித்துட னண்ணிச் சிறப்பிப்பர்
செல்வ ரிழவினுந் திருவிலா ரிழவது
மேலா நடைபெறா விடின்வசை வருமென
நன்கு நடாத்தி நயத்தல் வழக்கே
திருப்பெற வருவதிற் செலவிட வாரா
ரினத்தெவ ராலு மிகழப் படுவர்
பழங்குடி யினிலெள்ளப் பட்டவ ரின்றே
காரும் பிசானமுங் கைமை குடிக்குத்
தக்க படிநெல் தந்துகாப் பாரே
யவர்மகார் தம்மை யடிக்கடி பார்த்துக்
கற்பித் துயர்த்துங் கடமையுஞ் செய்வார்
தாய்மாம னெண்ணந் தழீஇமணப் பிப்பார்
வழிவழித் தமிழக வழக்கிது வாமே
பொருளாளர் பொருள்ஞாதி பொருளெனப் படுதலின்
ஞாதி யருள்பொரு ணங்கை கைமையாம்
போதுபெற் றுண்டாற் புவிவசை சொலாதே
ஞாதியின் றேன்மிடி நங்கைக்குக் கைமையாங்
காற்கொட்டை நூற்றுணல் கடமையா கும்மே
கைமை புரிதவங் கைமைநோன் பாமே
கடவுள் வழிபாடுங் கைக்கொளற் குரித்தே
வெண்கலை யுடுத்து வெளிவரா தடங்கல்
சுற்றிக் கழுத்திடு தூசுடன் வாழ்தரல்

ஒருபொழு துண்டிட லுப்புக் குறைத்திடல்
பனிமல ரயர்த்தல் படுத்தன்முன் றானையில்
உடற்றுணை போயதற் குடைந்து தெளிகாலை
யுயிர்த்துணை யிறைதா ளுளங்கொடு தொழுதல்
மக்கட்கு நன்கு மதிப்புக் கொடுத்தல்
ஒக்கல் போற்ற வுடன்பிறந் தோர்தொழ
கைமை நோன்பு காப்பது கடனே
கைமை நோன்பு காப்பவள் பிறந்த
குடியும் புகுந்த குடியு முயருமே
குலமகண் மாருளங் குளிர நடப்பவர்
சிவனன்பர்க் கன்பரிற் சிறந்து வாழ்வர்

(உகூஎசு) அதனால்,

எளிய மகள்கைமை யினைத்தவ னில்விட்டுத்
தந்தை பிறப்பகந் தனக்கழைத் திடவப்ப
வன்புனக் குண்மையி னழைத்தனை யாயினும்
மரபது வாமோ மகணா னெளிமையை
நாளுந் திளைத்து நயத்தனீ கண்டிலை
சோனை மாரி சொரிந்தநற் பதத்துப்
பனைநுகந் தாங்கும் பருங்கைமா வேர்ப்பூட்டி
முத்து விதைத்து முளைபல கிளைத்துக்
கதிர்க்கா யிரமாக் காய்த்து விளையினும்
வரைபோற் பொற்குவை மல்கினுந் தமிழக
மகளிர் பிறப்பக வாழ்வவா விலரே
யெளிய விலைப்பரி யெடுத்து மணைவாயிட்
டரைத்துவெஃ கித்தெளித் தாக்கிக் கொட்டை
யிராட்டிட்டு நூனூற் றிருந்தமி ழகவொழுகு
பாடுதவ நூலிடும் பணந்தரு நொய்காய்ச்சிக்
குப்பைக் கீரை கூட்டிக் கஞ்சியுண்

டிருவிலிக் காளன் சிற்றில்வாழ் வுயர்வே
யென்ப தயர்த்தனை யென்னே யையா
யென்னுடை ஞாதிக ளெளிஞ ராயினுந்
தலைவலித் துக்கிடந் தனனென்று கேட்டான்
மருந்துவைத் துக்கொடு வந்தூட் டுநரு
மன்னப் பால்கொணர்ந் தருந்தென் குநரு
மாடைதோய்த் தருணரு மாயரு கிருந்து
தலைதூக்கு வரையெனைத் தவிர விடாரே
யவரவ ராலியன் றளவுத வுவரே
யெனைப்பற்றிக் கவலலை யென்றா ளப்ப
னூர்போய் நறுநெல் லுய்க்குந னென்றா
னாங்கொப் பிடத்தி லவ்வேளை வந்தா
ளப்பனும் மருக ரழைக்குநர் வம்மி
னென்றன ளெழீஇப்போ யினனுண்டு பேசி
யிருந்துவந் தான்மக ளிளையாள் கொணர்ந்திட்ட
சோறுணுங் காற்றந்தை சொற்றதைச் சொற்றா
ளதுகேட் டிளையா ளப்பவெங் குடியிற்
கல்லைக் குற்றிக் காய்ச்சிக் குடித்திலம்
சந்தைக்கு நூலிடத் தான்போ யறியாள்
வேண்டா வெனினும் விடாணூற்கை யதுபோதும்
பணமிக் கிருந்தாற் பங்கிடு ஞாதிகள்
கைமைக் குணவிடக் கடமையற் றாரோ
யவரிது கேட்டா லாற்றுவர் கொல்லோ
தரங்காத்த னின்கடன் றானென் றாளே
வினாய்த்தந்தை யெண்ணத்தை வெளிவிடான் சென்றான்

**(உகூ௱௰௩)** ஒருகாலத்து,

வாழ்ந்து கெட்ட வணிகனில் லொருத்தி
யுயிர்த்த வொருமக வுளவிளங் கைமை

ஞாதி முடிந்தவ ணாத னிறந்தன்று
செழித்துள நாளவன் செய்த வுதவிகொண்
டாளா கியசெல்வ ரயலுள வினத்தவர்
கணக்கப் பிள்ளைமார் கையாள்க ளாவுள்ள
வெல்லாருங் கூடி யிருந்துகண் ணீர்விட்டுச்
செய்ந்நன்றி மறவாத செம்மைகொண் டண்ணர்க்கும்
மற்றுள வினத்திற்கும் வழக்கறிந் தமையி
னோலைவிட் டனருட னுவரெலாம் வந்தார்
குருக்களும் வந்தனர் குயிற்றுவ வெல்லாந்
தொடங்கித் தமையனார் துணையொடு வருதலை
யெதிர்பார்த் திருக்குந ரிந்த வேளையி
லரிசிப் பொதியு மாவன வனைத்து
முய்த்திட வாணைசெய் தொருகுரு வுடனே
யண்ணருந் தேவியு மாங்குமுன் வந்தார்
தங்கைமாரக்கைமார் தாமுங் குழீஇவந்தார்
கண்டன ரிங்குக் கணக்கர் முதலியோர்
வணிகர் செழித்துமுன் வாழ்நாண் மகிழ்ச்சியி
னுயர்துன்பி லாழ்ந்தம்மை யுடன்பிறந் தவர்முன்
பிழவு வினாயெங்க ளிடத்துள பொருளெலா
மவர்பொரு ளதுகொடின் றாற்றலாற் றுவமெனப்
பண்ணவர்க் கொடுவினை பண்ணத் தொடங்கினர்
மறுத்தனர் செட்டியார் வழக்காய்த் திடைவரும்
பொதிகளை மறித்தொரு புடைமறைத் திட்டா
ரிங்ஙனங் குமைச்ச லெழலுணர்ந் தம்மை
யயலுள்ள கணக்கன்பெண் டமூகை யமர்த்தித்தன்
கையிருப் பாம்பத்துக் காணமீந் ததனையுன்
றவனிடைக் கொடுத்தென் றமையர்க் குணர்த்திட்டுச்
செயலின்று நாளையுஞ் செயச்சொல் லப்பா

லவன்மனம் போற்செல வாற்றட்டு மண்ணர்க்கு
ஞாதி முடிந்த நாளொரு சுமையெனச்
சொல்லிவிட் டேனெனச் சொல்லென் றனளே
யங்ஙன மம்மைநோக் கறிபழங் கணக்கர்
தேவி தரற்கொடு செயுமுறை செய்தார்
வருத்த முடனண்ணர் வாளா விருந்தா
ரிருவகைக் குருக்களு மிருந்துமூன் றாட்டைச்
சேயிறு திக்கடன் செயச்செய் வித்துப்
பத்துநா ளிழவும் பண்பா நடந்தது
நன்மைக் கிருத்திய நன்மாமன் றன்பெருந்
தன்மைக் கியைந்த தரமாச் செய்தன
ரங்ஙனம் வருவா யனைத்தையுந் தமையன்
பாற்கொடுத் திவைநும் பாலிருக் கட்டு
மாண்டுசென் றென்னைவந் தழைத்துச் சென்மெனச்
சொற்றன டங்கை துணையைத் துணைவைத்துக்
கணக்கரைக் கூய்ப்பொதி களைக்கொணர்ந் திடச்சொல்லி
வீட்டிலிட் டேகினர் மேற்கணக் கன்மனை
முதற்பல மின்னார் முதல்வியி னூழியம்
நாடொறுஞ் செய்தனர் நடந்ததோ ராண்டு
யாவரும் வந்தனர் யாண்டிறு திக்கடன்
றகவாற்றி மகவொடு தங்கையை யண்ணருந்
தேவியு மழைத்துச் சென்றன ரிருந்தார்
மதுரைவாழ் செட்டிக்கு மாதவ நாட்டம்
பெரிதுமுண் டாகத்தன் பெரும்பொரு ளாள
முளையின்மை ஞாதி முடிந்தமை தூக்கி
யிறைப்பொரு ளாச்சுமந் திருத்த லுவர்த்தனன்
றங்கை மகவொடு தன்னகத் துளபொறை
யிருத்தலுந் தவத்தவா வெழுப்பலு மாச்சில

பகல்கழித் துந்தவப் பற்றே மிகவது
தங்கைக் குணர்த்தினன் றம்மினத் தவர்க்கூட்டி
மகட்பொரு ளாவிவை வழங்கின னிவையிறைப்
பொருளாவைத் தேனெனப் போதித் திருந்தா
னெளிய விளையாட் கெனுமெண்ணந் தேராமற்
றாயம் பொதுவெனத் தாங்கரு தினர்சிலர்
துணைவியுஞ் செட்டியுந் தூய்த்தவங் கருதித்தன்
னிளைஞளாங் கைமையை யிளஞ்சே யுடன்வீட்டில்
வைத்தன னம்மே மனதுடை கலைநீ
சொக்கநாதன் றுணையுள னென்றிரீஇத்
தனிமையைத் தனிபாற் சாற்றினன் சென்றான்
றவவிருப் பினனாத் தணந்தவவ் வணிகன்
சின்னாள் வராமையிற் செத்தன னென்றவன்
மற்றக்கை தங்கை மக்கட் சிலர்தூண்டத்
தாயம் பொதுவெனத் தாம்புகுந் தனர்பறித்
தேகினர் சேயொடு மிளங்கைமை யுட்கிடந்
தேழைபங் காளனை யெண்ணிக் கரைந்தனள்
மன்னவைக் கண்ணிறை மாமனா வந்திந்த
மகன்றாய்க் கியானிவை வழங்கின னிவையிவை
நின்பொரு ளாக நிறீஇயின னென்றாடிப்
பெறுவான் றவவழிப் பெருமா னுசிதன்முன்
தங்கை வராதுசேய்த் தழீஇமன் பொருளொடு
வஞ்சனைத் தாயத்தர் வவ்விய செல்வமும்
வரவழக் குரைத்தருள் வரலா றுண்டே
செட்டியுந் துணைவியுஞ் செத்தபி னிறைப்பொருள்
கொளல்வழக் கதூஉமிறை கொடுத்தலூ ரறிந்தும்
வாய்திற வாதுள மாண்பென்னை
**(உகூஉாச)** வல்லான் வகுத்த வகையது வாய்த்தே.

## ௰ச. முதுகுடிச் செல்விகள் அறிவுநிலை

பெண்களை யாண்களைப் பெற்றவர் தம்பொரு
ளிருபாற்கும் பங்கிட லினிதென் றனர்சிலர்
குடில ரடிமைகள் குயின்றதக் கிளர்ச்சி
யதுகேட்ட முதுகுடி யரிவை யொருத்தி
ஆவீ தென்னே யறிவீ தன்றே
வழிவழித் தமிழக வழக்கிதன் றாகலின்
அறிவுடை யோர்முதி தறிந்துகொண் டாடலின்
இவர்கூற் றறிஞரா லியம்பப் படாமையின்
வழக்கழி வாற்றுதன் மதிக்கழ கின்மையின்
பழவொழுக் கங்குடிப் பழுதுசெய் யாமையின்
பிறந்த குடிமிகப் பெரிதாச் சிறத்தலின்
குடிப்பிறப் புணர்ந்துயர் குடித்தவன் மணத்தலின்
யிருகுடி யுஞ்சிறந் தெளிமை பறிதலின்
ஒன்று தளர்வுறி னொன்றதைத் தாங்கலின்
மணிப்பணி வரிசைகண் மகட்பொரு ளீதலின்
பல்லாண் டன்பாப் பலபரி சுய்த்தலின்
புகுந்த குடியவை பொருட்படுத் தேற்றலின்
கொண்டு கொடுத்தல் குணமா நடத்தலின்
அயல்வீ டடைபொரு ளறப்பொரு ளன்மையின்
பிறர்பொரு ளவாங்குடி பெருங்குடி யின்மையின்
தாயமும் ஞாதியுந் தனித்தனி விளங்கலின்
வழக்கழித் தெழுமகள் வாழ்வு குலைதலின்
ஞாதியென் றடைபொரு ணாதனைப் பிரித்தலின்
பேணப் படுமகள் பெண்ணெனப் படுதலின்
ஆட்டி பொருளாளு மாண்மை பெறாமையின்
மகட்பொரு ளாள்வதும் வலானா யிருத்தலின்

பாத்தெடுப் பினுந்தவன் பாலது சேர்த்தலின்
தன்னாட்சி கொண்டாற் றவன்பிறன் போறலின்
றவனாட்சி செயின்மனை தன்னாட்சி யின்மையின்
தனித்தனி முதன்மைகொ டாமன் பழித்தலின்
அவண்வரின் படிற்றளி யாற்றவன் பறிக்கையின்
பூசல் விளைவொடு புறஞ்செல நேருமே
யரசவை யேறவு மஃதிடந் தருமே
யாளனைத் தோற்கடித் தாடுறச் செய்யவோ
வதற்காட் பிடித்தவ ராட்டுபாம் பாக்கவோ
வென்றபின் பிறதவன் வேறெடுப் பிக்கவோ
பழங்கற் பியற்பொருட் படுத்தா தொழிக்கவோ
பிறந்த குடிப்பங்கு பெறற்கியை விப்பதே
யியைந்தமின் னார்கற் பிலாரா வாரே

(உஉசச) அதாஅன்று,

புகுந்த குடியில்லைப் பொறுத்த லறமிலை
பிறந்த குடிப்பொருள் பிரித்தேற்ற லறமெனின்
பெருங்குடிப் பிறந்த பெண்களெல் லாரும்
வழிவழி யுழைத்தீட்டி வரல்வேண் டாவோ
விலங்கிற்கு மக்கட்கும் வேறுபா டறிவித்தற்
கெளியமின் களும்வெளி யேறி யுழைத்திட
விடாத தமிழக மேன்மக்க ளியல்வேறு
மற்றவ ரியல்வேறு வழிவழி வழக்காத்
தந்தையு மைந்தருந் தம்மிலொத் துழைப்பதி
னொருப்பட் டரிவைய ருழைத்தீட்டி னாரோ
வெயின்மழை காற்றின் வெளியேறி மின்னார்
மண்வெட்டி தூக்கி வரப்புத் தறித்தல்
உழுது மரமடித் துயர்தொழி லுஞற்றல்
எருதோட்டி யூர்தொறு மேறி வணிகஞ்

செயக்கொண்டு கட்டித் தெருத்தொறும் விற்றல்
திரைகட லோடியுஞ் செம்பொருள் தேடல்
கைத்தொழில் புரிதல் கணக்கு வரைதல்
சிற்பங் கலைத்தொழில் செய்துழைப் பெடுத்தல்
இவையெவர் செய்துபொன் னீட்டி வருநரே
வருதலி னாடவர் மட்டும் பங்கிடல்
தமிழகப் பெருங்குடித் தக்கோர் வழக்கே
கொட்டைநூற் றிடனெற் குற்றல் கதிர்கொய்தல்
பருத்தி யெடுத்தல் பழனக் களைகட்டல்
முடைதல் நெய்தன் முதலிய சிறுதொழிற்
செயலுமுண் டெனினவர் சிறுகுடிப் பெண்கள்
எளிமையி னாலவை இயற்றுந ரவரும்
பிறப்பகப் பொருள்பங்கு பெறவிழை யாரே
வெளிவேலைக் கிளம்பெண்கள் மேவலிங் கின்றே
மேவி னழிநடை மினார்குடி யவரே
மிடிப்பட்ட கிழவிகள் வெளிவேலைக் கேகுவ
ரவருஞ் சிறுகுடி யாரா வாரே
நூனூற்பர் நெய்வர் நுண்ணியர் மகளிர்
வீடடங் கியதொழில் மேலோர்க் குரித்தே
யாச்சிநூற் றிடலைய ரரைநாணுக் காமன்றிப்
பங்கிடப் பெரும்பொருள் படைக்குந் தொழிலிலை
மானக் குடிப்பெண்கள் வறுமையிற் செம்மைப்
படுதற்கு நூனூற்கை பயிலப் படுதொழில்
நாடொறு முயர்குடி நலாருழைத் திடினு
மவருண்ட சோற்றுக் கதுகா ணாதே
யுழைத்தலு மின்றி யூழியச் சோறுண்டு
வளர்த்த பெருமையு மணாளனைத் தேர்ந்து
மணிப்பணி வரிசைகள் மகட்பொருண் முதலிய

வருளி மணந்தரு ளருமையு மறந்தவர்
பொருளைப் பங்கிடப் புகுவது மழகே
பிறர்பொருள் கொளவாய் பிளந்துநிற் பவனைத்
தலைவனாப் பெறுநங்கை தனிமைநன் றாமே
பெரிதறங் கருதிப் பெண்ணடி வேண்டி
யருந்தவம் புரிந்திங் கரிவையைப் பெறுவார்
நல்லறத் துணையென நற்குடிப் பிறந்தவர்
மணந்தறன் வளர்ப்பது வழிவழி வழக்கே
யோங்கறத் துணைவி யுணற்கவள் கொணர்ந்திடி
னறத்தவன் செய்கை யறமோ மறமோ
யஃதவா மவனற மழகிதே யம்ம
வழிபுதுப் பித்தால் வருகுநர் போகுந
ரிருதிறர்க் கும்பொது வெனினுமுய்த் துணரின்
மூதறி வினர்புரி முதுநெறி யழித்துப்
புதுநெறிப் படுப்பதிற் புதுநல மின்றே.

(உ௱௨) யிதன்மேல்,

அறத்துணை யாமணந் தறம்புரி நற்றவன்
செல்வமில் லானெனுந் தேவியுந் தானுந்
தான்பெறு மக்களுந் தழைதர வாழ்வா
னாடொறு முயன்றீட்டி நாட்கழிப் பதுபுகழ்
முயற்சி திருவாக்கு மென்னு முதுமறை
வழிப்பட் டாக்கி வரவறிந் தில்லறம்
பேணுதல் கொண்டு பெருமைகுன் றாதே
செலவைச் சுருக்கிச் சிறிச்சிறி தாக
மிச்சப் படுத்து மிகினஃ தறப்பொருள்
அவ்வழிப் படாஅ னயற்பொருள் விழைமடி
யவன்மனை யாவர லவள்செய்தீ வினையே
யாகலி னுடன்பிறந் தவர்பாற் சமனிலை

யேற்றக் குறைச்சலா வெனும்பங் கவாவுவோர்
முதுகுடிப் பிறந்த முதல்விக ளின்றே
யுய்த்துணர் வார்க்கிவ் வுண்மை விளங்குமே
பிறந்த குடிப்பொருள் பெறச்சொல் பவர்பிறர்
தொல்லை வியாசர் சுமந்துபை டீநசி
மாமன் மகண்மாமி மகட்குடன் பிறப்பிய
லுண்டென்று நாட்ட வுயர்தமி ழகமணம்
பிழையென்று பல்லாண்டு பேசினர் தோற்றா
ரவரினத் தவரிவ ராவா ரவரை
வென்றிவர் தமிழக மேலோர் நிறீஇய
வழக்கழி வாக்க வலேமெனு மொருவ
னின்று மன்று மென்றுமின் றென்றாள்
மருதூர் மின்னிவண் மங்கல புரமின்
(உரு உஅ) ஓர்நாள்,
உயர்குடிப் பிறந்ததன் னூரியன் பிறர்பொருள்
கைப்படக் கொணர்ந்தமை காணவு மன்ப
வேதொரு நாளு மிலாத்திரு நாளின்று
தனையறி யாதின்பந் தலைசிறந் திட்டது
கிடைத்ததென் புதையல் கிளற்றுகென் றிட்டாள்
பெருந்திரு வாளன் பெருமாள் பொருளினைப்
பொருட்படுத் தில்லான் புரவிற் சிறந்துளா
னவனட் பினர்க்கெலா மள்ளி யிறைக்குநன்
கண்டுநட் டேனுடன் கைமேற் பலித்தது
நாலா யிரம்பொன் னயந்தின் றளித்தான்
வேளைகண் டின்னமும் வேண்டி வருவே
னென்றுட் சுமையாளை யிகுத்திழித் திட்டான்
வினாயது பொறாளாய் வெரீஇப்பின் புகுந்தா
ளவனாளை யுய்த்திட் டருந்தடை சார்த்திட்டுக்

கூயினன் கண்ணீர் கொட்டிற்று வந்தாள்
கவலலை நின்னுளக் கருத்தென்னை யென்றான்
பிறர்பொருள் கொணர்ந்த பெருங்குடிப் பிறப்பே
பிறருடை யுடீஇயான் பிறர்சோ றுண்டு
நின்றோள் சேர்ந்து நிலைகெடு மகப்பெறி
னம்மக வுனதோ வறியா யோநீ
யறத்தா றீட்டி யறன்வளர்ப் பதுகுறித்
தென்னைத் துணையா வேற்றனை யன்றே
யறனிது தானோ வறிவுடைக் கணவ
வின்னே யுடையா னிடம்பொருள் கொடுத்தழ
லாற்றிக் கழுவா யாற்றிவந் தன்றிச்
சட்டி பிடித்தியான் சமைக்கில னென்றாள்
வழக்கறி யவனு மறுத்தற் கிடனின்றி
நாணிப் பொருள்கொடு நடந்தா னவன்பின்ன
ரொளித்தொரு மகவையு முய்த்தா ளறிதர
மானமுங் கூசமு மல்க வுடன்போ
யுடையா னிடம்பொரு ளொப்புவித் தனனே
யக்கா லவனுள வறிவுடை மூத்தோர்
பொருட்செல விடல்பொறாப் புத்தி பகர்தரு
வேளை யாகலின் விரைந்தவர் தாமெழீஇ
யோயுடை யாங்க ளொருவரு மெள்ளில
மளவில் பொருளிவ னயலார்க் கிறைக்குந
னதுதகா தென்றிவ னறிய வுணர்த்துநம்
பலரினீர் திருப்பிய படியென் னென்றா
ரவர்பாற் சொல்நா ணடைந்துதள் ளாடிப்
பிறர்பொருள் கண்டதன் பெண்டாட்டி சொற்றதை
மெல்லச் சொல்லி வெளிப்போந் தனனே

(உ௲எ௰) அப்பால்,

அதுகேட் டவருகந் தவட்காண வேண்டி
வந்தன ரவன்பின் மகிழ்ந்தவ ணின்ற
கற்புத் தெய்வத்தின் கால்விழுந் திறைஞ்சினர்
வந்தவர் தம்மை வரவுசா யிருத்திச்
சான்றிரண் டாகலின் றவனுக்குஞ் சேய்க்கும்
நற்பொருள் போய்வர நயந்துபெற் றவர்க்கும்
அறுசுவை யுணவாக்கி யருளின ளவளாங்கு
வந்துண் டவரும் வழியனுப் பினர்சென்றார்
மற்றவள் கண்ணீர் வடித்துக் கிடந்தாள்

(உநஅய) பொறாத்தவன்,
மாட்டடைந் திருந்தென் மடமையை மாற்றிய
மானே நின்சொன் மறுத்தில னன்றோ
யுண்டிலை யென்னே யுளக்கவ லென்னே
யென்றுவேண் டிடவு மென்னா ருயிரே
நமக்குமுன் னோர்பொரு ணயந்துவைத் திருப்பவு
மன்றெந்தை பிள்ளை யாக்கந்தந் திருப்பவும்
மிக்க மகட்பொருள் வேறுதந் திருப்பவும்
பிறர்பொருள் மேனீ பெட்புவைத் தனையே
நஞ்சுண் டவரை நசுக்கு மதனினும்
பொல்லா ததுபிறர் பொருள்கொள லன்றோ
யென்பே றழித்தினி யான்பெறு மக்களி
னறிவழித் துளபொரு ளழித்திது வரைப்புரி
யறனழித் திசையழித் தன்பழித் திருளிடை
யாழ்த்துங் கொடுங்கடு வன்றோ பிறர்பொரு
ளின்மையெய் தினுமுழைத் திடநீ வல்லையே
வேலா தெனினு மியான்கொட்டை நூற்றிங்
குனக்குமுன் மக்கட்கு மூட்டுவ னன்றோ
குடிபொன் றிடும்பொருள் கொளுந்துணி பரமோ

வலிதே தரினு மதிசொலித் தட்பது
மேலோர் வழக்கந்த மெய்மறந் தனையே
பிறரையே மாற்றிப் பெறுதலும் பிறர்க்கு
**நல்லவர் போல நடந்துநெஞ் சழித்துக்**
**கனிந்தவ ரளிப்பக் கவர்தலுங் களவே**
வஞ்சகர்க் கறிவுயர் பல்லா ரகப்படார்
குலப்பொறி யிலார்பொருள் கொளல்பெருங் களவே
கரந்து களவாடு கள்ளரிற் கொடிய
கள்ளர் பகற்கொள்ளைக் காரரிவ ரன்றோ
களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடுமென லயர்த்தனை
பெறுவான் றவவழிப் பிறர்பொரு டந்தா
ரென்றுகொள் வார்க்கிங் கீடேற்ற முண்டோ
பொருள்கொளல் போலுயிர் போமருந் தருளி
னழிதவ வழியிதென் றார்பெறு வாரே
யொருகுடி தாழ்ந்தா லொருகுடி யுயருமென்
றுரத்தவர்க் கொருநாளு முய்தி யின்றே
வொருகுடி தாழ்த்தி யுயர்ந்தவர் குடிநிலத்
தொன்றுள தாச்சொலற் கொருவனிங் கின்றே
பொய்யா மொழிபொய்க்கிற் பூவிலக் குடிநிற்கும்
பொருட்குரி யவருளம் புழுங்கு மனல்வீசிக்
கொண்டோர் குடிகெடக் கொளுத்திடு மன்றோ
நம்பொருள் பிறர்கொளி னம்முட் குளிருமோ
நம்மக்கள் பொருள்வீசி னாம்பொறுத் திடுவமோ
அவண்பிறர்க் கெரிச்சலுண் டாமோ வன்றோ
வயற்பொரு ளவாவுத லறிவோ மூடமோ
யினியிவ் வழிப்படே னென்றென் றலையி
லடித்தாணை யிட்டன்றி யருந்தில னென்றாள்

போன வுயிர்வரற் போலறி வுண்டா
யாணையிட் டூட்டி யகமலர்ந் தனனே
யிவரொத் தியற்றற மில்லற மென்ப

(உ௪௩௰) இந்நாட்டில்,

அயற்பொருள் கொண்ட வாளற் கறஞ்சொன்ன
மின்னிகர் மின்னார் வீடு தொறுமுளார்
பிறர்பொருள் கவர்தவன் பெண்டாய்க் களிப்பவள்
மானியன் றவள்பெறு மகாரு மகாரிலர்
ஆளனருள் சோறுண்ப ரன்றி மகட்பொரு
ளேனு மதுகொடுண் டிலரது கொண்டுணின்
மாதினி மார்வசை வழூத்துவ ரென்பர்
வீடிலை யென்றவர் விளம்பலு முண்டே
மாதினி மார்தம் மருகி கொடுசெலும்
மகட்பொரு ளழிக்கிலர் வளர்த்து வருவரே
யுரியனு முன்னோ ருடைப்பொரு ளழியான்
முயன்றீட்டி யறம்பேணி முகமலர் வானே
யிவ்வாறு தமிழகத் தியலியன் றிடுமே.

(உ௪௪௪) அதாஅன்று,

ஈன்றான் மகளுடன் பிறந்தா ளென்னினு
மவர்தனி மையிற்சென் றறிஞ ருரையாடார்
மாதர்க் கயலார் மேன்மனஞ் செல்வது
வழக்கான் மடவார் மடந்தையர் பேதையர்
மாயோளி ரென்றபேர் வைத்தனர் மேலோ
ரத்தகை யவரை யளித்தவர் கொண்டவர்
மக்கண்முக் காலத்தும் வழிவழிக் காப்பா
ரத்தக வாலவர்க் கறிவுமிக் குள்ளது
தமிழக வழக்கவர் தம்மிடத் தறியலா
மியற்கையிற் கேடவர்க் கியைத லின்றே

செயற்கைக் கவர்வெளிச் செல்வ தின்றே
யாகலிற் கெடாதநல் லாரிடைக் கெடுபொருள்
நல்கிலர் நல்கிடி னல்லறம் பொன்றுமே
மகட்பொரு டனையு மணாளன்றன் பார்வையில்
வைத்து மகட்கருள் வதுவழக் காமே
நாதன் பொருளையும் ஞாதிகள் பார்வையில்
வைத்துவெண் கலையாண்டு வருவது வழக்கே
வழக்கழி வாக்கிடின் மாண்கற் பழியுமே
வடநூற் கதைதேற்றின் மாண்கற் பழியுமே
மாண்குடிப் பிறந்தோர் வழக்கழி வாக்கார்
வடநூற் கதைகளை மறந்தும் படிப்பியார்
செந்தமி ழகத்துத் தெய்வநூன் முதலிய
வறிவுநூ லரிவையர்க் கறிவிப்ப தறிவே
கற்புங் காவலுங் கைவரு மவர்க்கே
கற்புத் தெய்வமக் காரிகை மாரே
யவரே யறன்வளர்த் தம்மையொப் பாவா
ராதலி னறவாழி யந்தண
(உசஎஉ) னருள்வழிப் படுமில் லறநடை பெறுமே.

## ௰ரு. மறுமணப் புதுமை

வடநாட் டரசின் வலிகொள் சிலரிங்கு
வந்தே றினரவர் மாண்பார் தமிழ்வேந்தர்
மூவருந் தம்மின் முரணி வலியழிந்
துறையுமக் காலத் தூர்தொறும் புக்குத்
தெருத்தொறும் பெருஞ்சொற் சிந்தின ரதுதான்
காமக் கிழத்தி காதற் பரத்தை
யென்றவைப் பாட்டி யெளிய விலைமகள்
நயத்தலும் பிறர்மனை நயத்தலும் வழக்கே

மணந்த வாடவர் வழிமுறை பின்முறை
மணந்து மகிழ்வதும் வழிவழி வழக்கே
யாடவர்க் கிவையற மாமென விதித்தவ
னடுநிலை திறம்பில னம்பிக ளறிவர்மெய்
மடவார்க் கறமிலை மறமிவை யென்று
வரையறுத் தேநூல் வகுத்தவ ராரே
யாடவர்க் கெப்படி யப்படி யறிஞர்
ஆட்டிக டமக்கு மறஞ்சொலன் முறையே
யெண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கென்று கற்பிக்குந்
தெய்வ மறைநாடிச் செந்தமி ழகமே
யிங்கோர வார மிசைப்பது தகவிலை
மடவார்க் கின்பவா வரமாட் டாதோ
மகளிரை மட்டும் வன்சிறைப் படுப்பதென்
தவனிலிற் குரிமை தரல்வேண் டாவோ
விளங்கை மைக்கு மியைமணம் மறமோ
வறவோ ரொழுங்கீ தாமோவென் றுருகித்
(உ சகூஅ) தமிழ்மக்காள்!
அருஞ்சிறை யெண்ணிநல் லாரயர் வாரே
யோயாத் துயரி னுழன்றழு வாரே
தலையெழுத் தெனச்சிவன் றனையிகழ் வாரே
யொக்கலை யுடையரை யூரையே சுவரே
யிக்கட் டமைத்தோரை யெள்ளிநிற் பாரே
தம்மனோர் பெறிற்பண்டி தன்னைநோ வாரே
வன்காற் றடித்து மடற்றாழை பூப்பதி
லூரனிலான் மனைபெண் ணுயிர்க்கினெள் ளுவளே
பலகணி வழிபிறர்ப் பார்த்துநிற் பாரே
கனவிற் கலந்தெழுங் கான்மயங் குவரே

தவனுளார் சிலர்பிறர்ச் சார்தரல் கேட்டுத்
தனித்தவர் பிறர்ச்சார் தரத்துணி வாரே
பிரிவாற் றாதுமுன் பிணங்கிய துட்கொடு
விடுதலைக் காக்கண் விழித்திருப் பாரே
யொளித்து நடக்கமுன் னுட்படு வாரே
பெருவயி றாயிற் பிறகுழல் வாரே
குடிக்கிழுக் கென்றுளங் கொண்டு மறைத்ததைச்
சிதைத்துடை யவர்காப்புச் செய்தழுங் குவரே
மானக் குடியின் மடநலா ராற்றிற்
குளத்தில் விழுந்துதற் கொலைஞரா வாரே
சாகமாட் டாதார் தவரிற் றுறந்தோடிக்
கண்டவர் கைக்குளாய்க் காலங் கழிப்பரே
வன்கணர் குடியில் வதிந்து பெறப்பெற
வெறிந்திட் டியான்கற் பினரென் றிருப்பரே
குடிக்கழி வாக்குதல் கூடா தெனச்சில
ரெண்ண மடக்கி யிருப்பினு மிவர்பெரு
மூச்சு விட்டன்றி முகமலர்ந் திராரே
சிற்றறு தாலிகள் செயன்மிகக் கொடிதே
யிதுபொறா துடன்கட்டை யேற்றித் தொலைப்பதே

(உருஉஅ) மறமிதால்,

ஆவிவ் வழிநடை யயர்விப்ப தறிவோ
யறிவுடை யோர்புரி யறமீ தாமோ
மகளிரை யொடுக்கா வழியான்மிஞ் சிற்றெனின்
தமைநோக்கி னவ்வெண்ணந் தவறென் றுணர்வரே
மண்டை யுளவரை மயிர்முளைப் பதுபோ
லுண்டி யுளவரை யுறற்கெழும் விழைவே
மலம்பெய்த னீர்பெய்தன் மதம்பெய்தன் முப்பிணி
யிவைபொது வென்ப தெவரு மறிவரே

மகன்முப் பிணிதீர்த்தன் மகளிரு பிணிதீர்த்தல்
போதுவ தென்பது பொருந்தா தையன்மீ
*ரயனாட் டறிஞ ரறிந்துசெய் நெறியே
மகளிரை மறுமண வழிப்படுத் திட்டா
லறமும் புகழு மாகு மன்றோ
தம்மூத் தவர்குரு தமைப்புணர் தரவிடின்
விருந்துணல் போலின்ப விளைவா மன்றோ
மைந்தரில் லார்க்கு மயல்பெரி தன்றோ
வுலகைப் பெருக்க லுயரற மன்றோ
(உருசகூ) அறனோர்மின்,
மறுமணந் தகாதெனல் வழக்கி லின்றே
தமயந்தி மறுமணந் தான்விரும் பலையோ
மச்ச கந்தியு மரீஇயனா ளிருவரை
சிபிச்சக் கரவர்த்தி செல்வி பௌமர
சுவியு மைவரைத் துணைவராக் கொண்டாள்
குந்தி நால்வரைக் கூடி யுயிர்த்தனள்
மணந்த பாண்டுவின் மனையு மவளே
யவள்சக் களத்தி யணைந்தா ளிருவரை
யவரிரு வரும்பெற்ற வாண்டகை மாராம்
பாண்டவ ரைவரைப் பாஞ்சாலி கொண்டாள்
மேலு மொருவனை விழைந்தன ளிருந்தாள்
எழுவர் கௌதம ரினச்சடி லையின்றவர்
வடதட் சகன்மகள் மாரிடை பதின்மர்
பிரசே தசருடன் பிறப்புகட் கில்லே
யமரர் மகளி ரணைவார் பலரையே
குருமனை மாணவற் கொடுபுதற் பெற்றாள்
அவளொப் பிடத்தி யாகிய மமதை

*அயனாடு-பிரமாவர்த்தம், அல்லது ஆர்யாவர்த்தம்.

பரத்து வாசனைப் பயந்தாள் குருவிற்கு
மற்றிவர்த் தள்ளி வைத்தவர் யாரே
யினத்துயர் வாத்தவ ரேற்றுகந் தாரே
யிங்ஙனம் பலகதை யிருப்பவு மகளிரை
யிடர்ப்படுத் திடுங்கட்டிங் கெழுந்தது கொடிதே
மகண்மறு மணமறன் வளர்க்கா தெனின்மகன்
மறுமண மெங்ஙனம் வளர்க்கு மறமே
மங்கலை பிறரை மருவன் மிகையெனின்
குறைநோய்முன் னுள்ளோன் கொழுந னெனினவள்
பிறரைச் சேர்ந்தின்பு பெறலா காதோ
யாடவர்க் கெப்படி யாட்டிகட் கப்படிச்
சமனா வறஞ்சொலற் றானற மென்பது
மற்றது மறமென மறப்பெருஞ் சொல்லதை
யுகப்புடன் றெருத்தெரு வூரூ ராக
விதைத்தனர் சிலரதை மெய்யென்று கொண்டா
ரவர்தீர்த்துக் கட்டலு மறுத்துக் கட்டலு
மறமெனக் கிளர்ந்துட னாற்றத் துணிந்தனர்
மகளிரிற் சிலரு மகிழ்ந்திணங் கினரே
(உருஅஉ) யவர்தாம்,
குளித்து நிறுத்திய குதிரையில் வெறித்தெழுந்
தும்பியி லான்பின் றொடர்வெறிக் காளையிற்
கணித்து வடவராற் கற்க விடாது
வைக்கப் பட்ட வலியரா வாரே
யவர்முது வரம்பை யழித்துயர்ந் தாரே
யமணர் வருநா ளவர்வழிப் பட்டார்
சைநர் வரவவர்ச் சார்ந்துயர் வுற்றார்
புதுமையி லின்பப் பொலிவவர்க் குண்டே
தமிழக வொழுக்கந் தாமு மறிகிலார்

தம்மவ ராய்ந்துண்மை சாற்றினுங் கொள்ளார்
புதுமையின் மயக்கம் பொதுளியுண் டாகலின்
தூரத் தவர்தஞ் சொன்மிக் கினித்தலின்
மினுக்குடை யாருரை மெய்நிகர் காண்டலின்
படித்தமில் லாரப் படித்திரிந் தனரே
வழிவழி யங்ஙனம் வாழவர் மக்களுந்
தமிழெனிற் கைக்குந் தரத்துயர்ந் தாரே
யூனுக் கூனே யுறுதி தருதலின்
வேள்வி புரிந்திடு மேலவ ருண்ணலின்
சுரையுண வாலும்பர் சுரரெனப் படுதலின்
ஊனுணார் நைந்தர சொழித்தன ராகலின்
தேனூ னுண்டிடிற் றிறமிகு மென்றொரு
சாரார் சொலவதூஉந் தாங்கைக் கொண்டனர்
கிளிப்பிள்ளை போலெதுங் கேட்டது படித்துப்
பிறர்வயப் பட்டவர்பெரிதுஞ் சிறந்தனர்
கலப்பைப் படையினன் கண்ண னிந்திரன்
றயரதன் மதலை சைநன் புத்தன்
கோயிலு மாக்கினர் கும்பிட் டுயர்ந்தனர்
தமிழறி வுயர்ந்தோர் தமையற வெறுத்தே
யேவனெனும் பிறதேளத் தினன்சொற் கொளுமவ
ரகத்தியர் தொல்காப் பியர்நாய னார்க்குக்
கோயிலாக் கிலரவர்க் கும்பிடார் பிறர்தரு
மறிவா லுயர்ந்த வலர்க்கவ ருயர்ந்தோர்
பிறர்கட்டி னுட்பட்டுப் பிறர்க்கடி மைப்பட்ட
மற்றவர் தம்பெரு வாழ்விலின் புறுதலின்
மேன்மைத் தமிழக மெய்யவர் கண்டிலர்

**(உகூ௲அ)** அவர்நிற்க,

பழந்தமி ழகத்துப் படிப்பறி வொழுக்கத்

துயரிய மேலோ ருயிரினு மொழுக்கஞ்
சிறப்பெனக் கொண்டு திகழ்பவ ரானார்
மூவேந்தர் தம்மின் முரணி யிகலாடு
மிடைநா ளிவண்வந் தேறிய புதுமையை
யாய்ச்சி யுரைகலி னாணி யுரைபார்த்து
மாற்றிழி யதனை மறுத்துயர்ந் தோருளார்
வலியில் பிறர்கொள்கை மறுக்கப் படுதலி
னன்று கட்டி யன்றறுத் தாலும்
பழங்குடித் தமிழ்மாதர் பற்றார் மறுமணம்
ஊன்றே னுண்ணவு முயர்ந்தோ ரிணங்கில
ராட்சியும் வீழ்ச்சியு மாவதும் போவதுங்
கால வழக்கிற் கண்டுகப் பதுவே
மல்லன்மா ஞாலத்து வாழ்வோர் மருங்கிற்
செல்வம் நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமி ழிகழ்ந்த வாரிய மன்னரிற்
கண்டனை யல்லையோ காவல் வேந்தே
யெனுஞ்சிலம் புணரறி வினரிது தேர்வார்
பிறரெத் தனையாண்டு பேசினு மெய்நிற்கும்
(உசூ௲அ) ஆராயின்,
முதுதமிழ் நாட்டு முதல்விகண் முக்காலுங்
காவலி னுள்ளாய்க் கற்புய ரறிஞராய்
வழிவழி முதுநெறி வழாதுவாழ் வாரே
யவரிய லயனாட ரறியமாட் டாரே
பிறர்பெருஞ் சொற்களிற் பேசின வனைத்துந்
தந்நாட்ட டவர்பாற் றாங்கண் டவையே
யம்மெய் யிருவ ரைவ ரெழுவர்
பதின்மருக் கொவ்வொரு பாவையில் லாகி
யுயர்பதி விரதையென் றுயர்த்தப் பட்டமை

யவரே யுரைத்ததி லறியக் கிடந்தது
குருமனை மாணவற் கூடின னென்றுங்
குருவண்ணன் றேவியைக் கூடின னென்றுந்
தெய்வமின் மார்பலர்ச் சேர்வா ரென்றும்
வடவ ரவர்த்தள்ளி வைத்தில ரென்றும்
பரைதலுங் காட்டுமப் படியுள தன்றி
வியாச னனைமைந்தர் மின்களைச் சேர்ந்ததும்
மாவேள்விக் குருக்களை மன்னாமிர்ச் சேர்வதுங்
கைமையைப் பௌண்டரீ கத்துவா சேர்வதும்
நல்லற மெனல்வட நாட்டு வழக்கே
மாவைத் தழீஇமகிழ் வழக்குமங் குண்டே
கெர்ப்பபாத் திரபிட்சை கேட்கைமுன் னுண்டே
யிங்ஙனஞ் சிலபல வியல்பெனு மந்நாட்டு
மகளிர் பயிற்சியவ் வாறுற லாமே

(உசூசூஉ) அதாஅன்று,
மனைவிபாற் றான்பெறு மைந்த னௌரசன்
ஆணைகொண் டுடன்பிறந் தவர்பெறிற் சேத்ரசன்
இனத்தினீர் வார்த்திட் டேற்றசேய் தத்தன்
இனத்தொரு வனைவளர்த் திரீஇயிடிற் கிரத்திரன்
அறியா தயலா னருள்சேய்கூ டோத்பந்நன்
பிறரெறிந் தெடுத்துப் பேண்சே யபவித்தன்
இவ்வறு வருந்தந்தை யீட்டிய பொருளுக்கும்
ஞாதிகள் பொருளுக்கும் நணுகுரி யவரே
மணக்குமுன் பிறன்பெற்ற மகன்கா நீநன்
கருவொடு மணந்தேற்ற காதலன் சகோடன்
பொருள்கொடுத் தேற்ற புதல்வன் கிரீதன்
தள்ளப்பட்டவள் தாலி யிழந்தவள்
பிறர்ச்சேர்ந் தருள்சேய் பெயர்பௌ நர்ப்பவன்

அடைக்கல மாவந் தடைசேய் சுயதத்தன்
அயலினத் தார்ச்சேர்ந் தருள்சேய் சௌத்திரன்
இவன்பார சவனென் றியம்பவும் பெறுவன்
இவ்வறு வருந்தந்தை யீட்டிய பொருட்கே
யுரியவர் ஞாதிக் குடையதின் றிவர்க்கே
பூத்தவள் பாற்பெறும் புதல்வன் கூதரன்
கணிகைபாற் பெறுசேய் கௌலகேயன்
வைப்பாட்டி பாற்பெறு மகனபிமானன்
பிறர்மனை பாற்பெறு பிள்ளைகௌ லேயகன்
இந்நால் வரைத்தந்தை யேற்றுக் கொண்டால்
தன்பொருட் குரிமை தானே வருமே
களவாய்ப் புணர்ந்தீன்ற காதலன் குண்டகன்
இவற்சார சனசார சாதனென் பாரே
களவிற் கைமையீன் காதலன் கோளகன்
இவ்விரு வரும்புரோ கிதஞ்செய்து வாழ்வரே
யாகப் பதினெட்டு வகையா மவர்மக்கள்
அவர்பெறு மிம்முறை யவரியல் காட்டலின்
பெண்வழி யாக்குடிப் பிறப்புமு ணுணர்த்தலின்
ஆண்வழி யாப்பொரு ளவர்பங் கெடுத்தலின்
முகமுனான் கேமக்கண் முளைப்பிட மென்றலின்
நாடொறும் புதுக்குமிந் நாகரி கங்கொடு
மற்றவர் மின்னார் வரம்புசொன் னாரே
பிறர்நெறி யேற்காத பெருமைத் தமிழ்நாட்டுத்
தவர்தத்த மனைபாற் றாம்பெறு மக்களை
மக்களாக் கொண்டு மகிழ்திரு நெறியினர்
மகவில்லை யெனின்ஞாதி மகத்தத் தெடுப்பர்
அவளவின் மகிழுநல் லறவோர் மகளிரைத்
தீயரி னினைத்தமை தீர்க்கொணா மறமே

(உகூளாச) யறிவின்றி,

யாடவர்க் கெப்படி யப்படி யாட்டிகட்
கறஞ்சொல வேண்டி யழுவது தகவோ
தகவே லினித்தவன் றாலிதன் கழுத்தணிந்
தடுக்களைத் தொழில்செய வமையினுங் குடிதாங்க
வவளுடன் படினு மதுசம னின்றே
தனித்தனி யீட்டலுஞ் சமைத்தலு மாமெனின்
தலைவன் தலைவியாச் சார்தரல் வேண்டா
மகப்பெறற் கெனினது மகட்கா காததென்
அவள்பெறற் போன்மக வவனும் பெறிற்றான்
சமனா வறஞ்சொலத் தகுமறி ஞர்க்கே
பெறுவாண் மகண்மகன் பெறுவிப்ப னாமியல்
சமனாக் காதே சமனறஞ் சொல்லெவன்
பெறுவிப் பவளாப் பெண்மகள் வரினும்
ஏற்ற மவட்கிங் கிலையெனா ரறிஞ
ரங்ஙனம் பெறினு மதுசம னின்றே
யாண்மகன் பெண்மக ளடன்மைந்தன் மெல்லியல்
முதலிய பெயர்கொளன் மூடமோ வறிவோ

(உஎஉ உ) அந்தோ!

வாழ்க்கைத் துணைதன் மனையுறப் பிறர்மனைக்
கேகும் பேதையுள் ளீடிலாப் பதரே
யெனுந்தமி ழகம்பிற ரின்முகம் பார்த்த
லறமெனு மெனல்பிற ரறியாமை யன்றோ
யவருரை கொடுசில ரறிவழிந் தாரே
பெட்டிது தொல்காப் பியமெனன் முதுநூ
லதுதொல் லொழுங்குகாப் பாய விலக்கணங்
கூறுவ தெனப்பொருள் கொண்டதந் நூலிற்
பரத்தையிற் பிரிவும் பகர்ந்துள ததனைத்

துறந்து பிறர்பெருஞ் சொல்லாற் பிழைத்ததென்
றறைதன் மிகையெனி னாய்ந்துண்மை காண்க
யுயர்தலை மகளை யூட லுணர்த்தக்
கணவ னாடல் காண்டற் கென்றுங்
கிளர்தரு பாடல் கேட்டற் கென்று
மவர்வேண் டியபோ தடைதலப் பிரிவே
சுவையொடுண் பவரத் துறைவிழை வாரே
நாடொறும் பாலே நன்குதுய்த் துவப்போர்
புளிந்தகள் ளுண்ணவும் புந்திவைப் பாரோ
காதலித் திரந்த காரிகைக் கின்பு
வழங்குத லறமெனல் வடவர் வழக்கே
காதலித் திரந்த காளைத் துறவிக்கு
மகப்பெற்று வீடுற மனைவிட லறமென்ப
விவைதமி ழகத்தி லிழிபெனப் படுமே
தன்னிக ரில்லாத் தலைவன் பரத்தையின்
சின்னீர வின்பந் திளைக்க முனைத்தெழின்
தமிழக மவனைத் தலைவனென் னாதே
யவனைத் தலைவனா வடைந்ததன் னிகரிலாத்
தலைவியும் பெருமை தனையிழப் பாளே
யாதலி னூட லறிவிக்கும் பிறிவறம்
அதூஉந்துறை யறிந்துதுய்க் காதவர்க் கின்றே
பரத்தையிற் பிரிவு கிழவோர்க் குரித்தென
வரையறுத் தருணெறி வழிப்படுந் தமிழகம்
வேண்டிய போதின்பு விரும்பு மடவாரைத்
தீண்டுகை யாலெனைத் தீண்டலை பாண்டியா
முல்லைக் கதிபா முகம்பார்த் தயனின்று
சொல்லத் தகுவன சொல்லென்ற மின்கதை
கண்ணுத லருணீல கண்டர் திருக்கதை

முதலிய கதைகண் முதுதுறைப் பிரிவிற்குச்
சான்றா வுளவே தக்கோ ரறிவரே

(உஎசூஉ) தாந்தேர்மின்,
பதினா றிருந்திரு பானான்குண் முதன்மணந்
தரமிகின் முப்பதுட் டகுமிகின் மிகையே
வழிமுறை பின்முறை மணஞ்செய்ய நேரின்
நாற்பது வயதினு ணடாத்துதன் மரபே
மங்கை தொடங்கி மடந்தைமுற் றளவினுள்
மகட்கு மணஞ்செயல் வழிவழி வழக்கே
வினைவழி யிருபதின் மேன்மண மின் றுறை
மகளிரை மறுமண வலார்கொளல் வழக்கே
முதல்விக்கு முதல்வன் மூப்புநான் காண்டறம்
நான்குமதி வாரம் நாள்கன்ன லெனினு
மிளைய மகட்கொள லிந்நில வழக்கே
சமன்மூப்புப் பெண்மணந் தணந்தவர் புரிவர்
மூத்தவட் கொள்குடி மூத்தவள் குடியே
மனைமக வுளான்மறு மணஞ்செய லின்றே
கோடிநல் கினுமவன் கொளப்பெண் கொடாரே
மனையிழந் தவன்மறு மனைகட்ட லாமெனின்
தவனிழந் தவட்குந் தவன்வேண்டுங் கொல்லோ
தவனிழந் தவண்மகத் தான்பெறா ளோவெனின்
பெறாளென வெவரும் பேசினா ரின்றே
பிணாவா மவளது பெட்புறி னதுசெயற்
றடுப்பா ரெவருமித் தரையி லின்றே
மகடூஉ வொழுங்கு வழாஅர்தத் தந்தவன்
பிரிவாற் றாமையும் பெருங்குடிப் பிறப்புமோர்ந்
தயனெறி வெறுப்ப ரஃதற வோரியல்
மற்றவ ரியலின் வலியையா ராயின்

தவனொடு துறக்கத்துஞ் சார்ந்துறை வார்மினா
ரென்ப பலர்மனை யெவனோ டிருப்பள்
கணவனொன் றன்மேற் கட்டலின் மனைக்குங்
கணவன் மிகக்கொளக் காதலுண் டாய்த்தோ
ஆணியல் பெண்ணிய லவரறி யாமையின்
வழீஇயின ரொழுங்கிழி மாக்களா யினரே
திங்க டோறுஞ் செந்நீர் வடிதரல்
ஒன்றிரண் டாண்டிற் கொருமுறை சூற்படல்
மறுபிறப் பெனும்படி மகப்பெற் றெடுத்தல்
நாற்பதின் மேற்றீட்டு நழீஇயீத்து மாறல்
முதற்பல மினார்க்குள முதல்வனருள் பொறைகள்
யஃதறி நலாரொன் றமையுமென் றிருப்பர்
சிலநலா ரொருதவன் றேவிக ளெனலாஞ்
சிலர்மனை யொருத்தியாச் சிறப்பது மாமோ
சிலர்மனை தான்பெறுஞ் சேய்க்கன்னை யாதலிற்
றந்தையைத் தாய்சேய் தவரறி வாரோ
யுடன்பிறந் தவர்க்கில்லென் றுறல்பிழை யின்றெனின்
ஒருவனோ டோராண் டுறைத லறமெனப்
பாஞ்சாலி வாழ்ந்திளம் பஞ்சவர்ப் பெற்றதென்
அவள்கண வன்மார்க் கடுத்தவில் லுள்ளதென்
மனையற வாட்டி மணவாள ரைவரோ
மறுமுகங் காணா வலார்ச்சேர்த லறமெனின்
நாடொறு மவர்க்கின்பு நல்கவல் லாளெவள்
ஒவ்வொரு வற்கூட்ட லொவ்வொரு நாட்கெனின்
ஐவ ரெனினிளைப் பாறநந் நான்குநா
ளவர்க்குள போலவட் கமைவதூஉ மின்றே
யிடைப்பொன்றி னோன்றாலி யெங்ஙன மறுப்பள்
இடையிடைச் சிலர்வெறி யேறினர் நெருக்கி

னவர்க்கிடந் தரலு மவள்கட னன்றோ
அத்தனை பொறுத்தலி னவள்கற் புடையளே
யாண்டுக் கொருசே யவள்பெற லன்றி
யைவர்க் கைந்துசே யளிக்கலா காதே
யாண்டுநந் நாற்கொலை யறமோ மறமோ
முதற்கைமை பெறவிடா முறையற மோவெனின்
பெறாமை கொலையெனப் பேசார் முதல்வர்
பிறர்மதப் படிபுடை பெயரெதிர் வழக்கிது
பெண்டைந் துடையவன் பிள்ளைக ளாண்டுக்
கைந்துண் டாக்கி யவர்க்கப்ப னாவான்
நம்பியொவ் வொருசேய் நாடொறும் பெறுவன்
யாண்டுக் கொருமக வருளும் பெண்கள்
இன்பிட்டுண் தவன்விளை வெடுக்கவீழ் பெண்கள்
சூற்படுங் காற்காப்புத் துணைவேண்டும் பெண்கள்
இளமைசென் றாற்பின் பௌளற்படும் பெண்கள்
கைப்பற்றி னங்காப்பிற் காப்பவாம் பெண்கன்
பிறர்சொல் வழிப்படல் பேதமை யன்றோ
தூரத்திற் பச்சை துளிர்த்ததிற் காணவர்
அக்கரை யானி லலைக்கழி வாரே
யாடவர் காப்பா லறனடை பெறுமே
யரசியா ளினுங்காப் பாடவர் பொறுப்பே
ஒவ்வொரு பெண்ணொவ் வொருத்தனில் லாயமர்ந்
தறனறி தமிழகத் தரிவையர் கற்பினர்
தென்ன ரியல்வேறு சிறந்த ததன்பெரு
மேன்மையை யங்கம் வெட்டிய படலத்தும்
வடவ ரியல்வேறு மாண்ப ததன்பெருஞ்
சிறப்புமா பாதகந் தீர்த்த படலத்துங்
கடவுளருள் செயல்கொண்டு காணக்கிடந்தன

உடற்றுணை வலியிலை யுயிர்த்துணை வலியுண்டு
சிவனருள் வழியறந் திறம்பிடல் வேண்டா
(உஅசசூ) அறிவுளீர்!
கைமைக்கு வேறு கணவன் வேண்டிடின்
போனவற் கறுத்துப் புதுத்தாலி கட்டி
யொருவன் மனையா வுறைதலு மாமே
யவர்நெறி யுயர்வென் றாக்கவு முதன்மைய
ருயர்நெறி யிழிபென் றொழிக்கவு முனைப்பது
கடவுளை வெறுக்குங் கயவர் செயலே
ஒருவனை வெறுத்துவிட் டொருவனை விழைமகள்
விலக்கு மவன்றாலி வீசித் தீர்த்திட்டு
மற்றவன் றாலி வாங்கிக் கட்டி
மாக்க ளியல்பின் மரீஇவாழ லாமே
யவரியல் புயர்வென் றவர்கொளத் தகுமே
யொருத்தனின் மேலு முறுதவன் மார்வேண்டு
மகட்குத் தமிழக வாழ்க்கைசெல் லாதே
யிவளவிற் றமிழகத் தியனடை பெறுதலிற்
கடவுளாணை கடவா முதன்மைய
ரொழுக்கம் பற்றி யுயர்ந்தவ ரானார்
இவரெதிர்த் திடிற்பிரி திறந்துபட் டிடுமே
(உஅசூச) இனுங்கேண்மின்,
**எண்ணு மெழுத்துங் கண்ணெனப் படுமெனல்**
**சோறு நீருந் துணையாதற் போல்வது**
நெல்வர கிறுங்குமுன் னிலத்துள பலசோறு
ஆறு குளங்கிண றருணீர் பலவுள
அவ்வ நிலத்தவ ராங்காங் குளவாக்கி
மிசைவழக் கிற்கேற்ப விழையெண் ணெழுத்துண்டு
மற்றிரண் டறவோர் வழிக்கெண் ணெழுத்துண்டு

மந்திரர் கணிதர் மருத்துவர் வறுமர்
ஆட்சித் தொழிலோ ரமைச்சர் படைஞர்
உழவர் வணிக ருடைநெய் தொழிலர்
தூத ருளவர் துப்பர் ஓடர்
பாணர் நாடகர் பாகர்பட் டாரகர்
குருக்கண் முதற்பலர் குயிற்றுந் தொழிற்கியை
கல்வி கற்கக் கடப்பா டுளரே
யெல்லார்க்கு மெண்ணு மெழுத்தும் பொதுவே
யிலக்கியம் வெவ்வே றிருப்பது வழக்கே
யவ்வத் தொழிலாள ரவ்வவே டுடையர்
ஏடின் றெனினு மிளமைதொட் டுப்பயி
லவ்வத் தொழிலாளர்க் கவ்வ வுணர்வுண்டு
வழக்கழித் திடிற்றொழின் மங்கிப் போமே
மங்கிய தொழில்பின்னர் வருதலு முண்டே
வரினஃ தொருபால் வழங்கிய தறிக
யங்ஙன மகளி ரறிகல்வி நாற்பொருள்
கற்றறத் துணையாதல் கடமை யவர்க்கே
யறத்துணை யாய்ச்சோ றாக்கவும் பெறுமக
வளர்க்கவும் பயிறன் மகளிர்க் குரித்தே
வீடடங் கியதொழில் மினார்க்கும் புறத்தேறி
யறப்பொரு ளாக்கலா டவர்க்கு முரித்தே
யறமிரு பாலுமொத் தாற்றுதன் மரபே
யின்பிரு பாலுமொத் திட்டுணன் மரபே
பொருளீட்ட லாடவன் பொறுப்பி லமைந்ததே
குடிபேண் பொறுப்புக் கொம்பனார்க் கியைந்ததே
யீண்டிருந் தறம்பொரு ளின்பங் கண்டவர்
வீடிறை யருள்கான் மேவிடு வாரே
யவ்வழிப் படாஅ ரறனறி யாரே

யொருத்திக் கொருவ னுரியவ னாயி
னிளமையு முதுமையு மினிதுவாழ் வாளே
வலியவண் முதன்மை வரம்பழித் திடுமே
யெளியவண் முதன்மை யிளமையிற் செலுமே
பெரிதிரங் குநர்போற் பிதற்றயற் பெருஞ்சொல்
கற்பினர்க் குவர்ப்பே காமிகட் குவப்பே
(உகூாகூ) யாதலின்,
தீர்த்துக் கட்டச் சிலரிணங் கினரே
யாண்டுக் கொருத்தியை யவாவுவோர்க் கதுநலன்
ஆண்டுக் கொருமக வளித்தவள் கடைசிக்
கிழவன் மனையாக் கிடந்துழைத் திட்டுச்
செத்திடின் முன்மக்கள் செய்கடன் செய்வரோ
முதல்வரி லொருவன் முதன்மனை மக்களும்
அடுத்தவள் மக்களு மங்ஙன மூன்றா
மனைவி மக்களு மரீஇயுடன் பிறப்பா
வாழ்தலின் மற்றவண் மக்களு வாழ்வரோ
வாழவொண் ணாதிடம் மாறலின் ஞாதியும்
வெவ்வே றிருத்தலின் விலகிநிற் பாரே
யவரோரோ வழிக்கண் டண்ணன் றம்பியென்
றுறவுகொண் டாடினு முலக நகைக்குமே
காரண மின்றிக் களையக் கட்ட
விடங்கொடா தவர்தமி லினக்கட்டு வேண்டுமே.
மடமையா விணங்கிய மகளிர்க்கஃ தாயினு
மிந்நிலை முதுமையி னிடர்ப்படுத் திடுமே
யந்தோமுன் மக்கள்வந் தாலுண வூட்டற்குத்
தவனிணங் காவிடிற் றாழ்குழ லென்செய்வள்
முன்னாண்டிற் பெற்ற முளைபிணி பட்டிடின்
பெற்றவ ளுருகித்தன் பிள்ளையைப் பார்த்தற்கு

பின்றவ னாணை பெறல்வேண்டுஞ் செலவுக்
கவன்றரல் வேண்டு மவைகொடு செல்லினும்
முன்றவன் பார்க்க மொழிதரல் வேண்டு
மிருக்கு மளவு மிரைதரல் வேண்டு
மியைந்தா லவன்சொற் கிணங்கவு நேருமே
யாகா விதூஉமில் லறமெனப் படுமோ
(உகூங ச) இதுதேர்மின்,
மகட்காப்பு மறமென வடவர்சொற் றாரே
காப்புவிட் டாற்சல்லி கட்டப் பயிற்றுநர்
கைப்பட்டுக் குணமாறு காளையிற் பிடிப்பவர்க்
குரந்தரு பயிற்சிவே றுண்டுபட வேண்டுமே
யாட்டுக் கிடைகட் காயர் கிடாய்கள்
விடலினா லைந்து விடலைக ளமையும்
மானின மொருகலை மானுக் கடங்கிக்
கிடத்தலின் மானார் கிடக்கவு மமையும்
நிரையினம் பெருக நிலத்து மாப்பிள்ளைக்
காளைவைத் தலிற்சில காளைக ளமையும்
கிடாய்கள் வெட் டுப்படல் கெடல்கலை போராடி
காளை யினம்பல காயடிக் கப்படல்
மானமைந் தரினிலை வருமறம் பொன்றுமே
சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலையெனு நெறிதான்
மகண்மையிற் பெற்றோர் மனைமையிற் கணவன்
முதுமையின் மக்கண் முறைகாக்கு வழக்கைச்
சிறைகாக்குங் காப்பெனுஞ் செந்தமிழ் மறையே
யஃதவ ரடங்கிக்காப் பாற்றிற் சிறத்தலின்
நிறைகாக்குங் காப்பே தலையென நிறீஇயது
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்ணெனுஞ் சொற்றது
தமிழ்மறை கற்ற தமிழக மகளிர்
பிறர்பெருஞ் சொல்லாற் பிழைத்திட மாட்டார்
தொழத்தக்க தெய்வந் தொழமறந் திடினுங்
கொழுநனைத் தமிழகக் குலமகண் மறவாள்
பிறங்கவள் பெய்யெனப் பெய்யு மழையெனும்
பொய்யா மொழியென்றும் பொய்யா காதே
யுயர்குடித் தாய்மா ருளவரை யறநிற்குங்
கடவுள் பொன்றிடிற் கற்பியல் பொன்றுமே
கறவையைக் கட்டிக் காப்பதின் மாதரைச்
சிறைப்படுத் திடுதலித் தேஎத்து வழக்கிலை
யாண்மையும் பெண்மையு மறிதலி னாண்பெண்
ணெனும்பெயர்ப் பொருள்விளங் கிடுதலின் விரும்பப்
படுபொருண் மீதாட்சி படர்தலின் பேணத்
தகும்பெண் டிரைத்தவன் றான்பே ணுவனே
மெல்லியர் காவா விடினழி வாரே
யாகலிற் சிறையென் றயர்வுறன் மடமே
கற்பினர் கேட்டிடிற் காறி யுமிழ்வரே
(உகூஎ ச) பாவலர்முன்,
பண்டொரு சைகையின் பயனறி யாக்களத்
திவளவு கண்ணினா ளென்றெழும் புலவ
னெண்பட வைய மிடுமினென் றெடுத்துப்
பாவரு ளவ்வையைப் பார்மி னவணிகர்
தோகைமார் வீடு தொறுமுள ராதலின்
தமிழக மகளொரு தவற்பெறு மணந்தான்
காமம் பொருளாக் கருதிய தின்றே
யறம்பொருட் டாக வடைவது வழக்கே
யுடல்பொரு ளாவிக ளுதவிய தலைவனை

யுடல்பொரு ளாவிக ளுதவி மணப்பரே
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமையென்
றெழுந்த பாட்டிற் கிதுபொரு ளன்றோ
கற்பெனப் படுவது பிறர்மனம் புகாமையென்
றெழுந்த பாட்டிற் கிதுநடை யன்றோ
பாட்டின் பொருளைப் படித்த படியியன்
மகளிர்சிற் றின்ப மயலுறு வாரோ
பிறர்பெருஞ் சொல்லாற் பிரிந்தவர் தாமும்
பண்டை யொழுக்கம் பழுதென லின்றே
யுவரிய லுயர்வென வுரைத்தலு மின்றே
யுயர்ந்தவர்த் தாழ்த்தி யுயர்ந்தது மின்றே
யயர்ந்துபின் விடமுடி யாததி னிற்குநர்
(உகூகூ ச) என்செய்வர்!
கள்ளுண லூனுணல் காமுற லுயர்வெனிற்
றள்ளுநர் கொள்ளுநர் தரையிலுண் டன்றோ
பொறியிலார் தமைத்தம் பொறிவழிப் படுத்துத்
தமிழக வொழுங்கைத் தாங்கைக் கொள்வதென்
தீர்த்துக் கட்ட லறுத்துக் கட்டல்
செயலினுந், தவன்மிகு தேவை யாயின்
வேற்றூர் புகுதல் வீதல் துறத்தல்
எளியபே டாத லினத்தாற் பிரித்தல்
இப்பிழை வாய்ப்பட் டிரிந்தோன் மனையை
மாமன்முன் னோர்கூடி மறுமணஞ் செய்விக்கப்
பராசரர் சொற்ற படியே செயலினும்,
தான்றவ னாலே தள்ளப் பட்டால்
அடிமை பதித னயலினன் றீக்குணன்
நோயின னிவரின்றி நோன்மைத் தவரையும்
உடைபூ ணுணவருள் வோனையுஞ் சேர்ந்துற

லறமெனச் சொல்லிய வாறே செயலினும்,
வினைபற்றி மூவாண்டு வித்தைக்கென் றாறாண்
டறம்பற்றி யெட்டாண் டாடவன் பிரிந்துபோய்
வரானெனின் மனைக்கு மறுமணஞ் செயமனு
தேற்றிய வறவழிச் செயலினும், வசிட்டர்
ஆண்டீ ராறனு ளடையிளங் கைமைக்கு
மறுமணஞ் செயச்சொற்ற வாறே செயலினும்,
அறிவுற்று மூவாண்டு ளாகா மணப்பெண்
டானே வலிதொரு தவற்கொள முயல்வான்
மனுவறங் கூறிய வழிமகள் செயலினும்,
பத்தா மிருக்கினாற் பானா றிரண்டில்
வழூத்தாங்குக் கைமை மணந்தான் செயலினும்,
அதிலிரு பத்தேழீ ராறி லுரைத்தாங்குப்
பணம்பொருட் படுத்தாது பற்றிற் குரியனை
மணப்ப மகளிரே வரித்துச் செயலினும்,
வைதிகர் முற்பட மாட்டாமை யென்னே
யரிதுகொல் லேறுகொண் டானிவளை யெய்தும்
அடல்காட்டி வில்லேற்றி னானிவளை யெய்தும்
திரிபன்றி யெய்தா னிவளை யெய்தும்
மாலைசூட் டப்பட் டானிவளை யெய்தும்
என்றுவைத் தரிவையை யீதலா சுரமண
மஃதரும் பொருள்வினை யால்வை திகமென்ப
பின்னர்ப் பெரும்பொருள் பெறுதலா சுரமாய்த்து
மற்றிஃ தொளித்தெண் மணம்வே றாச்சொல
லவர்நூ லிழந்தமை யாமோ வன்றோ
லவர்தமி லொருசா ரார்பெருஞ் சொல்வழிப்
படுபவ ரெண்புலப் படுத்தி மறுமணம்
வேண்டி னினத்தை விட்டுப் பிரிந்துபோ

யிசைந்தோனை மணந்தோ ரினமா யிருக்கலாம்
பழவொழுங் கினரொடு பயின்றுறை தற்கிங்
கிடந்தரா மேலவர்க் கினமெனப் படாதே
பிறர்க்கிலை தமர்க்கிப் பெரிதறி வுறுப்பே

(ருசூச ச) அம்மவோ,

ஓரீ இய வொருத்தி வொருமணப் பந்தரிற்
பலவூ ழியமங்குப் பார்க்கு முறவினால்
வந்துநிற் பக்கண்ட மகளி ரொதுங்கினர்
பார்த்தொரு கிழவிமுற் பட்டெடீ தணந்துநில்
லினத்தொரீஇ யினையினி யிடந்தூர வென்றாள்
மீசை முறுக்கிகண் விழித்தார் நிமிர்ந்துபின்
வெரீ இயவ ளொதுங்கி வெளியே றினளே
யாண்மக்க டம்மி லவளிவண் வரல்பிழை
பெரிதுநாம் பாராமை பிழைபாட்டி கெட்டியென்
றளாய்ப்பாட்டி நீபொறுத் தருள்கென் றாரே
தமிழக நல்லார் தமையறி விலாரென்றும்
வலார்சிறைப் படுத்துதன் மரபின் றென்றும்
பிதற்றும் பேயரவர் பெற்றியறி யாரே
தென்னர் மகளிர்க்குத் தேற்றி வடநூற்
படிமறு மணமிங்கும் பண்ணலா மென்றால்
தமிழகத் தறிஞர் தமைமூட ராக்கிப்
புதுவழக் கிரீ இயிடும் புதல்வர்க ளார்க்கு
மக்களா யினரோ வழிவழி வழக்கைத்
தழா அர்கடல் வீழ்ந்து சாதனன் றென்பர்
வழக்கறி தமிழ்மினார் மனநிலை வலிதே
யறமினா ருறுதியி னழியாது நிற்குமே

(ருசூசூ) யிந்நாட்டில்,

காரிகை மாருடன் கட்டை யேறுதல்

நடைத்தவ றெழாவழி நடாத்தப் பட்டதோ
தாய்மண் டோதரி தவனிறந் தமைகாண
யவன்மீ துடல்விழ வவளுயிர் நீங்கிற்றே
வழுதி யிறந்தமை வல்லவி கண்டது
மாவென வவளுயி ரகன்றதே யம்ம
விரண்டுட லோருயி ரெனவுறை யறவோர்
கணவன் விழவுடன் கட்டை யேறுத
லுயிர்நீங் கிடிற்றமி ழுலகத் துண்டே
யுயிர்நீங்கு மெனமுன் புணர்ந்துடன் கட்டை
யேற லுணர்த்தியாங் கேறின ருண்டே
யஃதிரு வரினுள வன்பா லியைவது
வடவரி லடிக்கடி வன்போ ரெழுந்தொறுந்
தோற்றவன் மனைச்சிறை தூக்கலுண் டாகலின்
மன்வெல் லப்படின் மனைதீக் குளிப்பளே
மாயன் பிருந்தைபால் மயல்கொண்டு வந்ததை
யறிந்துடன் றீக்குளித் தனளதூஉ மறமோ
தலையளி நீடலுந் தனிக்கற்புக் காத்தலுங்
காரண மாவுடன் கட்டையே றிடுத
லறமோ மறமோ வறிவுளீர் கூறுமின்
படர்க்குப்பெண் டாதலிற் பாழ்பட லறமே
சிறைகொள லொழிநாள் தீக்குளி யறுமே
யுடன்கட்டை யேற்றி யொழித்தல் வழக்கெனிற்
கைமை நோன்பு கழறிய தார்க்கே
யறியாமை யாற்பிற ரறைவது கொடிதே
(௩௬௬௨) இப்பால்,
மதம்பெய்த னோயெனின் மற்றிரண் டனைப்போ
னாடொறுங் கழிப்பவர் நாட்டி லெவருளார்
சிறிசினிற் கிழமையிற் சிந்துந ராரே

யதுவிடற் கொருவாயி லமையாமை யென்னே
முயற்சிசெய் காலதூஉ முடுக்கி யெழுப்புமோ
அணுகப் பெருகுஞ்சிற் றின்பமென் றறைந்ததென்
விந்துவிட் டாருடல் வெந்துகெட் டாரெனும்
பழமொழி யிவர்முன் பறிந்ததோ வம்ம
வெறியடக் கருந்தவர் வெண்ணீர் விடுவரோ
நாவுக் கரையரே னயந்தார்க் கிணங்கிலர்
மணத்தைத் திலக வதித்தாய் மறந்ததென்
திருநீல கண்டருந் தேவியு மொறுத்ததென்
சித்தர் பலரில்லைச் சேரா துயர்ந்ததென்
சிவனடித் தொண்டாற்றிச் சிவனருள் விளையாடல்
படித்தன்பு பூண்டின்பு பருகு முயர்குடி
யரிவையர் சீயென் றருவருத் தொழிப்பதிங்
கியலுவ தறிவா ரியல்புணர்ந் தோரே
யொழுக்குசெந் நீரூற் றூருது வற்றியுள்
ளோடுதி ரந்துாய் துறநோயில் வாழ்வாக
மருந்துண வாக்கொடு மனமாறி மேற்செல்ல
வாணரை யறிவார் மரபுணர்ந் தோரே
யவ்வழிப் படுமுணர் வலாப்பிற ருதிரத்தைச்
சிந்துவ தின்பெனத் திரிதரு வாரே
தவனிறந் தாற்கைமை தான்கெடு வாளென
லழிவழக் குறுதமை யறிந்துசொற் றதுவே

(௩௲௭௱௰அ) இதன்மேல்,

கைமை மணமின்மை சாற்பெருச் செயலெனல்
படிபெரு கிலையெனும் பரிவோ வுளமகார்க்
கூறுசெய் யாதுற லூனருந் தாதுற
லியன்றமட் டினிலுயிர்க் கிதவுசெய் தின்புற
லெல்லாருங் கற்றபி னிப்பரி வாக்கமே

யத்தகை யறனழித் தாட்குறைக் கிரங்க
லறிவோ வுலகுக் காண்டவ னிலையோ
அவனிப் பொறுப்பிவர்க் களித்தன னின்றே
வாய்தான் புளித்ததோ மாங்காய் புளித்ததோ
பொருளில் பெருஞ்சொல் பொறியிலார்க் கினிப்பது
துறையறிந் தின்பந் துய்த்துநன் மகப்பெறுந்
தமிழக மில்லறந் தழீஇத்தவஞ் சிறத்தலின்
இரண்டற்றுத் துய்க்குமின் பிவரறி வறிதலின்
அறன்வளர்த் தருட்பதி வார்ந்தறி வுயர்தலின்
அன்பு சிறந்தறிந் தருள்வழிப் படுதலின்
ஆளனொ டாட்டிமிக் கன்புற் றமர்தலின்
அம்மாண் பினரம்மை யப்ப ராதலின்
அறம்பேணு மக்களை யடுத்தடுத் துயிர்த்தலின்
பெற்றவர்க் கின்பருள் பிள்ளைகள் வருதலின்
செல்வியர் நல்லாரைச் சேர்ந்தியல் புணர்தலின்
அவர்வீ டடங்கி யருமையின் வாழ்தலின்
பூத்தறி வறிந்தபின் பொற்பா மணத்தலின்
ஒக்கலொ டளவளா யூழினொத் துறைதலின்
திருவருட் டாய்துணைச் செய்து காத்தலின்
வரம்பு நிறீஇத்தமிழ் மக்கள்வாழ் வாரே
ஒழுங்கா ருரிமை யுரிய னிறந்தபின்
கைமை நோன்பு காத்து மறுமைக்கு
மவன் றுணை யாவரற் கவாவுதல் வழக்கே
முன்ன ரிறந்த முதல்விநாண் மண்டலத்
திருந்துதன் கணவ னிறந்து பிறந்தபின்
மற்றவன் றுணையாக வந்து பிறப்பளே
கொண்டாற் பிழைத்த கொடியா ரலகையா
விந்நிலத் தலைகுவ ரென்மனார் புலவர்

மணவிழாக் களின்மண வரைசூழ் வருகால்
அலகைக் கன்மிதித் தருமீன் காண்டல்
வழிவழி வழக்கா வரல்சான் றதற்கே
வருபிறப் பினுந்தவன் மாறுத லின்றே

(நகூாறு கூ) இஃதோர்மின்,

கைமை பெருமைக்குக் கதறுகின் றாரே
அறனழித் தீன்மகா ராற்பெரு குலகம்
பொறைதாங் கேனெனப் போயழும் மால்பால்
அவனுல கழிப்ப தறமென வெழுந்து
கோள்பல மூட்டிக் கொல்லுவ னன்றே
மற்றவ் வறநெறி வடக்கியன் றிடறுன்
கதைசொலு மாங்கது கைக்கொளன் முறையே
தென்னர் நாட்டறந் திருவரு ணெறியே
யிவண்பிரி தியைதரி னிடர்ப்பா டுண்டே
வழிவழி யழியா வழக்குடை மாதரை
மறுமணம் புரிமின் மகிழ்மினென் றேதுந
ராரே யாரெனு மவர்வாழ் வொழியுமே
கற்புத் தெய்வங் கண்ணுத லருணிலை
யவரற வொழிந்தா லழிந்திடு முலகே
கற்புத் தெய்வங் கண்ணுதல் சான்றா
மணப்பதை யன்றி வடவர் தேஎத்து
வழக்கிற் சோமன் கந்தரு வன்வசு
வருணனிந் திரனெரி மணந்து தரப்பெறும்
போலி மணஞ்செயப் பொருந்துவ தின்றே
யைந்தே ழொன்பா னாட்டைச் சிறுமியை
யாட_வ முதிர்ந்தவர்க் கருண்மண மின்றே
யாகலிற் றமிழகத் தறிவுடை முதல்வரி
னொழுங்கறி மகளிர்க் குருகுதன் மடமே

யாயிரத் தொன்றய லாரைப் பார்த்துத்
தவறினு மினத்தது சார்தர லின்றே
(ருசூஅஉ) மெய்காண்மின்,
மக்க ளிலையேன் மறுமனை கட்டி
மகப்பெறா விடிற்பொருள் வாழ்வு சிதறிடும்
மக்கள் வளர்க்க மறுமனை வேண்டும்
அன்றே லவைபேண லவன்பொறுப் பாமே
யாண்டுநாற் பானு ளதூஉமற மாமே
யங்ஙன மகட்கு மாமெனன் முறையிலை
யெனன்முனர் விளக்கி யிருப்பதா யிற்றே
பிணியன் மனைமணம் பெறத்துணிந் தக்காற்
பிணியனைக் கைவிட்ட பெருமற மெழுமே
யயலா ருரையற மாகாமை யறிக
மற்றவர் தமிழக வழக்கைத் தழீஇக்கொளத்
தமிழகம் புதுவது தழீஇக்கொள லாமோ
அவரவ ரொழுக்க மவரவர்க் குயர்வே
கொள்வன கொள்க தள்வன தள்க
ஒருவர் வழக்கை யொருவர் பிழையென
வருதலிற் றமிழக வல்லா ரெதிர்த்தாடி
யேறலி னவர்செய லிலையாய்த் தொழிந்தது
தமிழக வொழுக்கந் தலைசிறந் துயர்ந்தது
நாளும் தமிழக நலங்களை
(ருசூஉஈஉ) யறிவுகை வந்தா ரன்பொடேற் குநரே.

### ய சு. தென்னருக்கு வடவரியல் மாறு

**வழிவழி மரபு வழக்கா வழங்கு**
**முலக நடையே யொழுக்க மென்ப**
மற்றதி னவாவழி வழுக்கி முரண்புரி

வாரா லிடையிடை வருவது வழக்கே
வழக்காளி சொல்வது வழக்கெதி ராளி
மறுப்ப தெதிரிடை மன்னவை கேட்டுத்
தீர்த்து விடுவது தீர்ப்பெனப் படுமே
தென்னாட் டொழுக்கமும் வழக்குந் தீர்ப்புந்
திருவருட் செயன்மாயைத் திறன்வினை நுகர்வென
வழக்காற் றடைவே வழங்க லுண்டே
யரசவைச் சட்டத் தவையமைந் தியலும்

(ரு௲உகச) இதுபோல்,

ஆசாரம் விவகாரம் பிராயச் சித்தமென்
றறைவார் வடவரு மதுமனு தருமநூல்
கிடக்கும் பிரம சரியங் கிருகத்தம்
வானப் பிரத்தஞ்சந் நியாச வழியதில்
அறம்பொரு ளின்புவீ டாமுயிர்க் குறுதிப்
பொருணான் கருண்மறை போற்றுந் தமிழகத்
தொழுகுல குக்கெலா மொருநெறி சொல்லும்
மனுவற மக்களை வருணாச் சாரக்
கோடரி கொடுபல கூறுகள் செய்தொரு
விவகா ரத்திற்கு வெவ்வே றினம்பற்றிப்
பிராயச் சித்தம் பேசிடு மன்றே
**யாகலி னுயர்தமி ழகவொழு குக்கும்**
**வடமனு வறத்திற்கு மறுபா டுண்டே**

(ரு உ உஅ) அதுதான்,

வடவருண் முதல்வர் மலரவன் முகமகார்
அடர்தம் மினத்தரி வையர்த்தா மணப்பர்
தோடொடை யடிவருந் தோன்றல்கள் வணிகர்
அடிமைக ளினத்தினு மவர்மக ளெடுப்பர்
தம்மினப் பெண்மகார் தாந்தம் மினத்தவர்

பிறவினப் பெண்மகார் பெறுந்தாய் வழியின
ராகலிற் றுய்வழி யாவவர் குடிவரும்
வழிவழி முதல்வரை மணந்துறி னக்குடி
முதல்வரா வார்தலை முறைசில செலவே
இங்ஙன மிவர்நெறி யிசைபடும் பிறிதே
யெழுவகை யடிமைக ளினவே றியம்புவர்
நான்கினங் கலந்து நல்கினம் பலசொல்வர்
வேறு மவரறம் விரிந்துள தம்ம
(௩உசஉ) தென்னாட்டில்,
முதனாண் முதல்வன் மொழிந்த வொழுக்கம்
பொதுமக்க ளெவரும் போற்றற் குரியது
எவரு மவரவ ரினத்தின் மணந்து
தம்மின மனைவியிற் றம்பெறு மக்களை
மக்களாக் கொடுவரல் வழிவழி வழக்கே
ஓரினத் தவரா யுறைதமிழ் மக்கள்
பின்பற் றொழுக்கத்துப் பிரிந்தன ரெனினும்
தந்தை வழிக்கொடு தங்குடிப் பிறப்பு
வழுத்தல் வழிவழி வழக்கா கும்மே
மகப்பெறா் ஞாதி மகத்தத் தெடுப்பதன்
றினத்தயன் மகத்தத் தெடுப்ப தின்றே
யாளுயர்த் திழித்தின மறைவதிங் கின்றே
யொழுக்க முயர்ந்திழிந் தூர்த லுண்டே
வடவர் பதினெண் வகைமைந்தர் கூறலிற்
றமிழக மறந்துஞ் சாற்ற லின்றே
யிதுகொடு தென்ன ரியல்வே றாமே
வடவ ரொழுங்கிதின் மாறுபட் டதுவே
(௩உகூ௰) ஆகலின்,
தமிழர் மனுவறந் தழீஇக்கொள மாட்டார்

வழிவழி முதுகுடி வழக்கைத் தழீஇவாழ்
தமிழர்க் கரசன் றருதீர்ப்பு வேறு
வடவர்க் கவர்நெறி வழித்தீர்ப்பு வேறு
தெரிந்தருள் செய்வது செங்கோல்
(ரு உ சுசு) முறையெனக் கொண்டனர் மூவேந் தருமே.

## ௰ எ. தமிழக வொழுக்கவாக்கம்

கடவு ளாணை கடக்கொணா துலகீர்
கடந்திடிற் கடவுள் கடந்துநிற் பானே
கடவு ளாணை கடவா தவர்க்கிங்
கரசன் றந்தை யார்வலன் றுணைவனி
லன்புசெய் தற்குமுன் னாய்நின் றருள்வன்
முன்னிலைப் படல்சிவன் மூதறி வினர்க்கே
சிலர்க்குக் கனவினுஞ் சிவனெழுந் தருள்வன்
அறிவுற்று மூழ்வழி யறிமடர் போல்வார்க்குத்
தோன்றாத் துணையாய்த் தொடர்புற் றருள்வன்
திருவரு ளாளன் சிவபெரு மானே
யெங்கு நிறைந்தவ னெல்லா மறிபவன்
எல்லாம் வல்லவ னிவனுக் கொளித்தொன்
றுஞற்றலொண் ணாதென் றுணர்மி னுணர்மின்
பிறரைவஞ் சித்துப் பெறுவென்றி யான்மகி
ழறிஞ றிஞரின் றவர்க்கிகல் சிவனே
நன்மக்க ளெல்லாரு நம்பன் மக்கள்
மற்றவர் தமிலொரு வருக்குமற் றொருவர்
வஞ்சஞ் செயினவன் வாளா விடானே
யிறையிலை யென்பார்க் கிலான்போன் றவரை
யொறுத்தற் கவரொளிக் கொணாமைநன் கறிமின்
அவரா லறியப் படானெனெ லழகிலை

ஆண்டவ னுளனென் றன்பொடச் சங்கொடு
வழிவழி யெளிஞரும் வழிஞரும் பணிந்தேத்திக்
கனவிலு நனவிலுங் கண்டுகந் தவர்மக்கள்
கோயில் பலவாக்கிக் கும்பிட்டு மிங்கவர்க்
கஞ்சி யொளித்தரு ளரனருள் சிறப்பே
காணா மைக்குக் கவன்றிலர் தொழுவா
ரதுபிறர் தமைநம்பற் காற்றுபொய்த் தொழுகை
நெற்றி வெயர்வை நிலத்தில் விழப்பாடு
பட்டுத் தேடிய பணங்கொடன் புடன்செய்
கடவுள் வழிபாடு கைமேற் பயன்றரும்
பிறரைவஞ் சித்தும் பிறரடை யாக்கந்
தடுத்துப் பறித்துந் தாமற வோர்போற்
காட்டுநர்க் கண்டுமுக் கட்பெரு மான்றா
னறப்பயன் பொருட்குரி யார்க்கும் மறப்பயன்
மறத்தவர்க் குந்தரு வானா யினனே
யதுவே நடுநின் றருள்சிவன் செயலே
யாகலின் மேன்மக்க ளறம்பொருட் டாயெனும்
பிறர்க்கிடர் செயாமையிற் பேரன்ப ரானார்
அன்பருண் ணிலையமர்ந் தன்னமுன் னிலையினுங்
கடவுள் வெளிப்படு காட்சிகண் டுவப்பர்
கடவுள் காட்சி காண விருப்ப
முளதெனிற் றமிழக வொழுகிற் றிறம்பாமை
யமையும் பிறிதற னறிதரல் வேண்டா
தமிழக வொழுகிற் றணவாத மகளிர்
கனவிலு நனவிலுங் கடவுளைக் காண்பர்
உயிர்க்கரு ணேயத் துடம்பொடு நுகர்பொருள்
கைமாறு வேண்டாது கடவுளரு ணன்றி
மறக்கில ராயருள் வழிப்பட லன்பே

யுயிர்க்குயி ராயெவ் வுயிரினு மொளித்துள
கள்வனைப் பொருளாக் கருதி யுயிர்க்கெலாம்
நலஞ்செ யறத்து நழீஇயினு மிடர்செய
வெறிதினு மெழாவழி விழித்துற லச்சம்
நல்லாரு மைந்தரு நம்பனன் பச்ச
முடையராய்க் காட்சி யுடையராய் வாழ்வது
வழிவழித் தமிழக வழக்கா றாமே
தமிழக வொழுகிற் றணந்தவர் கெடுவர்
(ருரு௨ச) மெய் மெய் மெய்,
ஆதலிற் கள்ள ராய்க்கெடல் வேண்டா
கைப்பொருள் செல்வமுங் கல்வியு மாமே
கொடுக்கக் கொடுக்கக் குறையாது கல்வி
வளர்கல்வி யறிவை வளர்ப்பது தேர்மின்
எடுக்கிற் குறைசெல்வ மேறு மிறங்கும்
வளர்ந்துபொன் றிடுமுடல் வளர்க்குமச் செல்வம்
நான்கு முழத்துணி நாழி யரியுடல்
வாழற் கமையுமேல் வைத்த லுமக்கிலை
பின்வாழ்க்கை மைந்தரைப் பேணிவைத் தற்கவா
வுண்டே லறத்தா றுழைத்தீட்டி வைமின்
பிறரையு முமைநிகர் பேணிக் காண்மின்
வலிய ரின்றுநீர் வலியர் பிறர்நாளை
யயற்பொருள் கொள்வரே லவர்நும் பொருள்கொள்வர்
கள்ளன் பொருணீர் கவர்விரே லும்பொருள்
கள்ளன் கொளன்மெய் காணறி வுமக்கிலை
பலர்பொருள் கவர்ந்தோன் பானீர் பொருள்கொளின்
பலர்கொள வும்பொருள் பறந்து சிதறிடும்
பேய்தீ காதல் பிணிவெறி சூதுமுன்
பலவும் பொருள்வந்த படிமக் களைப்பற்றும்

பிறர்க்கின்னா வாற்றிநும் பெருங்குடி கெடாதீர்
பல்லா யிரம்பொன் படைத்தோன் பரவணி
யெடுத்துப் பார்க்கி னெளிமைமிக் கிருக்கும்
பெரும்பொரு ளாளர் பெறார்தலை முறைபல
பெரும்பொரு ளாலிலைப் பெருங்குடிப் பிறப்பு
தமிழக வொழுகு தணாக்குடி யுயர்குடி
யறிவில் பொருளஃ தழிபொரு ளதன்விழை
வறிவின்மை யாக்கி யழிவுமாக் கிடுமே
அறியா மையைவிட் டறிவே திருமேனி
யாகிய செம்பொருட் கடிமையா வாழ்மின்
செம்பொரு ளருணோக்கத் திருவுமக் குண்டாயின்
றிருவெலா முமதுபின் றிரிதிரு முண்மை
(௫௫௫௬) அதுவேண்டின்,
தமிழக வொழுகிற் றவறின்றி நின்று
வழிவழிக் கெடாது வளர்பொரு ளீட்டி
வாழ்முது குடிநிகர் வாழ்மின் வாழ்மின்
ஞாதியைப் போற்றுமி னல்லினம் போற்றுமி
னேழைக் கிரங்குமி னிறைவனன் பாற்றுமின்
கண்டு மகிழ்மின் கவலுற நேரினும்
பிறரைநோ காதுதன் பெருவினைத் தீர்வெனத்
திளைத்துத் தொலைமின் சேய்க்கு மருந்துஞ்
சுவையூணுந் தருதாயிற் றுன்பின் பிரண்டினுந்
திருவருட் டாய்கைச் செல்ல மக்களில்
வாழ்மின் குறைவிலை வழுத்திது
(௫௫௬௮) தமிழக வொழுக்க வாக்கந் தானே.

## ௰அ. புதுவழக்கெழுச்சி

குணங்கெட் டவர்க்கிடங் கொடார்மாண் டமிழர்
குணங்கெட் டவருடன் கூடா ரிகல்கிலார்
குணங்கெட் டவர்தாங் குறும்பு முனைத்தெழின்
வலிய ரெதித்தோ மறந்தோ பிறர்க்கொடோ
யூர்குழீஇ யரசவைக் குரைத்தோ வேதுமொ
ரடக்கு முறைதேர்ந் தடக்குதல் வழக்கே
யறிவறிந் தவரோ டளவளாந் தமிழகம்
ஒழுக்க முயர்குடி யோர்க்குயி ராயது
மாயன் குடிலத்தின் மயங்குமுப் புரம்போல்
முத்தமிழ் நாட்டின் முதல்வர்முப் பாலார்
கடவுளா லாட்கொண்டு காக்கப் பெறுநிலை
யினராய்ப் பிறரெலா மெதிர்நிலை யினராய்ப்
போகக் குடிலர் புகுந்தனர் செய்தார்
மற்றவர்க் கொதுங்கிவாழ் வலியமுப் பாலார்
தமிழக வொழுகினர் தணந்தமற் றவர்பால்
புதுவழக் கெழுச்சி புற்றினின் றீசல்
புறப்படல் போலப் புறப்பட லாய்த்தே

(௩௩அகூ) அஃதாக,

மண்பெண் பொன்னவா வாய்ப்படு வார்வழி
யெல்லா வழக்கு மெழுமிவ் வுலகிலே
யெழினெதூஉம் வலிய ரிடத்திய லாதய
லினத்திய லாதுதன் னினத்தெளி யவர்பாற்
கிளர்தரு முடனுடன் கேட்டுத் தீர்த்துற
வாக்குங் கரையாள ரமைத்தனர் முதல்வர்
நடுவரி லினந்தொறு நவின்மூப்ப ருள்ளார்
கடைய ரினுமூப்புக் கார ருளாரே

யவர்தம் பாலி னருத வழக்கெலா
மறிந்தறத் தருள்கரை யாளரே முதல்வர்
மிகின்வேந் துளான்முது விதியிது நிற்க

(௩௩௯௮) இதன்மேல்,

முறைபடிப் பில்லா மூடர் குழாத்திடைக்
குடிலர்கோட் பட்ட குறும்பர் முனைத்தெழீஇச்
சிறுகிய செல்வத் திறங்காட்ட லானார்
அடிக்கடி வழக்கர சவைக்கே றிற்றே
வருவான் வழக்காளி மறுப்பா னெதிராளி
யிருபாற்குஞ் சான்றா யெழுவார் சிலரே
யப்ப னொருசா ரவன்மக னொருசார்
தமைய னொருசார் தம்பி யொருசார்
மாம னொருசார் மருக னொருசார்
கூடி வழக்கெழுங் கோனவைத் தலைவர்
வழக்காளி யெதிராளி வன்மை மென்மை
தேர்ந்து வளர்த்துச் சிறிதைப் பெரிதாக்கி
யுரைவாங்கி நலங்கண் டுரைப்பார் தீர்ப்பே
யில்லையா யுள்ள தில்ல துள்ளதாய்ப்
பெறுவென்றி யாளரைப் பெரியோர் வெறுப்பர்
பொய்த்துவப் பார்வென்றி பொன்றுமெய் நிற்கும்
மெய்யர்க்குத் தோல்வி வெறிதினர் காண்பர்
வெறிதுயர் செல்வர் மிகமுரண் மலிந்ததின்
பத்துடை யார்க்கெட் டுடையார் பதறுவர்
வாய்க்கரி யில்லான் வழக்கழ கியசொக்க
னாம்பால் வணனிடத் தாவதவன் றீர்ப்ப
னருள்வழிப் பட்டுகப் பார்தமி ழறிஞர்
மடர்ப்பொருட் படுத்தவர் மாட்டெதிர்த் தாடா
ரெளியரி னறிஞரி னிடம்பொருள் கவர்மட

வலியரை மறவருள் வாட்டி யுணன்மறுத்
துழக்கு, முயர்பொருட் குரியரை யறவருண்
மகிழ்விக்கு மிவ்விரு வகையரு ணடாத்துதல்
செம்பொரு ளுண்மைக்கித் தேஎத்தொரு சான்றே
யம்மவிஃ தன்றோ வரனுண்மைக் காட்சி
யாதர் முனைப்பவு மறிஞ ரொதுங்கவுந்
தகுநாக ரீகந் தான்வர லாய்த்தே
சாமொவ் வொருபிணந் தனைச்சுடு காடேற்றிச்
சுட்டுக் கரைத்துநா டொறுவரு மறிஞர்க்
கிவணாஞ் சுடப்படு வேமெனு மறிவெழி
னச்சமுண் டாமே லழிம்புசெய் யாரே
மடிந்திட லயர்த்து வரம்பழித் தீன்மக்கள்
வாழ்வழித் திருள்சேர் வழித்தேடன் மறமே

(ரு சரு௬) அதனால்,

வலிய ரெளியர்பால் வல்லழக் காடுவர்
அறிவி லிருவரு மார்த்தெதிர்த் தேறுவர்
கொண்டது விடாதறங் கொன்றாண்மை காட்டுவர்
ஒத்தவர் வென்றியை யுன்னிவம் பாற்றுவர்
மதிப்பவா வுவர்தமை மதிக்கவீம் புளுற்றுவர்
மறந்துவிட் டுணர்வுறின் மல்லுக் கெழும்புவர்
பிறர்பொருள் கைவரிற் பின்றரா துழப்புவர்
அழுக்காற் றினர்பிறர்க் கழிவாக்க மூட்டுவர்
ஆழ்ந்த வறிவிலா னாவி பிறிகையி
னகப்பட் டதைக்கொள வருகுற் றுழைப்பர்
பொய்யுடம் பிடிதீட்டிப் பொறிப்பர்கைச் சாத்து
தனிமைவிட் டிருவர் சார்ந்தாற் றமிற்கலந்
தறப்பெயர் சொலிக்கவர்ந் தடல்காட் டிடுவ
ரறந்தா னறவாழி யந்தண னாணையென்

றறியா ரதைநுகர்ந் தாற்கேட்ப னரனே
யறப்பயன் பொருட்குரி யார்க்கூட் டிடுவன்
அஃதறி யாமையி னந்தோ மூடர்
தன்னயங் கருதித் தகாதன செய்குவர்
கோளர் மொழிசெவிக் கொண்டிக லாடுவர்
வைத லடித்தல் வழிப்பறித் திடுதல்
பொய்சொலல் கோட்சொலல் புறணி மொழிதரல்
படாப்பழி போடல் பற்றைப் பிரித்திடல்
களவாடல் சூதாடல் கட்குடித் தாடல்
தீவைத்தல் வஞ்சித்தல் செய்வினை செய்தல்
கணக்கழி வாற்றல் காமித்தல் கோறல்
மதிமயக் கிடுதல் மாறாட்டஞ் செய்தல்
இப்படிப் பலவா யெழும்புது வழக்கே
யிவைபெரும் பாலுமுன் பெழாதவல் வழக்கே
பலமொழி யாற்படி பலவாப் பிரிதலின்
பலகுலத் தாலினம் பலவாப் பிரிதலின்
பலகுரு வான்மதம் பலவாப் பிரிதலின்
பிரித்தமை யாற்றம் பிழைப்பாதல் காண்பிறர்
இரையொழுக் கத்தா லிவண்முத லிடைகடை
யுண்மை பொறாதிவ ருட்குழப் படிக்கு
வழிகாட்ட வதுபற்றி வழக்குவென் றிடறோற்ற
லழகிதாய்த் தம்ம வஃதொரு பாலாக
கரையாளர் சொல்லைக் கடவாப் பழங்குடி
யிடத்திலித் தகைவழக் கெழுவதே யின்றே
வீம்பச்சம் வருவாய் வேண்டுதல் கேண்மை
கொண்டுபொய்ச் சான்று கூறா ருயர்ந்தோர்
புதுவழக் கெழுச்சியைப் பொருநற் குணர்த்தினர்

(ந சஎஅ) அந்நாள்,

செங்கோ லரசுக்குச் செவியுங்கண் ணாகலின்
வேண்டியுள் வைத்து மெய்யா ராய்வான்
ஏற்றவே டங்கொண் டிரவூர் சுற்றின
னாதலின் முதுகுடி யாட்சி நிலைத்ததே
பொய்ச்சான் றினர்குடி யரசவை புகாவழித்
தீர்ப்பருள் சட்டந் திறம்பெற லாய்த்தே
கைக்கூலி வாங்குநர் கால்களும் வழிவழி
வேந்தவை யேறொணா விதியுண் டாய்த்தே
யடங்கினர் மேலுமே லவரிதாற் றினரெனக்
குடிலநூ லோர்குழீஇக் குயிற்றினர் சிலவே
யவர்வரா தவர்தம் மடிமையாந் தமிழரை
யேவவெத் தனையோ விவர்ந்தன வம்ம
வழக்கெலாஞ் செல்வரால் வருவன வாகலின்
குடிக்கட் டழிக்கவுங் குறும்புசெய் தாரே
யறிவுடை மேலோ ரதற்கிடங் கொடுத்திலர்
ஆயினுங் குடிப்பொரு ளாவுள விறைப்பொருட்
குரித்தின்மை குடிக்கவ ருண்டாக்கி னாரே
யரசொடு குடியிகல் வான்பிறி வாக்கினு
மரசறி வுயர்ந்துள னாகலி னாலே
குடிநடு நின்றுசெங் கோல்புரி வானே
யாதலின் முதிதொடிங் கயர்புது வதுங்கலந்
தெல்லா ரிடத்து மெழூமூன் றவாவழி
வழக்கவை யவரவர் மரபைக் காட்டுமே

(௩கூ௫ா௨) மூன்றனுள்,

மண்பற்றி யுண்டாம் வழக்குகள் சிலவவை
யிருநிலந் தோட்ட மிருப்பிட முன்னிட்டுப்
பாரி லெழும்புமண் பற்றிய வழக்கே
யாண்டு தொறும்பொழி யழித்தொருச் சாணிலன்

புன்செயி னன்செயிற் பூத்தொறும் வரப்பழித்
திருவிர னிலன்கவர்ந் திகன்றெழு வாரே
வேலி யருகில் வித்திடு வார்மர
மாயிற் றோட்டத் தடிப்பரப் பிடங்கொள்வர்
மனைவே லிச்சுவர் மாட்டடிப் படைபோட்டுக்
காலஞ் செலவதைக் கணக்காக் காட்டிக்
கரம்புவ ராளில் காலத் தடிப்படை
தட்டகப் பைகொடு தனித்தரி வாரே
யிவைகொண் டடுத்துளா ரிகன்றெழு வாரே
தம்மனைக் கோணல் சமப்படக் கூட்டுவ
ரயன்மனைக் கோணற் கவர்வழி காட்டிலர்
மனக்கோண லாயினு மனைக்கோண லாகாதென்
றாக்கந் தமக்காக்க வயலாக்கம் போக்குவர்
பக்கத்தர் நடைவழிப் பாலுரித் துண்டென்பர்
தந்நடை வழியவர் தமக்குரித் தின்றென்பர்
மற்றவ ரிலாநாளின் மனைவேலி கோலுவர்
பொதுச்சுவர் தமதாப் புகலுவர் மிஞ்சிடின்
இடமிலார்க் கில்லதி னிசைக்கவொட் டாரே
யுரக்கிடங் கயற்சுவ ரோரத்துத் தொடுவர்
முழத்தைக் கூட்டி முறிசெய்து வைப்பர்
முழஞ்சொலா தயன்மனை முறியாக்க முன்னிற்ப
ரவைகொ டவர்மக்க ளாற்றுவ ரடிபிடி
யிங்ஙனம் பிரட்டுருட் டியற்றிப் பலவழி
மண்பறித் தவர்பெறு மக்கட் கருள்வா
ருவர்பெறு மக்களு மூர்மண் பறித்துண்ப
ரிவையற னறிவில ரியற்றுபுன் செயலே
யறப்பகை யாமிவர் குடியழி குடியே
யொருவரொன் றனைச்செயி னொருவரூர்க் கோதுவர்

கரையாளர் மூப்பர் கடாயதைத் தீர்ப்பர்
வாயா டிகளின் வழிப்பட் டோரம்
பேசிலர் நடப்புப் பெரிதுணர் மேலோர்
தோற்றவர் பொய்ச்சான்றுத் துணைகொ டரசவை
யேறியும் வெல்வதிங் கிவர்தர லாய்த்தே
யேழை யழுங்கணீ ரெனுங்கூர் வாளாற்
பொய்ச்சான் றினர்குடி பொன்றுத றிடமே
(௩௫௪௨) யிதன்மேல்,
நல்லார்நல் லாரொடு நயந்துற வாடுவ
ராண்களாண் மாரோ டளவளா யிருப்ப
ராண்மார்க் களவிலா ரறிமுகத் தவர்தோழ
ருளாரவ ராண்களோ டுரையாடல் வெளியில்
அவர்களைப் பெண்மா ரறிவதே யின்றே
யயலாண்க ளோடுரை யாடமின் மார்வரா
ரயன்மின்க ளோடுரை யாடில ரறிஞர்
பிறரெவர் வரினுமாண் பிள்ளைமா ரின்றேற்
போய்ப்பின் வரனாடிப் போய்வரு வாரே
யொக்கன்முச் சுற்றமு முறின்மின்க ளுட்செல்வ
ராண்மார் வெளிக்கூடத் தமர்வா ரக்கா
லிருப்பினுந் தவன்வெளி யேகினு மில்லுள
முதல்வி வெளிவந்து முகம னாடி
நலனுசாய்ச் சென்றாக்க னாட்டு வழக்கே
முதுகுடி வழக்கிம் முறைநடை பெறலால்
பெண்பற்றி வழக்கெழல் பெரிதுமிங் கின்றே
யறநெறி யிதுகடந் தாரிடை வழக்கெழும்
அடைந்ததன் மனைவைத் தயன்மனை வீழ்மடர்
தாய்மக ளுடன்பிறந் தவர்பிற வீழ்தரின்
மனையவ ளுடன்றோற்றம் மாமிகட் பிறர்வீழின்

தம்மனங் கொதித்தன தழைக்குமென் றறியார்
பேதைகட் கழிவாற்றிப் பெருங்கேடு செய்வ
ரவரே தங்குடிக் கழிவுதே டினரே
யழிவு வெளிப்படி னவள்வெளி யேற்றுவர்
வலியார் மகளெனின் மகளுடன் கவர்ந்தோ
னூர்விட் டோடி யொளித்துயிர் வாழ்வன்
மற்றவன் மனைமக்கள் மற்றவ னிறந்ததாக்
கடன்செய் திருப்பிற் காலங் கழிப்ப
ரம்முறை செயாவிடி னழிகுடி யவர்குடி
யழிநடை யினத்தா லகற்றப் படுமே
சேயவ ளிறந்ததாகச் செய்கடன் செய்தலி
னுயிரொடு செத்த வொருத்தியைப் பற்றினோன்
மணந்துகொள் சிறுகுடி வலானே லவனை
மணஞ்செய வவள்கொடு வருவழக் கெழுமே
தன்னினத் தவனெனிற் றானு மவளுந்
தள்ளப் பட்டுத் தனியகன் றிருப்பர்
அவன்பொருள் ஞாதிகட் கன்னே யாகலி
னூரைவிட் டிருவரு மோடிப் போகலின்
ஞாதிகள் பொருள்கொண்டு னடாத்த னடாத்துவர்
அயலின னாகி யவனினக் கட்டின்
வழிப்பட் டொருத்தியை வைப்பாக் கொடுமூப்பிற்
றள்ளிடிற் செலவுக்குத் தானெழும் வழக்கே
கடைசியை யுயரினக் காளைசேர்ந் தானென
வழக்கெழி னவனையூர் வரித்துநீக் கிடுமே
கடையர் கொடுபோயக் காளைக் கவளை
மணப்பித்துச் சேரியின் வாழ்வரு ளுவரே
மகளிர்க்கு மதுவே வழக்கா கும்மே
யுயர்ந்தோர் முதுவழக் கொரீஇமாக்க ளானமைக்

கொழூங்கொரீஇ யின்னுமாங் கூர்வது சான்றே
யெக்குடி நிலைதிறம் பிடினு நடுநிலை
திறம்பா தூருமன் செங்கோலு நிற்குங்
காரிகை மார்கற்புங் காவலுந் துணைநிற்கும்
பெண்பற்றி வழக்கிங்குப் பெரிதெழ லின்றே

(ந௫கசூ) இப்பால்

அறிமடர் பேரவா வாலே யடிக்கடி
யிரைந்துபொன் பற்றி யெழுதரும் வழக்கே
ஞாதிகட் சார்பொரு ணத்துவார்த் தடுத்திட
கைமையி னாட்சி கவர்வார்த் தடுத்திட
சாமகள் பூண்பொரு டராரிடைப் பெற்றிட
உடன்பிறந் தோர்பங் கொளித்ததைப் பெற்றிட
கூலி கொடாரிடைக் கூலியைப் பெற்றிட
உடம்பிடி வழிப்படார்க் குணர்த்தறப் பொருள்பெற
தம்பொரு ளெனும்பிறர்த் தடுத்தப் பொருள்பெற
வஞ்சித் தடைந்தாரை வருத்திப் பொருள்பெற
அடைக்கலங் கவர்தற் கவாவினார் பாற்பெற
வாங்கித் தராவகை மறைத்தவர் பாற்பெற
கொடுத்ததை யின்றெனக் கூறுவோர் பாற்பெற
ஒப்பிப் பொருடரா ருழியதை வாங்கிட
யறப்பொருள் கவர்ந்தாரை யடர்த்து வாங்கிட
யடையோலைப் பொருடரா தவரிடை வாங்கிட
வாரம் பிரித்தலில் வருங்கலாந் தீர்த்திட
வணிகர் கூட்டில் வருகலாந் தீர்த்திட
களவாடி னாரைக் கடிந்து சிறையிட
அளவு நிறைகுறைப் பாரைச் சிறையிட
பொய்முறி யாக்கும் புரட்டரைச் சிறையிட
இவ்விரு பதுவிதத் தெழும்பொருள் பற்றிய

வழக்கிவை யொவ்வொன்றில் வகுப்புச் சிலவுள
வருவழக் கினையும் வருபவர் தமையு
மிருபாற் சான்றின ரியல்புமா ராய்ந்து
பக்கத் தறிஞர் பாலு மறைந்துசாய்த்
தாமொரு பாற்சா யாதுநடு நின்று
செங்கோன்மை பேணித் தீர்த்திட்டுக்
(ரு௬உ௬) கடவு ளருள்பெறல் கடனற சவைக்கே.

## ய௬. இனக்குழப்ப வெழுச்சி

எண்பானா னூறா யிரயோனி பேதத்து
மொன்பானூ றாயிர முளபேத மக்கள்
ஒன்றே குலமு மொருவனே தெய்வமு
மென்றே யுணர்த்தி யிறையாக்கி வைத்தமை
பழம்பதி யாகிய பாண்டித் தமிழ்நூல்
வழக்கி லென்றும் வழங்க லுண்டே
யுலக வழக்கினு முளதது முதிதே
தமிழகத் தொழுங்கொரீஇத் தணந்துள முப்பால்
யிடைபுறங் கடையா வியம்பப் படுமே
ஒழுங்கது பேணிடு முயர்ந்தோர் முதல்வர்
முதலிடை புறங்கடை மொழிநாற் பாலரும்
மூத்தோ ரிளைஞர் முறைநண்பர் முறையிலா
நண்பரி லிருந்து நடைபே ணுவரே
வழிவழித் தொடர்பா வருமுது வழக்கிது
சிறிதொழுங் கொரீயதிற் றிரிந்தவர் நிற்பப்
பெரிதொழுங் கொரீஇயினர் பிறநா டடைந்தன
ரவர்மீண் டிவண்வரு மந்நா டொடுத்துப்
புதுப்புதுப் புதுமைகள் பூத்தலுந் திரிதலுங்
கெடுதலு மீண்டுங் கிளர்தலு நடைபெறுந்

தமிழக மதினாளுந் தலையிட லின்றே
வடபுலத் திருந்தது வரத்தொடங் கிற்றே
யாதலி னின்றை யாயிரப் புரளிக்
காலநடை யென்றுட் கலங்கினர் மேலோர்
முத்தமி ழரசரு முதுமை மறந்தெழீஇக்
குடிலர் புதுமைகைக் கொண்டு சிறந்தனர்
(ரு சுரு உ) அக்காலத்துச்,
சிறுகுடி தந்நிலை திரிந்ததி னவர்பா
லழிநடை தலைவிரித் தாடலு மாய்த்தே
யதுகண் டந்தண ரரசர் வணிகர்
வேளாள ரென்றுள மேலோர் குடிநான்கும்
ஒழுங்கு பேணி யொடுங்கிக் கிடந்தன
நடுக்குடி பதினெட்டு நலூஉமாக்க ளைங்குடி
புறக்குடி யிரண்டெனப் புகன்மூன்றி னையைந்து
பழந்தமிழ்க் குடியிரு பத்தொன்ப தாமாக
ஒன்வொன்றிற் பிரிவற் றுளகிளை சிலவே
(ரு சுசு உ) இவர்களில்,
நற்பாண் டியினுறை நாட்டா ரைவர்
மால்சோ ணாட்டுறை மானாட்ட ரைவர்
நாகனூர் மூணா நாட்டா ரைவர்
இம்முப் பிரிவா யிருப்பரைவ் வகைக்கொல்லர்
வெட்டுத் துறையர்நெய் வேலியர் முசிரியர்
நழுந்தூ ரார்முத னாலா விடங்களி
லிருந்துவாழ் கொல்ல ரெலாருந் தமிழர்
தமிழகஞ் செழிப்பதித் தக்கோர் செயலால்
அயனாட் டவர்க்கிவ ராசிரி யோராய்
மகத வினைஞரு மராட்டக் கம்மரு
மவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்

தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை
யெனமணி மேகலை யியம்பிய வாறே
பலவவ ரறியப் படிப்பித் தனரே
யவர்புரி வினைசில வறிந்தன ரிவரே
கூர்ச்சரச் சிற்பராற் கோசலோ வியரால்
வற்ச நாட்டுக்கம் மாளரான் மெச்சிடப்
பட்டன ரிதுபழம் பதியாந் தமிழகப்
பிறப்பால் வந்த பேறெனச் சிலர்தேர்ந்து
வாழ்வார் சிலர்புது வழிப்பட லானார்
படினும் வடவர்ப் பற்றில ரிவரே
யறிவ ரிவர்தமி ழகவொழு கயர்த்தனர்
வடமொழி யறிவின் மயங்கிநிற் றலினால்
மிகுசுர தச்சன் விசுவ கர்மனின்
அசுர கச்ச னாகிய மயனின்
அரக்கர் தச்ச னாகிய வயனின்
பரவணி கொடுவரப் பார்ப்பா ராயின
ரொருகா லிவர்தொன்மை யுணர்ந்துயர் வாரே
யிவர்பதி னெண்குடி யினிலைவ் வகைக்குடி
யிவர்திரி புறினொழுங் கெலாந்திரி தருமே
யிவர்மனம் போலவிவரியல்கேட்டு
யிவர்மனம் தீர்ப்பது மன்கட னாமே

(ரு.சாகூசு) இதன் மேல்,

மால்வேண் டற்கா வழுதியுய்த் திடப்போய்
மேனா ளுயர்கா விரிப்பூம் பட்டினத்
திருந்த வணிக ரிடங்கடல் கொளுமென
முன்பறிந் தூர்விட முனைத்தன ரொருகா
லஃதறிந் தானமா லாற்றடை வருமெனக்

குறித்தன ரிராவழிக் கொண்டனர் நடந்தா
ரிவர்நடு மண்டலத் தினர்காசுக் காரர்
வடம்பர் சோழியர் வக்கா மணியார்
மஞ்சப் புத்தூரர் வகையா றாகுவர்
அறிவுய ரிவர்தமி ழகவொழு கயர்த்தன
ராயினுஞ் சைவ வறிவயர்த் திலரே
தமிழக வொழுகு தனைக்கைக் கொளுநாள்
தமிழக வணிகர்க்குச் சமன்பெறு வாரே
யதுவரை யிவர்வழக் கரசிவர் மனம்போற்
கேட்டுத் தீர்ப்பதிற் கீழ்மை வராதே

(ருஎகஉ) இப்பால்,
நிலமானங் காக்கு நெய்தற் பார்ப்பா
ராகிய சாலிய ரறவாழி யந்தணன்
றமிழக வொழுகுஞ் சைவமும் பேணுவ
ராயினு வடநாட் டவரியா மென்ப
ரெனினுந் தமிழரொ டிவரொத்து வாழ்வர்

(ருஎகஙு) தமிழ் நாட்டில்,
இகற்சார்ந்து பல்லவர்க் கிறைதராப் புரவலர்க்
ககம்படி யாதுநின் றடல்காட்டி யரனருட்
செயலோர்ந்து கொடுப்பித்த திருநெறி வல்லார்
அந்நாட் சேர னாணைகொண் டொருகுழாம்
வல்லியத் திருந்தெழீஇ வந்துபல் லவர்க்குத்
துணையா யிகலஞ்சச் சூறைவிளை யாடி
யோட்டிய கள்ளத் துயர்நாக நாடர்
மறங்காட்டி யெதிர்த்து வாட்டிமுன் னின்று
பகையை விரட்டிப் பல்லவ நாடு
காத்த வீரக் கழலணி மறவர்
இவணொரு காலத் தினிதொத் துழைத்த
விறலுயர் மூவகை வீரமுடை யாருந்

தமிழுஞ் சைவமுந் தமதெனக் கொள்வார்
உலகிய னிறுவதற்கு முறுதுணை யாவார்
பராமுகந் தீர்ந்திவர் பழந்தமி ழொழுகாய்ந்
தயலுற வொரீஇத்தம தறிவாற்ற லுணர்நாள்
தமிழக முதுநெறி தனிச்சிறந் திடுமே
யித்தகை மூவர்வழக் கியல்பறிந் தரசன்
வழக்குத் தீர்த்தன் மரபா கும்மே
(௩௭௩௮) இவர் நிற்க,
மராட்டிய ராந்திரர் வயம்பெறு நாயகர்
அரசபா ளையர்க ளடற்கன் னடியர்
முதலிய புறநாட்டு முதல்வர் சிலரும்
கோமுட் டிகண்முதற் கூறு வணிகரும்
உயரிய கவரைய ரொருவகைக் குயவர்
முதலிய தொழிலாள முதல்வர் சிலரும்
*தமிழகங் குடியேறிச் சார்ந்துறைந் தனரே
யவரவர் கட்டினை யறிந்தவர் மகிழ்வான்
குரிசி லவைதீர்ப்புக் கூறுதன் மரபே
பெரிதறி வுயரிவர் பெரும்பாலுந் தமிழக
வழக்கைத் தழீஇயே வாழ்வோ ராவார்
சிறிது வேற்றுமை திகழ்தர லுண்டெனுங்
கேட்டுத் தீர்ப்பது கேடின் றன்றே
யிடையினக் குழப்ப வெழுச்சிக் கமைதிசெய்
வானவ ரவர்க்கிசை வாற்றத் தமிழகத்
தரசவைச் சட்டமீ தாய்த்தாய்த் தமைதியே
முத்தமி ழகத்து முது நெறி
(௩௭௫௯) பேணுதற் கொருமை பெறிதுநற் றுணையே.

---

★ தமிழகங் குடியேறிச் சார்ந்துறைந் தனரே யென்றது:- முற்காலத்தில் புறநாட்டினர் சிலர் இங்கு வணிகம் முதலிய பல காரணங்களைக் கொண்டுவந்து வாழ்ந்தமையைக் குறித்ததெனவறிக.

### உ ௰. தீர்ப்பு முறை

ஓங்குந் தமிழக வொழுக்க நெறியினும்
வழக்கு நெறியினும் வழீஇய வம்பரை
நெறிப்படுத் திடநடு நிலைநின்று நாடி
வாய்மைய ரின்புற வழுவினர் துன்புற
வரசாணைஃ தீர்ப்பென் றறையப் படுமே
யதுபொருட் பறியு மரியமெய் காவலுங்
குட்டையின் மாட்டலுங் கோல்கொண் டடித்தலுந்
துறுகிட்டி போடலுந் துருக்க மேற்றலுந்
தொழிற்படுத் திடலுந் தூரத் துய்த்தலுந்
தரந்தரம் பிழைக்குத் தக்கவா றாமே
யொப்ப வொடுக்கி யுயர்த்துந் தமிழகம்
மேனடுக் கீழ்புற வேற்றுமைப் பால்கள்
படியொழுக் கம்பற்றிப் பயிலினுந்
(ருளளௗ) தீர்ப்பருண் முறைசமன் செயனடு நிலையே.

### உ க. ஒற்றுமைநயம்

படைக்குந் தலைநாட் படைத்த மக்க
ளனைவரு முழுமுத லருண்முத் தமிழ்மறை
யோதவு மொழுகவு முரித்துடை யவரே
யோரினத் தவரெனு முணர்வுடை யவரா
யொருவருக் கொருவ ருற்ற துணைவராய்
மணபேத முணாப்பேத மாறிநீத் திருப்பினுஞ்
சைவம் பேணத் தமிழை வளர்க்க
வெல்லாக் குடியு மியைந்துற லறிவே
நாளு முழைத்தாக்கு நயம்பொது வாமே
யின்னண மொருப்பட் டிருக்க விடாமல்

பற்பல வினபேதம் பகுத்துயர் பிழிபு
பேசிப் பிரித்தது பிறர்கட்டு நூலே
பிரிவு பலமுன் பிரித்தவ ராரென
வாய்வா ரேற்றமி ழகத்த ரிலையெனல்
வெள்ளிடை மலைபோல் விளங்குமிக் கோர்க்கே
யப்பிரி விங்கிய லாவழி யொதுக்கிக்
குடிப்பிறப் பியலுறு கொள்கைக் கிடரின்றித்
தொன்னெறி காப்பவர் தொல்லற வோரே
கடல்கொண்ட தொழியக் கனற்கூட்ட லெத்தனை
யெத்தனை நூல்கொள்ளை யிடப்பட் டொழிந்தன
வெத்தனை கைத்தொழி லிழந்தன தமிழக
மஃதறிந் தெனுவிழித் தயல்வழிப் படாதினித்
தமிழகத் தொற்றுமை தனையாக்கி வாழ்மின்
திருவரு ளம்மைகைச் செல்வராய் வாழ்மின்
**தமிழக வொழுகெனு மக்கட் சட்ட**
**மிதுமூ வாயிரத் தெண்ணூ றடிகளை**
**யிருபத் தொருபாவி னேற்றெழுந் ததுவே**
**வகுத்த தொழுக்க வழக்கப் பாகம்**
**வழக்குத் தீர்ப்பினி வகுப்பாம்**
**(ௗகூஅ௱) சிவாரூட சித்தன் செய்ததிது வாழ்கவே.**

முற்றிற்று



நூலின் கருத்துக்களும் தலைப்புகளும் திருக்குறளுடன் பல்வேறு இடங்களில் ஒத்துள்ளன. ஒரு சில இடங்களில் திருக்குறளை அப்படியே எடுத்து ஆசிரியர் நூலில் கையாண்டுள்ளார். 'மறுமணப்புதுமை' என்ற தலைப்பில்

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்ற குறள் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது.

குப்பைக் குவியலாய் – ஈரப் பதனுடையதாய்க் – கூட்டித் தள்ளும் நிலையில் இருந்த இந்நூலை மீட்டெடுத்து முதுமுனைவர் இரா. இளங்குமரன் அவர்கள் நூலாக்கம் செய்ததற்கு இலக்கிய உலகம் அவருக்கு என்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு (2010) நம் பாரதிதாசன் பல்கலைக்கழகம் 'அருட்சுனைஞர்' என்ற பட்டயப் படிப்பினைத் தொடங்கியுள்ளது. இதனை அறிந்த முதுமுனைவர் இரா. இளங்குமரன் அவர்கள் 'தமிழக ஒழுகு' எனும் மக்கட்சட்டம் அழிந்துவிடாமல் மறுபதிப்பு செய்ய வேண்டும் என்று என்னிடம் கேட்டுக்கொண்டார்.

எண்பது ஆண்டுகளுக்குமுன் பதிப்பிக்கப்பட்ட இத்தகு அரிய நூலைத் தற்போது நான் துணைவேந்தராக உள்ள கால கட்டத்தில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் வெளியிடுவதைப் பெருமையாகக் கருதுகின்றேன்.

இந்நூலில் முதுமுனைவர் இரா. இளங்குமரன் பல்வேறு கோணங்களில் அணுகி நுணுகி ஆய்வுரை வழங்கியுள்ளார். அவர்களுக்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

**(மு. பொன்னவைக்கோ)**
துணைவேந்தர்